விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 04 ஞாயிற்றுக்கிழமை (18.05.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 150

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## உலகெங்கிலும் உணர்வுகள் தகிக்க


# உயிர் பலி கொண்ட உச்சநாள் மே - 18

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்காலில் ஒரு குறுகிய பகுதிக்குள் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு போர் முடிவுக்கு கொண்டுவரப் பட்ட மே - 18 ஆம் திகதியின் 5 ஆம் ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.

23 ஆம் பக்கம் பார்க்க....

## மன்மோகன் சிங் இராஜினாமா !



(புதுடில்லி)

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட படுதோல்வியைத் தொடர்ந்து மன்மோகன் சிங் தலைமையிலான மத்திய அமைச்சரவை இராஜினாமாச் செய்துள்ளது.

நேற்று சனிக்கிழமை மதியம் புதுடில்லியில் கூடிய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் கடைசி அமைச்சரவை கூட்டத்தில் இந்த

23 ஆம் பக்கம் பார்க்க....

## ஆட்சி மாறினாலும் புலிகளுக்கு தடை

(கொழும்பு)

இந்தியாவின் காங்கிரஸ் அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக விதித்த 5 ஆண்டு தடை நீடிப்பை, பாரதீய ஜனதா கட்சியின் அரசாங்கம் மாற்றாது என தூதரக வட்டாரங்களின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனிநாட்டை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணக்கரு விடுதலைப புலிகளின் ஈழ ஆதரவாளர்களின் மத்தியில் மாறவில்லை என இந்திய

23 ஆம் பக்கம் பார்க்க....

## முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல்

(யாழ்ப்பாணம்)

இறுதிப் போரில் பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் நிகழ்வு நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இதேவேளை போரில் உயிரிழந்த வீர மறவர்களுக்கும் அக வணக்கம் செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட தமிழ் உறவுகளுக்கும் தமிழர் இறையாண்மையை காக்கவென களமாடிய மாவீரர்களுக்குமென மக்களுடன் சேர்ந்து வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரனால் நேற்று அகவணக்கம் செலுத்தப்பட்டது.


20 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினரின் தடைகளுக்கு மத்தியில மேற்படி நிகழ்வு நடைபெற்றதுடன், நிகழ்வு அனைத்தும் இராணுவ புலனாய்வாளர்களாலும் இராணுவத்தினராலும் காணொளிபதிவாக்கமும் செய்யப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, யுத்தத்தால் தமது தாய்

23 ஆம் பக்கம் பார்க்க....

## எமனானது டிப்பர்

### இளம் குடும்பஸ்தர் துடிதுடித்துப் பலி




(யாழ்ப்பாணம்)

வேகக்கட்டுப்பாட்டையிழந்த டிப்பர் வாகனம் மோட்டார் சைக்கிளை மோதித்தள்ளியதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உடல் நசுங்கி துடிதுடித்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் சங்கானை 7 ஆம் கட்டை வீதியிலுள்ள கூடத்து

23 ஆம் பக்கம் பார்க்க....

## மோடிக்கு பெரும் வரவேற்பு



(புதுடில்லி)

எதிர்வரும் 20ஆம் திகதி இடம் பெறவுள்ள பாரதிய ஜனதா கட்சியின் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் நரேந்திர மோடி பிரதமராக அதிகாரபூர்வமாக தெரிவு செய்யப்படுவார் என அக்கட்சியின் தலைவர் ராஜ்நாத் சிங் அறிவித்துள்ளார்.

குஜராத்தில் இருந்து நேற்று சனிக்கிழமை காலை புதுடில்லியைச் சென்றடைந்த நரேந்திர மோடியை பல்லாயிரக்கணக்கான பாரதிய ஜனதாக் கட்சியின் தொண்டர்கள் விமான நிலையத்தில் வரவேற்றனர்.

இதனைத் தொடர்ந்து பாரதிய ஜனதாக் கட்சியின் தலைமையகத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்ற நரேந்திர மோடியின் வாகனத் தொடரணிக்கு வழியெங்கிலும் அக்கட்சியின் தொண்டர்கள் வாழ்த்துத் தெரிவித்தனர். இந்த

24 ஆம் பக்கம் பார்க்க....

## எத்தனை தடைகள் வரினும் எம்மவர்களை நினைவு கூருவோம்

### அடக்குமுறையை எதிர்த்து சிவாஜிலிங்கம் குரல்

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் நினைவு தினமான இன்று யுத்தத்தின்போது உயிரிழந்த போராளிகள், பொதுமககள் அனைவரினையும் நினைவு கூருமாறு வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.





பண்டத்தரிப்பு பிரான்பற்று கட்டுவரைப் புளியடி அம்மன் ஆலயத்தில் வேள்வி என்னும் பேரால் நூற்றுக்கணக்கான ஆட்டுக்கிடாய்கள் நேற்றுக் காலை வெட்டிச் சாய்க்கப்பட்டுள்ளன.

இதேவேளை எததனை தடைகள் வரினும் எம்மவர்கள் நினைவு கூரப்படல் வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

23 ஆம் பக்கம் பார்க்க....

SISIL WORLD
வழங்கும் அதிவிசேட சலுகைகள்
30% வரை விசேட விலைக் கழிவு
விசேட பரிசுப்பொருட்கள்
50 SISIL COOL REWARDS
இவ் விசேட சலுகை மே 31 வரை மட்டுமே
இல-106,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம் 021-2219291
இல-125,கே.கே.எஸ் வீதி,சுன்னாகம் 021-2242335
இல-17/3,கண்டி வீதி,கிளிநொச்சி 021-2283755
(C-7398)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிவாஜிலிங்கத்தை சுற்றி சி.ஐ.டியினர் கண்காணிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் ஆளும்கட்சி உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த போது அங்கு பிரசன்னமான புலனாய்வாளர்களினால் சிறிது நேரம் பதற்றம் நிலவியிருந்தது.

இச்சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்றது. நேற்றைய தினம் ஊடக சந்திப்பு இடம்பெற்றுக் கொண்டிருக்க அங்கு வந்த 10 இற்கும் மேற்பட்ட புலனாய்வாளர்கள் மற்றும் பொலிஸார் சிவாஜிலிங்கம் வந்த வாகனச் சாரதியை விசாரித்ததோடு சுமார் அரை மணித்தியாலம் வரை காத்து நின்றனர்.

இதனால் ஊடகவியலாளர்கள் உட்பட அனைவரும் ஊடக அமையத்தினை விட்டு வெளியேற முடியாமல் திணறினர்.

ஊடக சந்திப்பு முடிவுற்றதும் சிவாஜிலிங்கத்தின் வாகனத்தினை புலனாய்வாளர்கள் பின் தொடர்ந்து சென்றனர்.

தன்னை வல்வெட்டித்துறையிலிருந்து புலனாய்வாளர்கள் பின் தொடர்ந்து வருவதாகவும் இவர்களின் அச்சுறுத்தல்களிற்கு நான் அடிபணியமாட்டேன் கைது செய்தாலும் அடக்கு முறைக்கு தலைவணங்க மாட்டேன் என்றார் அவர். (செ-4-6)

## உயர்தர மாணவர்களுக்கு கல்விச் செயலமர்வுகள்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. உயர்தர வகுப்பில் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கான விசேட செயலமர்வை யாழ். கல்வி வலயம் கோட்ட ரீதியாக ஒழுங்கு செய்துள்ளது.

இதற்கமைய நல்லூர் கோட்ட பாடசாலைகளுக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் யாழ். கோட்ட பாடசாலைகளுக்கு யா/ வைத்தீஸ்வரா கல்லூரியிலும் கோப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கு யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் காலை 8.30 மணி முதல் ஒரு மணிவரை நடைபெறவுள்ளன.

நாளையும் நாளை மறுதினமும் அரசியல் விஞ்ஞானமும் 21,22 ஆம் திகதிகளில் வரலாறும் 26,27 ஆம் திகதிகளில் புவியியலும் அவ்வப் பாடசாலைகளில் நடைபெறவுள்ளன.

இதன்போது மாணவர்களுக்கான மாதிரி வினாக் கையேடுகளும் வழங்கப்படவுள்ளது.

எனவே பாடசாலை அதிபர்கள், மாணவர்களை இச் செயலமர்வில் பங்கு பெற செய்யுமாறு யாழ். கல்வி வலயம் கேட்டுள்ளது. (அ)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 321 0815
021 567 1532

### ஹோட்டல் பிள்ளையார் இன் இல் விசேடமாக
தயாரிக்கப்பட்ட இந்திய சமையல் கலை வல்லுநர்களின் கை வண்ணத்தில்.
1. பூரி
2. சப்பாத்தி
3. ரவாதோசை
4. வெங்காய தோசை
100/= மட்டும்
(சி-7387)
இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

### தொடர்ந்தும் உங்கள் சேவையில்....
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
☛ கடிதங்கள் ☛ அன்பளிப்பு பொருட்கள் ☛ உடுபுடவைகள்
☛ CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
(C-7382)
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
WESTERN UNION MONEY TRANSFER

### ONLINE VISA
UK Student visa Italy, Germany, France, Swiss with work (அனைத்து நாடுகளிற்கும்) Permit Midle East (மத்திய கிழக்கு நாடுகள்)
*நீங்கள் விரும்பிய நாட்டில் கால்பதித்ததும் கட்டணம் செலுத்தலாம்.
Sanjay :- 0772947696
(6412)

### கார் விற்பனைக்கு
KA XXXX தொடரிலக்கமுடைய Nissan sonny N16 கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு:-0777105205
(C-7405)

### மலிவு விலையில் விற்பனைக்கு
கொங்கிறீட் கல் அரியும் இயந்திரம் மிக மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0774366704

### வாடகைக்கு
வேம்படி பாடசாலைக்கு முன்பாக வீடு பகுதியாக வாடகைக்குண்டு.
தொடர்பு:-0778965367
(6411)

### காணி விற்பனைக்கு
புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணத்தில் 2 பரப்பும் 6 குளியும் கொண்ட காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:-0779251054
(6396)

### கோழிக்குஞ்சு விற்பனை
Lanka Farm இன் உயர்தர ஊர்க்கோழிக் குஞ்சான கினிராஜ் தற்போது யாழ்ப்பாணத்தில் கிடைக்கும். விலை 70/-,வாத்து 150/-
தொடர்பு: 0777531344, 0774669669
திருநெல்வேலி (6410)

### சித்தர்களின் வர்மக்கலையின் மருத்துவ பயிற்சிகள்
சித்தர்களின் வர்மக் கலையின் மருத்துவ பயிற்சி மூலம் தமக்கும் தம்மை சார்ந்தவர்களுக்கும் மருந்து மாத்திரைகள் அற்ற முறையில் அளிக்கக்கூடிய ஓர் கலையாகும்.
இதற்கான அறிமுக விளக்கம் இன்று பி.ப 4.30 மணிக்கு தியாகி அறக்கட்டளை நிலையத்தில் (TCT Super market) நடைபெறும்.

### வீட்டுப் பணிப்பெண் தேவை
நகரின் மத்தியில் வசிக்கும் குடும்பத்திற்கு வீட்டு வேலைகள் மற்றும் பிள்ளைகளைப் பராமரிக்கக்கூடிய பணிப்பெண் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(C-7396)
தொடர்புகளுக்கு: 0717775111

### வர்த்தக நிறுவனங்கள் வாடகைக்கு
நகரின் மத்தியில் (Stanley Road, மணிக்கூட்டு வீதி) வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளக்கூடிய வகையில் 3500 சதுரஅடி, 7500 சதுர அடி விஸ்தீரணமுள்ள வாகன தரிப்பிட வசதிகளுடன் கூடிய வர்த்தக நிறுவனங்கள் வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0717775111

### Vacancies
எமது யாழ்.நகர் மற்றும் சாவகச்சேரி கிளைகளில் கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணியிடங்களுக்கு தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
Reception Duty Officer - Female
Officer in-charge - Male
Instructor for C, C++, Java - Male / Female
Lecturer for AUTO CAD (Part time) - Male / Female
Instructor for Multimedia - Male / Female
விண்ணப்பதாரிகள் சுயவிபரக்கோவையை மின்னஞ்சல் (e-mail) மூலமாக 22-05-2014ம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.
HND & Degree முடித்தவர்கள் Officer Incharge பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.
ASIAN COMPUTER EDUCATION
e-mail : asianedu@dialogsl.net

### சூரிய மின்கலத்துடன் மின்குமிழ், மின்கலம் மற்றும் தேவையான உதிரிகளுடன் ரூ: 9000.00
**Solar Panel, battery and light** (10W Panel,7A UPS battery, Charge Controller, 9W LED bulb) **Rs. 9000.00**

| | |
|---|---|
| 50W Solar Panel | Rs.10,000 |
| 10A Charge controller | Rs. 2500.00 |
| 9W LED bulb 12V DC | Rs. 1100.00 |

தொடர்புகளிற்கு: யாழ்ப்பாணம் 0779655381
கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு - 0779410825
சின்னக்கண்ணன் கட்டட பொருட்கள் வாணிபம் விசுவமடு
(6405)


### 31-ம் நாள் நினைவஞ்சலி

கடந்த 18.04.2014 அன்று சிவபதமடைந்த

அமரர் தெய்வேந்திரம் - பத்மினி (செல்வம்)



பிறப்பு 08.04.1962 இறப்பு 18.04.2014

அவர்களின் 31-ம் நாள் நினைவு தினம் இன்று (18.05.2014) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் சகோதரியின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

10-ம் வட்டாரம் புதுக்குடியிருப்பு
(சகோதரியின் இல்லம்)
(பவுன்)
தொ.இல: 0770308732.

இங்ஙனம்
மகன்
தெ.மதனருபன் (சுதா)
பிரான்ஸ்.
(சி-7394)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



சிவ.ஆறுமுகசாமி நந்தினி (B.A)

27.04.2014 ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலைமாணி பட்டம் பெற்ற திரு. திருமதி சிவ.ஆறுமுகம் (J.P) ஜெகதா தம்பதியினரின் புத்திரி நந்தினி (B.A) அவர்களை மனதார பாராட்டி நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்
உற்றார், உறவினர், நண்பர்கள்
(6413)

### முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

18.05.2014

மதுஷ்சன்

கொக்குவில் மேற்கு கேணியடியைச் சேர்ந்த பிரமாதீசன்-கவிதா தம்பதிகளின் இளைய புதல்வன் மதுஷ்சன் அவர்களின் பிறந்தநாளான இன்று, அவர் சகல செல்வங்களும் பெற்று சிறப்புற வாழ்த்துகின்றோம்



- குடும்பத்தினர்
(C-7406)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களை கட்டுப்படுத்தாவிட்டால் அவர்கள் இங்கு விவசாயமும் செய்வார்கள்

## சம்மேளன தலைவர் ஞா.பொன்னம்பலம்

இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய தொழில் நடவடிக்கைகளை தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளவில்லையென்றால் எதிர்காலத்தில் இலங்கையில் இந்தியர்கள் வந்து விவசாயம் செய்வார்கள். அந்தநிலை விரைவில் உருவாகும் என்று யாழ்.மாவட்ட கிராமிய கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவரும் இந்திய மீனவர்களுடனான பேச்சுவார்த்தையில் பங்கு கொண்டவருமான ஞா.பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அவர் தெரிவிக்கையில்,

இலங்கை கடற்பரப்பிற்குள் இன்னும் 5 ஆண்டுகளுக்கு மீன்பிடிக்க அனுமதிக்குமாறும் அதன்பின்னர் இழுவைப்படகுகளுக்கு பதிலாக வேறு தொழில் நடவடிக்கையை தாம் மேற்கொள்வதாகவும் ஆனால் இலங்கை கடற்பரப்பிற்குள் வந்து மீன்பிடிக்க வேண்டாம் என்று இந்திய மீனவர்களை தடுக்கவேண்டாம் என்றும் 5 வருடங்கள் காலக்கெடு கொடுக்காவிட்டாலும் 3 வருடங்களாவது தருமாறு இந்திய மீனவர் சங்கப்பிரதிநிதிகள் எம்மிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இருப்பினும் நாம் அவர்களின் கோரிக்கையை முற்றுமுழுதாக நிராகரித்துள்ளோம். அதேவேளை நீண்டகாலப்போரினால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை மீண்டும் மேம்படுத்திக்கொள்ளப்போராடும் வடக்கு மக்களின் வாழ்வாதாரத்திற்கு தடைபோடாதீர்கள் என்றும் கோரிக்கை விடுத்துள்ளோம்.

ஆனால் தாங்கள் எங்களின் தொப்புள் கொடியுறவினர் என்றும் அண்ணன், தம்பி போன்றவர் என்றும் கூறும் இந்திய மீனவர்கள் எங்களின் நலனிலும், எங்களின் வாழ்வாதாரத்தையும் கருத்தில் எடுக்காமல் தங்களின் நலனிலேயே அதிக அக்கறை காட்டுகின்றனர். இந்நிலையில் தான் 5 ஆண்டுகளுக்கு இலங்கை கடற்பரப்பில் குறிப்பாக வடபகுதி கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதி கோருகின்றனர். அதேவேளை இலங்கை அரசினால் தடை விதிக்கப்பட்டுள்ள இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி மீன்பிடிக்க அனுமதிக்குமாறு கேட்கின்றனர்.

தற்போது எமது கடல் வளத்தை அழித்து வரும் இந்திய மீனவர்களை தடுக்கவில்லையென்றால் எதிர்காலத்தில் இந்திய விவசாயிகள் இங்கு வந்து விவசாயம் செய்யப் போகின்றோம் என்று அத்துமீறும் நிலை ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-6)


29 ஆண்டு கால தனித்துவமிக்க ஒரு பயிற்சி நிலையம்

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....

யாழ். கலாலயா

பயிற்சியகம்



விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.

(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)





மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன.

✌ கேக் ஐசிங், உணவு தயாரித்தல், ✌ Hair Dressing & Styling



(கூந்தல் வடிவமைப்புகளும் முடிசீராக்குதலும்)

✌ முக அழகுக் கலை (Facials)

✌ Pedicure,Manicure (கைகள், கால்கள், விரல்கள்,நகங்கள் அழகு படுத்துதல்)

Nail art ✌மெஹந்தி போடுதல்

✌ இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம் வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 23-05-2014

வெள்ளி காலை 9.30 மணி

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 25-05-2014

ஞாயிறு காலை 9.30 மணி

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.

✌ (B)பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள் கிழமை நாட்களில் மட்டும் நடைபெறும்.

-இயக்குநர்-

Guru


# மரண அறிவித்தல்



### திருமதி தர்ஷினி குமாரதாசன்

(முன்னாள் ஆசிரியை, கொழும்பு சைவ மங்கையர் கல்லூரி)

யாழ். சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் யாழ். நல்லூர் மற்றும் மெல்போர்ன், அவுஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தர்ஷினி குமாரதாசன் அவர்கள் 14.05.2014 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் அமரர் C.K. இலங்கராஜா- குலமணி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும், நெடுந்தீவைச் சேர்ந்த அமரர்கள் பண்டிதர் நா.கந்தையா-ஸ்ரீபத்மா தம்பதிகளின் சிரேஷ்ட மருமகளும், அகில இலங்கைக் கம்பன் கழக ஸ்தாபக செயலரும், யாழ். பல்கலைக்கழக முன்னாள் தொழில்நுட்ப உத்தியோகத்தருமான குமாரதாசனின் அன்பு மனைவியும், பிரசன்னாவின் ஆருயிர் அன்னையுமாவார்.

அன்னார் ராஜினி, நிரஞ்ஜினி (மெல்போர்ன்), ரவிராஜ் (U.K) கம்பவாரிதி ஜெயராஜ் ஆகியோரின் அன்புத் தங்கையும், சந்திரகுமார் (U.K), ஜெயதாசன் (Norway) , கண்ணதாசன் (Canada), செந்தூரன் (U.S.A) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிவா னந்தன் (கொழும்பு), சந்திரசிவம் (மெல்போர்ன்), மயூரவரதன் (U.K),மேனகா (U.K), மல்லிகா (Norway), சித்திரா (Canada), ராஜி (U.S.A) ஆகியோரின் திருமண உறவுச் சகோதரியும் மயூரன், ரேணுகா,கௌரிசங்கர், சுரேன், சுரேஸ் ஆகியோரின் அன்புச் சித்தியும், ஸ்ரெபனி, டனி, அஞ்சலி, சிந்துஜா, அஸ்வின், கவின் ஆகியோரின் அன்புப்பெரியம்மாவும், மதனரூபன், கிருஷாந்தன், காயத்திரி, பவித்திரா , Dr. சாம்பவி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அமரரின் இறுதிக் கிரியைகள் Springvale Botanical Cemetery, 600 Princes Hwy, Springvale VIC 3171 இல் அமைந்துள்ள Boyds Chapel இல் 18.05.2014 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று உறவுகளின் அஞ்சலிக்குப்பின் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டு கின்றோம்.

**தொடர்புகளுக்கு**

**குமாரதாசன்:-613-98010039/0411846320**

**பிரசன்னா :-0403493981**

**ரவிராஜ் (U.K.)44-208-6441940**

**ஜெயராஜ் (இலங்கை):-94 112-360525**

**நிரஞ்ஜினி சந்திரசிவம்:- 613-98864378**

(சி-7395)

# இராசி பலன்

**18.05.2014**

(வைகாசி 04, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
சதுர்த்தசி மாலை 5.57 மணிவரை
பூராடம் பின்னிரவு 2.47 மணிவரை
இராகுகாலம் 4.23-5.53 மணிவரை
சுபநேரம் 8.53-10.23 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்,
சித்தாமிர்தம்

வளவன்

**மேடம்** — எடுத்த காரியத்தில் இருந்த தடைகள் அகலும், பூர்வீகச் சொத்துக்களால் கணிசமான ஆதாயமுண்டு, குடும்ப உறுப்பினர்களிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும்.

**இடபம்** — மனக்குழப்பங்கள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, பிறருக்காக பொறுப்புச் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்** — உற்றார் உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கடகம்** — வழிபாட்டால் சிறப்பினைக் காணலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், போசன சுகமுண்டு, பாக்கிகள் வசூலாகும்.

**சிம்மம்** — சிந்தனை ஆற்றலால் சிறப் படைவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், வியாபாரத்தை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**கன்னி** — பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், கல்வியில் ஆர்வம் கூடும், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது பயணங்களால் பலனுண்டு, சுப செலவுகள் கூடும்.

**துலாம்** — எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க சகோதர வழியில் உதவிகள் கிடைக்கலாம், இனிய அனுபவங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வாக்கு மேன் மையுண்டு, பணவரவு திருப்தி தரும்.

**விருச்சிகம்** — உறவினர் வருகையுண்டு, குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், சுப விரயங்கள் கூடும், எடுத்த காரியங்கள் கைகூடும், தொழில் நலன்கருதி புதிய உத்தியோக [illegible]

**தனுசு** — செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சிலருடைய நம்பிக்கையைப் பெறுவதற்காக இரவு பகலாக பாடுபடுவீர்கள், ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது.

**மகரம்** — வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், சிறு விரயங்கள் கூடும், அலைச்சல்கள் அதிகரிக்கும் நாள், சோம்பலால் சில காரியங்கள் தாமதமாகலாம்.

**கும்பம்** — தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**மீனம்** — உற்சாகம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், மற்றவர்களின் ஒத்தாசை கிடைக்கப் பெறுவீர்கள், முயற்சி பலிதமுண்டு, தொழில் வளர்ச்சி கருதி முக்கிய முடிபுகள் எடுப்பீர்கள், கௌரவமான நாள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறப்பாக செயற்படும் முதியோர் சங்கங்கள் தெரிவு செய்யப்படும்

(மானிப்பாய்)


ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு சிறந்த முதியோர் சங்கத்தை தெரிவு செய்யும் நடவடிக்கைகளை சமூக சேவைகள் அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

இதன்பிரகாரம் அமைச்சின் முதியோர்களுக்கான தேசிய செயலக பணிப்பாளர் சுவிந்த எஸ்.சிங்கப்புலி இதற்கான சுற்று நிருபத்தை மாகாண சமூக சேவைகள் பணிப்பாளர்கள், மாவட்ட செயலர்கள், பிரதேச செயலர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதன்டிப்படையில் மாவட்ட ரீதியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற முதியோர் சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டு, அந்தந்த மாவட்டச் செயலர்களினால் மாகாண சமூக சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.

மாகாண பணிப்பாளரால் மாகாண மட்டத்தில் முதல் 3 இடங்களை பெறும் சங்கங்களை தேசிய ரீதியிலான போட்டிக்கு அனுப்பி வைப்பர்.


முதியோர் நலன்பேணலில் சிறப்பாக செயற்படும் முதியோர் சங்கங்களை ஊக்குவிக்கும் நோக்கில் இத்திட்டம் செயற்படுத்தப்படுவதாக செயலகத்தின் பணிப்பாளர் தெரிவித்தார். (2-23)




நன்றி-ஐலண்ட்

# கோவில் வாகன சாலைக்குள் இராணுவ வாகனம் புகுந்தது

## 4 இலட்சத்திற்கு மேற்பட்ட பொருட்கள் சேதம்



(யாழ்ப்பாணம்)

மிக வேகமாக சென்ற இராணுவ பவல் வாகனம் வேகக்கட்டுப்பாட்டை யிழந்து கோவிலின் வாகன சாலைக்குள் புகுந்து பல இலட்சம் பெறுமதியான சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

இச் சம்பவம் நேற்று அதிகாலை 4 மணியளவில் யாழ்ப்பாணம் கே.கே.எஸ்.வீதி நாச்சிமார் கோவிலடியில் இடம்பெற்றுள்ளது.

இதில் நாச்சிமார் கோவிலின் வாகனசாலைக்குள்ளேயே இராணுவத்தின் பவல் வாகனம் புகுந்து பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களையே சேதமாக்கியுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து கே.கே.எஸ் படைமுகாமிற்கு நேற்று அதிகாலை படையினரை ஏற்றிக்கொண்டு இராணுவ பவல் வாகனமொன்று சென்றுள்ளது.

இதன்போது குறித்த பவல் வாகனத்தின் சாரதி வாகனத்தை மிக வேகமாக செலுத்தி சென்றுள்ளார்.

இதனால் நாச்சிமார் கோவில்பகுதியிலுள்ள திருப்பத்தில் சாரதியால் வாகனத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போகவே இராணுவ வாகனம் கோவிலின் வாகன சாலையை உடைத்து கொண்டு உள் நுழைந்துள்ளது.

இதில் குறித்த பவல் வாகனத்தின் முன்பகுதி முழுவதும் வாகன சாலையின் உட்புறம் உள்நுழைந்துள்ளது.

இவ் விபத்து சம்பவத்தில் ஆலயத்தின் சுவாமி வாகனங்கள் உட்பட பெறுமதியான பொருட்கள் கடும் சேதத்திற்குள்ளாகின.

மேலும் பவல் வாகனத்தின் சாரதி உட்பட இருவர் படுகாயமடைந்த நிலையிலும் நால்வர் சிறு காயங்களுக்குள்ளான நிலையிலும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்தில் சுமார் 4 இலட்சம் ரூபாய்க்கும் மேற்பட்ட பெறுமதியான பொருட்கள் சேதமடைந்துள்ளது என கணக்கிடப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான விசாரணைகளை யாழ். பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-4)

# சண்முகம் வீதி புனரமைப்பு வேலைகள் ஆரம்பம்

(மானிப்பாய்)

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட சண்முகம் வீதியின் புனரமைப்பு பணிகள் நேற்று முன்தினம் சாவகச்சேரி நகரசபையின் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளையினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நகரசபையின் 2013 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கப்பட்டு நிதியிலிருந்து சுமார் 7 மில்லியன் ரூபா செலவில் குறித்த வீதி புனரமைக்கப்படவுள்ளதாக நகர சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

குறித்த வீதியானது அண்மையில் நகர சபையினால் நடத்தப்பட்ட பொதுமக்கள் கலந்துரையாடலில் அவர்களது முன்னுரிமை அடிப்படையில் இந்த வீதியை புனரமைத்து தருமாறு கேட்டுக் கொண்டமைக்கு இணங்க இவ்வீதி புனரமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-23)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினரால் காரை நகர் பிரதேசத்தை சேர்ந்த வறுமை கோட்டின் கீழ் வாழும் குடும்பமொன்றுக்கு அண்மையில் உதவிகள் வழங்கப்பட்ட போது...

# சி.க.கூ.சங்கத்தின் பொதுக்கூட்டம்

(பருத்தித்துறை)

புலோலி மேற்கு சதாவதானி கதிரேவேற்பிள்ளை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் 27 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மேற்படி கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் சங்கத்தலைவர் செ.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் செ.இலகுநாதன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

மேலும் சிறப்பு விருந்தினர்களாக கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் அ.தயாளன், வடமராட்சி நல்லொழுக்கத்தலைவர் பா.ரகுநாதன், வடமராட்சி லயன்ஸ் கழக தலைவர் ச.துங்கராஜா, சதாவதானி சனசமூகத் தலைவர் ப.சிவசுப்ரமணியம், பிராந்திய சபை உபதலைவர் பெ.ஆறுமுகநாதன், புலோலி மத்தி கிராம அலுவலர் சீ.லம்போதரன் மற்றும் புலோலி மேற்கு கிராம அலுவலர் இ.புலேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து இந்நிகழ்வின் விசேடமாக தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை கௌரவித்தல், முதியோர் கௌரவித்தல் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (அ-...)




# மாட்டுவண்டி சவாரி போட்டி

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை விவசாயிகளினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி இடம் பெறவுள்ளது.

இப்போட்டியானது இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கொத்துத்துறை சவாரித்திடலில் நடைபெறும். (2)

# சுரண்டல்களுக்கு மத்தியில் மக்கள் வாழ்கின்றனர்

## சிறிதரன் எம்.பி தெரிவிப்பு

(மானிப்பாய்)

எமது மண்ணின் சகல கிராமங்களும் ஆக்கிரமிப்புக்கும், சுரண்டல்களுக்கும் நெருக்கு வாரங்களுக்கும் உட்பட்டுள்ளன என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கடந்த கால யுத்தத்தின்போது இடப்பெயர்வு உள்ளிட்ட பல்வேறு துன்பங்களை அனுபவித்து வரும் யாழ் மாவட்ட குரும்பசிட்டி கிராம மக்களை அண்மையில் நேரில் சென்று சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

அரசாங்கம் பல்வேறு வழிகளிலும் தமிழர்களை அடக்குவதில் குறியாக இருக்கின்றது.

சட்டத்திற்கு உட்பட்ட வகையில் இந்த நாட்டில் பலவிடயங்கள் நடைமுறைப்படுத்தப்படாமல் எதேச்சதிகார மான முறையில் அரங்கேறுகின்றன.

இந்நிலையில் இந்த நாடு மிக [illegible] படுகின்றது.

ஆனால் இந்த நிலைகளில் இருந்து மீண்டு எழவேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்.

நாம் எமது பூர்வீக நிலத்தை பறிகொடுக்கின்றவர்களாக வாழ நிர்ப்பந்திக்கப்படுகின்றோம்.

இந்த வரலாற்று செய்தி இன்று சர்வதேசத்தின் மனதில் இடம்பிடித்திருக்கின்றது. இந்த வேளைக்காகத்தான் இங்கு எமது உறவுகளால் பல்வேறு காலகட்டத்தில் அர்ப்பணிப்புகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே அது வீண்போகாது என்ற நம்பிக்கை எமக்கு மிக அவசியம்.

நீங்கள் உரிமையோடு தெரிவித்திருக்கும் பிரச்சினைகள் தேவைகள் முன்னுரிமைப்படுத்தப்படும். சம்பந்தப்பட்ட அதிகார தரப்புக்களோடு உங்கள் தேவைகள் குறைபாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு தீர்வு காணப்படும்.

குறிப்பாக படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலங்கள் தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-23)

# காணி தொடர்பான இலவச சட்ட ஆலோசனை

வலி.கிழக்கு பிரதேச சபையால் நீர்வேலி வடக்கு கிராம முன்னேற்ற சங்க மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் வரை காணி தொடர்பான இலவச சட்ட ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன.

இதில் யாழ். நீதிமன்ற சட்ட உதவி ஆணைக்குழு சட்ட வல்லுநரால் காணி தொடர்பான இலவச சட்ட ஆலோசனைகளும் மற்றும் குடும்ப வன்முறை ,தாபரிப்பு, விவாகரத்து, பிறப்பு, விவாக, இறப்பு சான்றிதழ் தொடர்பான ஆலோசனைகளும் சட்ட உதவியும் வழங்க ஏற்பாடாகியுள்ளது.

எனவே இதில் பொதுமக்கள் கலந்து கொள்ளுமாறு வலி கிழக்கு பிரதேச சபை நீர்வேலி உப அலுவலக பொறுப்பதிகாரி தி.தவராஜா கேட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுலாக்க நரேந்திரமோடியின் அரசை நாம் வலியுறுத்தவேண்டும்

## ஜனநாயக மக்கள் முன்னணி தெரிவிப்பு

**இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்றுங்கள், 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல் செய்யுங்கள், தமிழ் பயங்கரவாதத்தை அழிக்கிறோம் என்ற போர்வையில் சீன-பாகிஸ்தானிய ஊடுருவல்களுக்கு இடம் கொடாதீர்கள். இந்த மூன்று நிலைப்பாடுகளுக்கும் இலங்கை அரசை உடன்பட செய்யுங்கள் என்று புதிய பாரத பிரதமர் நரேந்திர மோடியை நோக்கி இலங்கையில் இருந்து ஒரே குரலில் தமிழ் தலைமைகள் சொல்லவேண்டும். இதற்கு புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகள் இடையூறு விளைவிக்க கூடாது என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.**

முன்னணியின் வாராந்த அரசியல் ஆய்வுக் கூட்டம் நேற்று கட்சி தலைமையகத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

பாரதீய ஜனதா கட்சியின் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி பெரும்பான்மையுடன் டில்லியில் ஆட்சியை அமைக்கின்றது. தமிழகத்தில் முதல்வர் ஜெயலலிதா அபார வெற்றியடைந்துள்ளார். எனினும் உடனடியாக அ.தி.மு.கவின் ஆதரவு மோடி அரசுக்கு தேவைப்படாது.

தமிழகத்தில் வெற்றி பெற்றுள்ள பா.ம.கவின் அன்புமணி, பா.ஜ.கவின் இராதாகிருஷ்ணன் ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலும் அமைச்சரவையில் இடம்பெறலாம் என்பது ஒரு ஆறுதலாக இருக்கலாம்.

புதிய மோடி அரசுடனான உறவை வலுப்படுத்தும் முயற்சிகளை, இலங்கை அரசு உடனடியாக தொடங்கிவிட்டது.

உண் மையில் நடைபெற்ற தேர்தலுக்கு முன்னரே இம்முயற்சிகள் ஆரம்பமாகின. இது வரவேற்க கூடியதுதான். அண்டை நாடுகள் இரண்டும் நல்லுறவு கொள்வது இரு நாட்டு மக்களுக்கும் நன்மை தரக்கூடியதாகும்.

ஆனால், இலங்கை தேசிய இனப் பிரச்சினை தொடர்பில் இந்திய அரசுடன் ஏற்படுத்திக்கொண்ட கடப்பாடுகளை தவிர்த்துவிட்டு, தனது இனவாத அரசியல் நோக்கங்களை நிறைவேற்றி கொள்ளும் முகமாக மாத்திரம் இந்திய உறவை பயன்படுத்த இலங்கை அரசு முயற்சிக்கிறது.

இதை இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந் நிலையில், நரேந்திர மோடி நிர்வாகத்துடன் வறட்டு பிடிவாதம் பிடித்து அல்லது வறட்டு சமிக்ஞையை காட்டி, இலங்கை அரசின் கபட நோக்கத்தை சுலபமாக்கி, அதன் மூலம் இப்போது இருப்பதையும் இழக்கச் செய்யும் முனைப்புகளில் தவறுதலாக கூட தமிழர் தரப்புகள் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளக் கூடாது.

இவ்விடயத்தில் புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகள் தன்னிச்சையான இடையூறுகளை விளைவிக்க கூடாது. இந்திய அரசுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட இருநாட்டு ஒப்பந்தத்தை மையபுள்ளியாக கொண்டு இலங்கை இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை காணும்படி நரேந்திர மோடி அரசாங்கத்தை நாம் வலியுறுத்த வேண்டும்.

இலங்கைக்கு வந்து சென்ற அப்போதைய இந்திய நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர், எதிர்கால அமைச்சர் சுஷ்மா சுவராஜ்டனான பேச்சுவார்த்தையின் போது, அவர் 13ஆம் திருத்தத்தை மைய புள்ளியாக கருதியதை நான் அவதானித்தேன்.

13ஆம் திருத்தத்தின் அடிப்படையிலான முழுமையான அதிகாரங்களை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணசபைகளுக்கு வழங்கப்படும் சூழல் உருவாக்கப்பட வேண்டும். இதற்கு இந்திய மத்திய அரசின் ஒத்துழைப்பு அத்தியாவசியமாகும்.

இந் நாட்டில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எந்தவித அதிகாரப் பகிர்வும் வழங்கப்படக் கூடாது என கூக்குரல் இடும் இனவாதிகளை நாம் ராஜதந்திரரீதியாகவும், ஜனநாயகரீதியாகவும் தோற்கடிக்க வேண்டும். இவர்கள் அடிக்கின்ற தாளங்களுக்கு நாம் ஆட முடியாது. காத்திரமான செயற்பாட்டுக்கான நேரம் இப்போது வந்து விட்டது.

இந்நோக்கில் தமிழ் தேசிய கூட்டமைப்பு முன்னெடுப்புகளை எடுக்குமானால், அதற்கு ஜனநாயக மக்கள் முன்னணி முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கும்.

இந்த செயற்பாட்டில் இலங்கை வாழ் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களின் பெருவாரியான வாக்குகளை பெற்றுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும். (2)

# லண்டன் முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலியில் முக்கிய இராஜதந்திரிகள் பங்கேற்பர்

லண்டனில் நடைபெறவுள்ள முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலி நிகழ்வுகளில் முக்கிய இராஜதந்திரிகள் பலர் பங்கேற்கவுள்ளதாக ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் நடைபெற்ற இறு திப் போரின் போது முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான தமிழ் பொது மக்கள் உயிரிழந்தார்கள்.

இதனை நினைவுகூரும் வகையில் லண்டனில் இன்று முள்ளி வாய்க்கால் நினைவு தினம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரித்தானிய அரசாங்கம் இந்த நிகழ்வுக்கு அனுமதி வழங்கியது தொடர்பில் இலங்கை தனது கடுமையான கண்டனத்தை தெரிவித்திருந்தது.

இந்நிலையில் நடைபெறும் நினைவஞ்சலி நிகழ்வுகளில் தென்னாபிரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் மற்றும் ஐரோப்பிய யூனியனின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் றொபேர்ட் ஆகியோர் உட்பட முக்கிய இராஜதந்திரிகள் கலந்து கொள்ளவுள்ளதாக குறித்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் இந்த நிகழ்வின் போது தமிழீழ அரசாங்கத்தின் அடையாள அட்டையும் வழங்கப்பட வுள்ளதாகவும் அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# புலிச்சந்தேக நபர்கள் மாத்தறையில் கைது

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் இருவர் உள்ளிட்ட 20 சந்தேக நபர்கள் மாத்தறையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தறை நகரில் சந்தேகத்திற்கிடமான வகையில் சுற்றித் திரிந்த போது இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இரண்டு பேர் விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் என்று தெரியவந்துள்ளது.

ஏனையோர் மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பக்கட்ட விசாரணையின் போது மாத்தறை-நூபே இடையிலான நெடுஞ்சாலை நிர்மாணப் பணிகளில் ஒப்பந்தத் தொழிலாளர்களாக பணியாற்றுவது தெரியவந்துள்ளது.

எனினும் இவர்கள் விடுதலைப் புலிகளின் புதிய வலையமைப்பின் ஆலோசனையின் பேரில் உளவு நட்வடிக்கைகளுக்காக மாத்தறை வந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

யுத்த வெற்றி தொடர்பான அரசாங்க கொண்டாட்டங்கள் இன்று நடைபெறவுள்ளது. இதில் ஜனாதிபதி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிலையில் மாத்தறையில் 20 தமிழ் இளைஞர்களின் கைது சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாக [illegible] பத்திரிகை [illegible] (2)


இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

**மணமகள் தேவை**

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 34 .25 செவ் 7 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: O/L / விற்பனை முகாமையாளர்.
தொ.இ: B/3142

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மூலம் 1
கி.பா: 24 செவ் 12 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L / விமான நிலைய வேலை (சுவிஸ்)
தொ.இ: B/3143

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 3
கி.பா: 48
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L, BIT – Following / தபால் உத்தியோகத்தர்
தொ.இ: B/3147

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 2
கி.பா: 11 .75 செவ் 2 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: BA, உளவியல் சிறப்பு / சிறுவர் பாதுகாப்பு அதிகாரி
தொ.இ: B/3148

**மணமகன் தேவை**

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 1
கி.பா: 50 .75
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BSc / ஆசிரியர்
தொ.இ: G/3131

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 1
கி.பா: 21
உயரம்: 156 cm
தகைமை/தொழில்: A/L,Stenography
எதிர்பார்ப்பு: பெண் விவாகரத்தானவர்
தொ.இ: G/3134

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூசம் 2
கி.பா: 84 சூரி செவ் 8 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/3138

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கேட்டை 1
கி.பா: 22 .75 செவ் 2 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L / ஆசிரிய உதவியாளர்
எதிர்பார்ப்பு: PR உள்ளவர்கள் மட்டும்
தொ.இ: G/3139

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
[illegible] எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியுடன் விருந்துண்டு மகிழ்ந்தார் அமைச்சர் விமல்

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, கடந்த வாரங்களில் வெளிப்படாமல் இருந்து வந்த நிலையில், கொழும்பில் உள்ள விடுதியொன்றில் இடம் பெற்ற விருந்துபசாரம் ஒன்றில் ஜனாதிபதியை சந்தித்துள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள வோட்டர் ஹெச்ஜில் நேற்று முன் தினமிரவு நடைபெற்ற நிறுவனம் ஒன்றின் 70 ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட விருந்துபசாரத்தில் இந்த சந்திப்பு நிகழ்ந்தது.

அமைச்சர் வீரவன்ஸ, ஜனாதிபதியை வரவேற்றதுடன் இருவரும் படங்களுக்கு காட்சி கொடுத்தனர். இருவருக்கும் இடையில் பதற்றம் இருப்பதை அவதானிக்க முடியவில்லை.

அமைச்சர் வீரவன்ஸவுக்கு அடுத்ததாக அங்கு அமர்ந்திருந்த ஜனாதிபதி, மகிழ்ச்சியான மன நிலையில் காணப்பட்டார்.

தொலைக்காட்சி ஒன்றில் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற நேர்காணல் ஒன்றில் பங்கு பற்றி வீரவன்ஸ, அரசாங்கத்தை விமர்சித்திருந்ததுடன் ஜனாதிபதியின் நிர்வாகம் போலித்தனமானது என விமர்சித்திருந்தார்.

இந் நிலையில், வர்த்தக நிறுவனம் ஒன்றின் நிகழ்வில் இருக்கும் இடையில் என்ன பேசப்பட்டது என்பது இரகசியமானது.


ஜனாதிபதியின் பணிக்குழுவின் தலைமை அதிகாரி காமினி செனரத், சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரியந்த ஜெயரத்ன, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகியோரும் ஜனாதிபதியும் வீரவன்ஸவும் அமர்ந்திருந்த அதே மேசையில் அமர்ந்திருந்தனர்.

ஜனாதிபதி செயலகத்தில் இருந்து எடுக்கப்படும் அழைப்புகளுக்கு அமைச்சர் விமல் வீரவன்ஸ, பதிலளிப்பதில்லை என ஜனாதிபதி சில அமைச்சர்களிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

அத்துடன் அமைச்சர் வீரவன்ஸ, சில அமைச்சரவை கூட்டங்களையும் தவிர்த்திருந்தார். ஆளும் கட்சியின் மே தினக் கூட்டத்திலும் அவர் பங்கேற்கவில்லை. (2)

# அடுத்த தேர்தலிலும் காங்கிரஸ் தோற்கும்

## உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் தெரிவிப்பு



விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடையை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீடித்து இந்திய அரசு உத்தரவிட்டுள்ளது. 1967 ஆம் ஆண்டின் சட்டவிரோத நடவடிக்கைகள் தடைச்சட்டத்தின் அடிப்படையில் இந்த நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து இந்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் விடுதலைப் புலிகளை சட்டவிரோத அமைப்பு என்று கூறியுள்ளதாக தமிழோசை செய்தி வெளியிட்டுள்ளது.

இதுவரை காலம் விடுதலைப் புலிகள் மீதான தடை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை தொடர்ச்சியாக நீடிக்கப்பட்டுள்ளது. ஆனால் கடந்த புதன்கிழமை முதல் அமுலுக்கு வரும் இந்த உத்தரவில் விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடை இந்த முறை ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டித்து இந்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சி தலைமையிலான இந்திய அரசாங்கம் நடந்து முடிந்துள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பெரும் தோல்வியைச் சந்தித்து பதவி இழக்கும் என தேர்தல் கணிப்புகள் தெரிவித்துள்ள நிலையிலேயே விடுதலைப் புலிகள் மீதான தடை 5 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசு விடுதலைப்புலிகள் மீதான தடையை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டித்திருப்பது பழி வாங்கும் நடவடிக்கை என்றும் இதனால் அடுத்த தேர்தலிலும் காங்கிரஸ் தோற்கும் என்றும் உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் தெரி வித்துள்ளதாக தமிழோசை செய்தி வெளியிட்டுள்ளது. (2)

# மாணவர்களை துன்புறுத்தும் ஆசிரியர்களுக்கு தண்டனை

## கோருகிறது இலங்கை ஆசிரியர் சங்கம்

(கொழும்பு)


தவறிழைக்கும் மாணவர்களை ஆசிரியர்கள் கையாள வேண்டிய வழிமுறைகள் அடங்கிய சுற்றறிக்கையொன்றை வெளியிடுமாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், ஆசிரியர்களின் கவனயீனம் காரணமாக இவ்வருடத்தில் மாத்திரம் இரு மாணவர்களின் உயிர்கள் பறி போயுள்ளன. மேலும் பல மாணவர்கள் மனதளவில் உளைச்சல் களுக்கு உள்ளாகியுள் ளனர்" என்று கூறினார்.

மாணவர்களை கையாள வேண்டிய வழிமுறைகள் அடங்கிய சுற்றறிக்கையொன்று கடந்த 2005ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட போதிலும் அது தொடர்பில் ஆசிரியர்களுக்கோ அதிபர்களுக்கோ எவ்வித அறிவுறுத்தல்களும் வழங்கப்படவில்லை.

மேற்படி சுற்றறிக்கையில், மாணவர்களை கையாள வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள அதேவேளை, அவற்றையும் மீறி மாணவர்களை துன்புறுத்தும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் தண்டனைகள் தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்று ஸ்டாலின் கூறினார்.

பாடசாலை மாணவர்கள் செய்யும் தவறுகளை ஆசிரியர்கள் எவ்வாறு கையாள வேண்டும் என்பது தொடர்பான உரிய தெளிவுபடுத்தல்கள் வழங்கப்படுமாயின் தலைமயிரை வெட்டுதல், செருப்பு மாலை அணிவித்தல் உள்ளிட்ட மாணவர்களால் தாங்கிக்கொள்ள முடியாத தண்டனைகளை ஆசிரியர்கள் வழங்க மாட்டார்கள் என்று ஜோசப் ஸ்டாலின் மேலும் கூறினார். (2)



யாழ்ப்பாண கல்வி வலய பாடசாலைகளுக்கிடையில் அண்மையில் தமிழ் மொழித் திறன் போட்டிகள் நடைபெற்றன.

இதில் வாசிப்புத்திறன் போட்டியில் முதலாம் இடம்பெற்ற அச்சுவேலி ஆரம்பபாடசாலை தரம் 4 இல் கல்வி பயிலும் மாணவன் பி.சேயோனுக்கு பாடசாலை அதிபர் சான்றிதழ் வழங்கியதைப் படத்தில் காணலாம்.

(படம்:-மானிப்பாய் செய்தியாளர்)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 140 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 80 | 80 |
| தக்காளி | 160 | 140 | 130 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 | 40 |
| கோவா | 70 | 60 | 50 | 80 |
| கரட் | 80 | 100 | 90 | 100 |
| பூசணி | 40 | 50 | 50 | 60 |
| புடோல் | 60 | 60 | 50 | 60 |
| வாழைக்காய் | 30 | 30 | 30 | 100 |
| சின்ன வெங்காயம் | 110 | 120 | 100 | 100-120 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 80 | 80 |
| பாகற்காய் | 160 | 180 | 130 | 100 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | 40 | 40 | — | 60 |
| பயற்றங்காய் | 40 | 70 | 80 | 60 |
| லீக்ஸ் | 70 | 80 | 70 | 100 |
| பீற்றூட் | 40 | 50 | 40 | 60 |
| கறிமிளகாய் | — | 70 | 60 | 100 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 140 | 60 |
| போஞ்சி | 160 | 180 | — | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | — | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 150 | 140 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 15-45 | 40 | 40 | 20-30 |
| இராசவள்ளி | 80 | 120 | 100 | 80 |

# வெண்குஷ்ட நோய்த்தாக்கம் இலங்கையில் அதிகரிப்பு

கடந்த சில வருடங்களாக இலங்கையில் வெண்குஷ்ட நோய் பரவுவது குறிப்பிட்ட அளவு அதிகரித்து வருவதாகவும், மக்கள் இந்தநோய் குறித்து பொருட்படுத்தாமல் செயற்படுவதே இதற்கு முக்கிய காரணம் எனவும் சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள ஜப்பான் நிகபான் மன்ற தலைவர் யொஹி அசகாவுடன் சுகாதார அமைச்சில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இலங்கையில் இருந்து வெண்குஷ்ட நோயை ஒழிக்க தேவையான சகல உதவிகளையும் வழங்கத் தயாராக இருப்பதாக இதன்போது அசகா உறுதியளித்துள்ளார்.

இலங்கையில் வெண்குஷ்ட நோய் உயர்வடைந்து வரும் நிலையில், அது குறித்து மக்களுக்கு விழிப்பூட்டும் பல திட்டங்களை ஆரம்பித்திருப்பதாக குறிப்பிட்ட அமைச்சர் முன்னர் அடையாளம் காணப்படாத புதிய பகுதிகளில் இந்நோய் பரவியுள்ளதாக தெரிவித்தார்.

இலங்கையில் இலவச சுகாதார சேவையின் கீழ் வறியவர், செல்வந்தர் என்ற பேதமின்றி சகலருக்கும் சுகாதார வசதிகள் சமமாக வழங்கப்படுகிறது எனவும் அமைசசர் சுட்டிக்காட்டினார். (அ)

facebook. (f) பேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like (17)

லிங்கநாயகம் கேசவன்




வினோ குமார்




சபாபதி சர்மா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவுசெய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரேந்திரமோடியின் வெற்றி இந்திய உறவை வலுப்படுத்தும்

## உயர்ஸ்தானிகர் காரியவசம்

இந்திய மக்களவைத் தேர்தலில் நரேந்திர மோடி வெற்றிபெற்ற தன் மூலம் இலங்கை- இந்திய உறவுகள் மேலும் வலுப்படும் என இந்தியாவிற்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இந்திய மக்கள் இந்த தீர்மானமிக்க வெற்றியையும், காங்கிரஸ் கட்சியின் தோல்வியையும் முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவில் நரேந்திர மோடி தலைமையில் மிகவும் பலம்வாய்ந்த மத்திய அரசு உருவாகவுள்ளமை இலங்கைக்கு மகிழ்ச்சியளிப்பதாக பிரசாத் காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

பலமான மத்திய அரசு இருப்பது இலங்கையுடனான உறவுகளை பிரச்சினையின்றி தொடர்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமென எதிர்பார்ப்பதாக அவர் கூறியுள்ளார்.

பாரதீய ஜனதாக் கட்சி தனித்து ஆட்சியமைப்பதற்கு தேவையான ஆசனங்களை சுவீகரித்துள்ளதால், மத்திய அரசாங்கத்தை நிறுவுவதற்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராமின் ஆதரவைப் பெற வேண்டிய தேவை பாரதீய ஜனதாக் கட்சிக்கு இல்லையென இந்தியாவிற்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் மேலும் குறிப்பிட்டார். (2)

# அல்கொய்தாவுடன் தொடர்புடைய இலங்கை நபர் கைதானார்

(கொழும்பு)

இலங்கையர் ஒருவர் உள்ளிட்ட பயங்கரவாத சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருப்பதன் மூலம் இந்தியாவில் உள்ள வெளிநாட்டுத் துணைத் தூதரகங்கள் மீதான திட்டமிட்ட தாக்குதலொன்றை முறியடிப்பதில் மலேசிய புகித் அமான் விசேட கிளையின் பயங்கரவாத ஒழிப்புப்பிரிவு பெரிதும் உதவியுள்ளதாக மலேசிய ஆங்கில நாளிதழ் "த ஸ்டார்" தெரிவித்துள்ளது.

மேற்படி, இலங்கையர் மலேசிய கீபொங் நகரில் உள்ள வீடொன்றில் கடந்த புதனன்று தடுத்து வைக்கப்பட்டதாகவும் ஏனைய மூன்று சந்தேக நபர்களும் பயங்கரவாத ஒழிப்புப் பிரிவினர் வழங்கியிருந்த தகவலின் அடிப்படையில் சென்னையில் வைத்து இந்திய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டதாகவும் அது மேலும் குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அல் - கொய்தா அமைப்புடன் மறைமுகமாக தொடர்புகளை வைத்துள்ளதாக நம்பப்படும் குறித்த இலங்கையர் இலங்கையிலும் ஏனைய நாடுகளிலும் இடம்பெற்றிருந்த பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்ததன் பேரில், தேடப்பட்டு வருவோர் பட்டியலில் இடம் பிடித்துள்ளார்.

மலேசியாவுக்குள் நுழைவதற்கு போலியான கடவுச்சீட்டொன்றை பாவித்திருந்த அவர் வெளிநாட்டு மண்ணில் பல்வேறு தாக்குதல்களை நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் மலேசிய தாக்குதல் இலக்கொன்றாக இருக்கவேயில்லை. பிரஸ்தாப இலங்கையரை தாங்கள் கைது செய்துள்ளமையை ஊர்ஜிதப்படுத்திய பிரதி பொலிஸ்மா அதிபர் தாடுக் செரி மொஹித் பக்ரி ஸினின் இது பற்றி மேலும் குறிப்பிடுகையில், பிராந்தியத்திலும் சர்வதேச மட்டத்திலும் இடம் பெறக்கூடிய தாக்குதல்களை தடுத்து நிறுத்தும் பொருட்டு தாங்கள் வெளிநாட்டு முகவரமைப்புக்களுடன் தொடர்ந்தும் இணைந்து பணியாற்றப் போவதாகவும் தெரிவித்தார். (அ)


## நவீன முறையில் ஆயுர்வேத சிகிச்சை

யாழ்ப்பாண , இந்திய, கேரள ஆயுர்வேத சித்தமருத்துவ முறைகளை உள்ளடக்கிய சித்தமருத்துவத்தில் அதியுயர் தகைமையைக் கொண்ட சித்தமருத்துவர்களால் சிகிச்சையளிக்கப்படுகின்றது. குழந்தைகளில் ஏற்படும் சளி, வயிற்றோட்டம், இருமல், காய்ச்சல் போன்றவற்றிற்கு நோய் எதிர்ப்பு சக்தியைக் கொடுக்கக் கூடிய மூலிகை மருந்துகளால் நோய்வராது பாதுகாக்க சிகிச்சையளிக்கப்படுகின்றது.

முள்ளந்தண்டுப் பிரச்சினை, இருதய அடைப்பு போன்றவற்றிற்கு சத்திரசிகிச்சை செய்ய முடியாதவர்களுக்கு 3 மாத தொடர் சிகிச்சையில் பலன் பெறலாம். பாரிசவாதம், வாதநோய்கள், சோரியாசிஸ், மானசீகரோகம், சர்மவியாதிகள், ஞாபகசக்தி குறைவு, இளமையில் ஏற்படும் முதுமை, வெண்குஷ்டம், நாட்பட்ட இருமல், ஆஸ்துமா, வயிற்றுப்புண், கண்ரோகம் போன்றவற்றிற்கு சிறப்பாக சிகிச்சையளிக்கப்படுகிறது.

இவ்வைத்தியசாலையின் சிறப்பம்சம்:

1. நீங்கள் விரும்பிய நேரத்தில் சிகிச்சை பெறமுடியும், தங்கியிருக்க வேண்டிய அவசியமில்லை.
2. தங்குமிட வசதியுண்டு, பயிற்சி பெற்ற திரப்பிஸ்டுகள்
3. இந்தியா, இலங்கையில் உள்ள மருந்துகள் பாவனை
4. சித்த மருத்துவ நிபுணர்களின் ஆலோசனை, சிகிச்சை விரும்பிய வைத்தியர்களையும் அழைக்கும் வசதி உண்டு

Dr.G. Sritharan B.S.M.S. (SL), M.Phil (jaf.) Chief Physician & Managing Director

Dr.S. Anpuchelvy B.S.M.S. (SL), M.D. (India) Consultant Physician

**Herbal Health Care Centre, 65 K.K.S. Road, Kokuvil**

தினமும் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை வெளிநோயாளர் சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல.

021 222 2537, 0750413579,
0778201195, 0777110619

(6401)



## சுகவாழ்வுக்கான பயணம்

"தலையாரி"

இனப்பெருக்க, பாலியல் சுகாதாரம் தொடர்பான கல்வி, தகவல் ஆலோசனை மையம்.

"இனப்பெருக்க பாலியல் சுகாதாரம் தொடர்பான எந்தப் பிரச்சினைகளுக்கும் கொலையோ, தற்கொலையோ தீர்வல்ல."

இனப்பெருக்க பாலியல் சுகாதார ரீதியான பிரச்சினைகள் இருப்பதாக உணர்கிறீர்களா? எம்முடன் தொடர்பு கொண்டு உரிய ஆலோசனைகளைப் பெற்று ஆரோக்கியமான வாழ்வைத் தொடரலாம். உங்கள் இரகசியங்களை நாம் பாதுகாப்போம்.

T.P:- 021 221 7557
021 307 4618
Email :- crshjfhl@gmail.com (சி-7309)

அன்னசத்திரலேன்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.



## தொழில் வாய்ப்புக்கள்

உங்களுக்கு நிரந்தர தொழில் தேவையாயின் இன்றே தொடர்பு கொள்ளுங்கள். 17-50 வயது இருபாலாருக்கும் கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் தொழிற்சாலைகளில் (ஜேம்/கோடியல்/வாசனைத் திரவியம்/ சவர்க்காரம்/ டின்/ பிஸ்கட்/ தேங்காய் பால்மா மற்றும் பல தொழிற்சாலைகளில் உற்பத்தி, லேபல், பொதியிடல், தெரிவுக்கு ஆட்சேகரிப்பு சம்பளம் 18000/= 25000/= 35000/= உணவு, தங்குமிடம் சகாய விலைகளில் வருகை தரும் நாளிலே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படும். (சி-7392)

தொடர்பு: மது- 0770224156, திவ்யா- 0774312176



## வேலை வாய்ப்புக்கள்

கொழும்பை அண்மித்த பகுதிகளில் நிரந்தர வேலை வாய்ப்புகள் உற்பத்திப் பொருட்கள்/ விளையாட்டுப் பொருட்கள்/ வாசனைத் திரவியம்/உணவுப்பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கு 17-50 வயது ஆண், பெண் தேவை. 17000/= 28000/= 32000/= உணவு தங்குமிடம் சகாய விலைகளில் நண்பர்கள் குழுக்கள் ஒரே தொழிற்சாலைகளில் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு வெற்றிடம் உண்டு.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு:-
(சி-7391) 0778430179



## நிரந்தர தொழில்வாய்ப்பு

வருமானம் பிரச்சினையா??? தீர்க்க இதோ அரிய சந்தர்ப்பம் எம்மோடு இணையுங்கள் உடனடி நிரந்த தொழில் வாய்ப்பு. கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம்/ டொபி/ பிஸ்கட்/ கோடியல்/ நூடில்ஸ்/ கிளவுஸ்/ Paint/Pvc... போன்ற பல தொழிற்சாலைகளில் உற்பத்தி/ லேபல்/ பொதியிடல்/ களஞ்சியப் பிரிவுகளுக்கு 17-50 வயது ஆண், பெண் தேவை. சம்பளம் தொழில் அடிப்படையில் முதல் மாதம் 18000/=, 22000/= 02ம், 03ம் மாதம் 28000/=,32000/= உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் (நண்பர்கள்+ குழுக்கள்+ தம்பதியினர் ஒரே தொழிற்சாலையில்) வருகை அன்றே வேலை வாய்ப்பு.

(சி-7388) தொடர்புக்கு- 077 5561883



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சிவயோகம் செல்வராசா
(இளைப்பாறிய ஆசிரியை)





| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 31 | 07 |
| 10 | 06 |
| 1928 | 2012 |

(6395)

திதி:- 18.05.2014

அம்மா ஈராண்டு சென்றாலும்
எம் மனது ஆறவில்லை
உங்கள் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம் கண்ணீருடன்...

"சுபசதனம்"
சம்பியன் லேன், கொக்குவில் குடும்பத்தினர்




(6398)

அல்பா மிக்ஷர் தொழில் நிறுவனச் செயற்பாடுகளை S. குறிஞ்சிதரன் அவர்களின் (மாகாண முகாமையாளர் இலங்கை மத்திய வங்கி) ஒழுங்கமைப்பின் கீழ் பார்வையிடுவதற்காக வருகை தந்த இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் அவர்களை அல்பா மிக்ஷர் நிறுவன தொழிலதிபர் P.பாலமுருகன் கௌரவித்து வரவேற்பதையும் நிறுவன செயற்பாடுகளைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அ**ரிவாள், உலக்கை, உருட்டுக்கட்டை என சகலவித ஆட்கொல்லி ஆயுதங்களுடன் ஆட்கள் காத்திருக்க, வீட்டு வாசலைத் தாண்டினால், ஆள் காலி. முரட்டு வில்லன்களுடன் அப்பாவி ஹீரோ ஆடும் உள்ளே வெளியே ஆட்டமே வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்!

வீட்டுக்கு வந்த விருந்தாளி மனம் கோணாமல் உற்சாகமாக உபசரித்து வழி அனுப்புவது நாகி நீடு குடும்பத்தின் பாரம்பரியம். அந்த வீட்டுக்கு விருந்தாளியாகச் செல்கிறார் சந்தானம். தடபுடல் வரவேற்பு, அட்டகாச விருந்து என இரத்தினக் கம்பள உபசரிப்பு அளிக்கிறார் நாகி நீடு.

அப்போது தாங்கள் கொல்லத் துடிக்கும் பரம்பரைப் பகையாளிதான் சந்தானம் என்று நாகி நீடுவுக்கும், விருந்து முடிந்து வீட்டு வாசலைத் தாண்டியதும் தன்னைக் கொன்று விடுவார்கள் என்று சந்தானத்துக்கும் தெரிய வருகிறது. அந்த அரிவாள் கும்பலிடம் இருந்து அப்பாவி சந்தானம் தப்பிக்கிறாரா என்பதே வல்லவன் புல் சாகசம்!

தெலுங்கின் ஹிட் சினிமாவான மரியாதை ராமண்ணா படத்தை அப்படியே தமிழ்ப்படுத்தியிருக்கிறார் இயக்குநர் ஸ்ரீநாத். ஒரு வீடு, ஒரு பரம்பரைப் பகை என மிகச் சாதாரண ஒன்லைன். அதில், காமெடி மசாலா, குடும்ப டிராமா சேர்த்து சிரிக்கவும் ரசிக்கவும் வைத்திருக்கிறார்கள்.


அட... ஹீரோ சந்தானம் இவ்வளவு பச்ச புள்ளையா?! டபுள் மீனிங் வசனம், டாஸ்மாக் உற்சாகம், ஈவ் டீஸிங் கிண்டல்ஸ்... என எந்தக் குறும்புச் சேட்டையும் இல்லை. சைக்கிள் மிதிக்கிறார் உழைக்கிறார் நல்லது மட்டும் செய்து, நல்லது மட்டுமே சொல்கிறார்!

ஹீரோயிச சாகசமோ, காமெடி சேட்டையோ எதையும் அடக்கிவாசித்தே, லைகஸ் அள்ளுகிறார். ரசம் வைக்கிறவன்லாம் ரகுவரன் மாதிரி பேசிட்டுப் போறான் என்று ஒன் லைன் பன்ச் அடிப்பதும், என்னப்பா அக்குள்ல கட்டியா? என்று சுடுதண்ணீர் வில்லனிடம் அலும்பு செய்வதும், ரயில் பயணத்தில் கலாய் ராஜ்°டன் கதகளி ஆடுவதுமாகப் படம் நெடுக சிரிப்ஸ். நடனம், உடல்மொழி, முகமொழி... என ஹேட்ஸ் ஆப் சந்தானம்!

ஆரம்ப அதிரடிக்குக் கைகொடுக்கும் சோலார் ஸ்டார் ராஜகுமாரனுக்குச் செம லந்து லாங்வேஜ். இதோட மொக்கை வாங்கினீங்கன்னா... ஹாட்ரிக் என்று பில்டப் கொடுக்கும் அவரது சிஷ்யர்களும் செம செட். அறுக்கப்பட்ட ஊஞ்சல் கயிறைப் பார்த்து சந்தானத்தை முறைக்கும் இடத்தில் நாகி நீடு பதறவைக்க, அவரது மகன்களாக வரும் ரவிபிரகாஷ், சுகந்தன் இருவரும் புருவ அசைவில்கூட டெரர் ஏற்றுகிறார்கள்.

ஆந்திரா ரீமேக் கதைதான். அதற்காக ஒரு ஜில்லாவையே கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் டெரர் வில்லன், நோட்டீஸ் வீசுவது கணக்காக அரிவாள் வீசும் அடியாட்கள்... என அப்படியே ஆந்திரா கோங்குராவாகக் களம் அமைத்திருக்க வேண்டுமா? இடைவேளை ட்விஸ்ட்டுக்குப் பிறகு எந்தப் பெரும் திருப்பமும் இல்லாமல் பயணித்து, பழகிய க்ளைமாக்ஸில் நிலை கொள்கிறது.

ஆனாலும், ஒரு வீடு, ஒரு ஹீரோ, சில அரிவாள்கள்... இதை வைத்தே முழுப் படத்தையும் அலுங்காமல் நகர்த்திச்சென்ற வகையில், இந்த வல்லவனுக்குக் காமெடியே ஆயுதம்!



**விமர்சனம்**

## அரண்மனை மட்டும் 3 கோடி

20 கோடி ரூபாய் பொருட் செலவில் விஷன் ஐ மீடியாஸ் நிறுவனம் சார்பில் தினேஷ் கார்த்திக் தயாரிக்கும் படம் அரண்மனை.

தமிழ், தெலுங்கு என இரு மொழிகளிலும் உருவாகி கொண்டிருக்கும் இப்படத்தில் சுந்தர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க, சந்தானம், ஹன்சிகா, ஆன்ட்ரியா, லட்சுமிராய், வினய், சரவணன், கோவை சரளா, மனோபாலா, தண்டபாணி, கோட்டா சீனிவா சன் என சினிமா பட்டாளமே இப்படத்தில் ஒன்று கூடி நடித்துள்ளனர்.

இப்படத்திற்காக ஐதராபாத்தில் உள்ள மணிகொண்டா எனும் இடத்தில் 3 கோடி செலவில் ஒரு அரண்மனையை கலை இயக்குநர்கள் உருவாக்கியுள்ளனராம்.

இந்த அரண்மனையை உருவாக்க 400 ஊழியர்கள் 3 மாதமாக இரவும் பகலுமாக உழைத்திருக்கிறார்களாம்.

மேலும் இப்படத்தின் கிராபிக்ஸ் காட்சிகளையும் மிகுந்த பொருட் செலவில் உருவாக்கியுள்ளனர்.




பரத்வாஜ் இசையமைத்துள்ள இப்படத்தின பாடல் வெளியீடு மிக விரைவில் பிரம்மாண் டமாக நடைபெற இருக்கிறது.

# சினிமா செய்திகள்

## அந்த நாள் ஞாபகம்




**புன்னகை மன்னர்கள்: ரிக்ஷாக்காரன் படப்பிடிப்புத் தருணத்தில் எம்.ஜி.ஆர். சாண்டோ சின்னப்பா தேவர், அசோசன் ஆகியோர்...**


## அதிர்ஷ்டக்கார ஆண்ட்ரியா

தமிழ் திரையுலகில் சத்தம் இல்லாமல் வளர்ந்து வரும் நாயகி என்றால் கண்டிப்பாக ஆண்ட்ரியா தான். கௌதம்மேனன் இயக்கிய பச்சைக்கிளி முத்துச்சரம் என்ற படத்தில் அறிமுகமாகி அனிருத்துடன் கிசு கிசு என சர்ச்சைகளில் சிக்கி தற்போது 1/2 டசின் படங்களில் நடித்து கொண்டு இருக்கிறார்.

நம் உலக நாயகனுடன் ஒரு படம் நடிக்கவே எல்லா கதாநாயகிகளும் தவம் கிடக்க அசால்டாக ஆண்ட்ரியா விஸ்வரூபத்தை தொடர்ந்து மேலும் 2 படங்களில் நடிக்க உள்ளார். ஆமங்க விஸ்வரூபம் 2, உத்தம வில்லன் என வரிசையாக கமலுடன் ஜோடி சேர்ந்து இருக்கிறார்.

இது குறித்து அவர் கூறுகையில்,கமல் சாரின் நடிப்பை பார்த்து, வியந்த பெண் நான். அப்படிப்பட்ட என்னை, விஸ்வரூபம் படத்தில் நடிக்க, அவர் அழைத்த போது, ஆடிப் போய் விட்டேன். இது, எனக்கு கிடைத்த அதிர்ஷ்டம்என்று தான் கூற வேண்டும். தற்போது நான் நடிப்பில் ரொம்பவே தேறிவிட்டேன். எத் தனை நடிகைகளுக்கு இந்த மாதிரியான வாய்ப்பு கிடைக்கும் என்றார்.





ஸ்ரீ திவ்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடு திட்டத்தின் உண்மை நோக்கத்தை மக்கள் உணரவேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை

யாழ்.குடாநாட்டில் குடிநீருக்கான பாரிய தட்டுப்பாடுகள் எதிர்காலத்தில் உருவாகும் நிலையில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரணைமடு குளத்திலிருந்து குடிநீரை யாழ்.குடாநாட்டிற்குக் கொண்டு வரும் திட்டமானது ஒரு சில சுயலாப அரசியல் வாதிகளால் தங்களது குறுகிய நோக்கங்களுக்காக தடையேற்படுத்தப்பட்ட நிலையில் இருப்பதால் இத்திட்டம் தொடர்பிலான உண்மையான நோக்கம் குறித்து எமது மக்களை விழிப்படையச் செய்யவேண்டுமென பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்.கிளிநொச்சி நீர்வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம் தொடர்பில் யாழ்.மாவட்ட சமுர்த்தி அலுவலர்களுக்கு விழிப்பூட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் மாவட்ட மேலதிகச் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெற்ற பொது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதுள்ள இரணைமடு குளத்தின் நீர் கசிந்து வீண் விரயமாகின்ற நிலையில் இக்குளத்தை மீளப் புனரமைத்து இரண்டு அடிகள் உயர்த்தி குளத்தின் கீழ் வாய்க்கால்கள் புனரமைக்கப்பட்ட பின்னர் மொத்தக் கொள்கலனிலிருந்து 10 வீதத்திற்கு குறைந்த நீரை கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மக்களுக்கு குடிநீருக்காக பெறுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இந்நீர் குடிநீராக சுத்திகரிக்கப்பட்டு கிளிநொச்சி, பூநகரி, பளை உட்பட யாழ்.குடாநாட்டு மக்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்படவுள்ளது.

தங்களது குறுகிய நோக்கங்களுக்காக சில சுயலாப அரசியல்வாதிகள் இத்திட்டத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் மக்களை தவறான திசைக்கு திருப்பி வருகின்றனர்.

எனவே இத்திட்டம் தொடர்பில் எமது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலேயே இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் இத்திட்டத்தின் நோக்கம் தொடர்பில் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை பணிப்பாளர் பாரதிதாசன் காட்சிகைப்படுத்திய விளக்கவுரை நிகழ்த்தினார்.

யாழ்.குடாநாட்டின் நிலத்தடி நீர் நிலைகள் தொடர்பில் பேராசிரியர் சிவச்சந்திரன் மிகத் தெளிவான விளக்கங்களை வழங்கினார்.

2025 ஆம் வருடமாகும் போது யாழ்.குடாநாட்டில் நிலத்தடி நீரின்றிய நிலை ஏற்படும் என்றும் இதன் போது சுத்தமான குடிநீரை மக்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டியது அரசியல்வாதிகளின் பொறுப்பு என்றும் அப்படி செய்ய இயலாது அரசியல் வாதிகள் இருப்பதால் பயன் ஏதுமில்லை என்றும் தெரிவித்த பேராசிரியர் யாழ்.குடாநாட்டுக்கு மழைநீர் தரக்கூடிய பிரதான நிலையாக இரணைமடு இருப்பதை உணர்த்தினார்.

நாட்டில் பாதுகாப்பான குழாய் நீர் ஏனைய மாகாணங்களில் சராசரி 45 வீதமாக இருக்கும் நிலையில் வடக்கு மாகாணத்தில் இது 6 வீதமாக இருக்கிறது.

தற்போது குடாநாட்டில் பயன்படுத்தப்படும் நிலத்தடி குடிநீரில் அசுத்தத் தன்மைகள் பல காணப்படுவதால் மக்கள் பல்வேறு நோய்களுக்கு உட்படுவதும் எதிர்காலச் சந்ததிகள் பல்வேறு குறைபாடுகளைக் கொண்டதாக இருக்கும் என்பதும் இங்கு பலராலும் உணர்த்தப்பட்டது.

நிகழ்வின் இறுதியில் இரணைமடு திட்டத்தின் உண்மையான நோக்கங்களை பொதுமக்களுக்கு தெளிவு படுத்துவதாகவும் இத்திட்டத்திற்கு துணை நிற்பதாக சமுர்த்தி அலுவலர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது. (அ)

# யுத்தத்தில் உயிரிழந்த உறவினருக்கு சமய அனுஷ்டானங்களை செய்யலாம்

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு



**யுத்தத்தில் உயிரிழந்த தனது உறவினர் ஒருவரை நினைவுகூர்ந்து சமய அனுஷ்டானங்களில் ஈடுபடு வதில் எந்தவித தடையும் கிடையாது. மாறாக புலிக் கொடியை வைத்துக் கொண்டு கூட்டமாக நினைவு கூருவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்று பாது காப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிக சூரிய தெரிவித்துள்ளார்.**

தடைசெய்யப்பட்ட புலிகள் இயக்கத்தின் கொடிகளை பயன்படுத்தி நினைவு கூரும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது சட்டவிரோத செயலாகும். அவ்வாறு செயற்படுபவர்களுக்கு எதிராக பொலிஸாரும், பாதுகாப்புப் படையினரும் கடுமையான சட்ட நடவடிக்கையை எடுப்பார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கொள்ளுப்பிட்டியிலுள்ள பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மையத்தில் நேற்று முன்தினம் காலை இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பிரிகேடியர் விளக்கமளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

பயங்கரவாதம் எந்தவிதத்தில் வந்தாலும் அது பயங்கரவாதம் தான். அதற்கு எந்தவகையிலும் அனுமதியளிக்க முடியாது. யுத்த காலத்தில் உயிரிழந்த அனைவரும் ஒரே நாளில் உயிரிழந்தவர்கள் அல்ல. எனினும் சிலர் பிரிவினை வாதத்தை ஏற்படுத்தும் நோக்கில் 18 ஆம் திகதி அனுஷ்டிக்க முயற்சிக்கின்றனர். அதேபோன்று 18 ஆம் திகதி கொண்டாடப்படுகின்ற வெற்றி விழா அணிவகுப்பானது இராணுவ வெற்றிக்கான கொண்டாட்டம் அல்ல, ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தை வெற்றி கொண்டமைக்கான கொண்டாட்டமும் அல்ல. மாறாக வடக்கு, கிழக்கு உட்பட இந்த நாட்டில் அச்சத்திற்கு மத்தியில் வாழ்கின்ற மக்களுக்கு கிடைத்த வெற்றிக் கொண்டாட்டமாகும்.

இதனை வைத்துக் கொண்டு அரசியல் இலாபத்தை கருத்திற் கொண்டு, தமிழ் மக்கள் மத்தியில் முரண்பாடுகளை தோற்றுவிக்க சிலர் முயற்சிக்கின்றனர்.

வருடாந்தம் இடம்பெற்று வரும் வெற்றி விழா அணிவகுப்புக்கான அழைப்பிதழ்கள் பாதுகாப்புச் செயலாளரினாலேயே வழங்கப்படுகிறது. இது அரசியல், கட்சி பேதங்களுக்கு அப்பால் சகல அரசியல் பிரமுகர்களுக்கும் வழங்கப்படுகிறது.

அழைப்பு விடுப்பது எமது பொறுப்பு. அதில் கலந்து கொள்வதும். கலந்து கொள்ளாததும் ஒவ்வொருவரதும் தனிப்பட்ட விருப்பமாகும். மாறாக இதில் எந்த பலாத்காரமும் கிடையாது.

பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டதை விரும்பாதவர்களே தமது குறுகிய அரசியல் இலாபம் கருதி முரண்பாடுகளை தோற்றுவிக்க முயல்கின்றனர் என்றார். (2)

### புலிகளுக்கு தடை விசாரணை வேண்டும்


#### ஆங்கில ஊடகம் தகவல்

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது இந்தியாவின் காங்கிரஸ் அரசாங்கம் திடீரென வழமைக்கு மாறாக ஐந்து வருடங்களுக்கு தடையை நீடித்தமை தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆங்கில ஊடகம் ஒன்று இதனைத் தெரிவித்துள்ளது.

இந்திய அரசாங்கம் இதுவரையில் விடுதலைப் புலிகள் மீதான தடையை இவ்விரண்டு வருடங்களாகவே நீடித்து வந்திருந்தது.

எனினும் இந்தியாவில் ஆட்சி மாறுகின்ற சூழ்நிலையை அறிந்த காங்கிரஸ் அரசாங்கம், வழமைக்கு மாறாக ஐந்து வருடங்கள் விடுதலைப் புலிகளை தடை செய்துள்ளது.

இது சந்தேகத்தை ஏற்படுத்தி இருப்பதால், இது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தமிழகத்தில் உள்ள அரசியல் அவதானிகளை மேற்கோள் காட்டி குறித்த ஆங்கில ஊடகம் வலியுறுத்தியுள்ளது. (அ)



அளவெட்டி கிழக்கு புனித சூசையப்பர் ஆலயத்தில் தொழிலாளர் தின விழா சந்திர போஸ் அடிகளின் தலைமையில் நடைபெற்றது.

இவ் விழாவில் அடிகளார் திருப்பலி பூசை ஒப்புக்கொடுப்பதையும் சூசையப்பரின் திருச் சுரூபம் ஊர்வலமாக எடுத்து வரப்படுவதையும் படங்களில் காணலாம்.

# இறக்குமதி செய்யப்பட்ட புகையிரத பெட்டிகளின் எஞ்சின்களில் பிரச்சினை

## புகையிரத சங்கங்கள் சுட்டிக்காட்டு

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புகையிரதப் பெட்டிகள் அடங்கிய எஞ்சின்களின் நிறுத்த அமைப்புக்களில் பாரிய பிரச்சினைகள் நிலவுவதாக புகையிரத சங்கங்களின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தரத்தில் குறைந்த நிறுத்த அமைப்புக்கள் மேற்படி புகையிரத எஞ்சின்களில் பொருத்தப்பட்டுள்ளதால் புகையிரதம் இடையிலேயே நின்றுவிடும் அவதானம் நிலவுவதாக மேற்படிதகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி பிரச்சினைகளைத் தவிர்க்க வேண்டுமாயின் மேற்படி எஞ்சின்களின் நிறுத்த அமைப்புக்கள் புதுப்பிக்கப்படல் வேண்டும். அதற்கு பாரியளவில் செலவு செய்து புதிய பாகங்கள் பொறுத்தப்பட வேண்டும். இதனால், புகையிரத திணைக்களத்துக்கு பாரிய நட்டம் ஏற்படும் என்றும் அத்தகவல்கள் குறிப்பிட்டன.

அமைச்சர் டலஸ் அழகப்பெரும, போக்குவரத்து அமைச்சராக இருந்த காலத்தில் சீனாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட புகையிரதப் பெட்டிகள் 100 அடங்கிய எஞ்சின்களில் கோளாறுகள் காணப்படுகின்றன என்று புகையிரத தொழிற் சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட எஞ்சின்கள் பிரதான மற்றும் கரையோர புகையிரத சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இவற்றில், மணித்தியாலத்துக்கு சுமார் 40 அல்லது 50 கிலோமீற்றர் வேகத்தில் கூட பயணிக்க வேண்டாம் என புகையிரத அதிகாரிகளால் சாரதிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக மேற்படி சங்கங்கள் மேலும் தெரிவித்தன. (2)

# இலங்கை இராணுவம் சிறந்த முறையில் பயிற்றப்பட்டுள்ளது

## சீனக் குழுவினர் ஜனாதிபதியிடம் தெரிவிப்பு

(கொழும்பு)

சீனாவின் மத்திய இராணுவ ஆணைக்குழுவின் உதவி தலைவர் எயார் மார்சல் சூ கியூலியாங் தலைமையிலான குழுவினர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை சந்தித்தனர்.

இந்த சந்திப்பு அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்றது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவை பலப்படுத்திக் கொள்வது மற்றும் இராணுவ உறவை பலப்படுத்திக் கொள்ளும் முகமாகவே சீனக்குழுவின் விஜயம் அமைந்துள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இந்தநிலையில் ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது இலங்கை இராணுவம் மிகவும் சிறந்த முறையில் பயிற்றப்பப்பட்டுள்ளதாக சீனக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இந்தக் குழுவினர் ஜனாதிபதியின் தலைமைத்துவத்தையும் பாராட்டியுள்ளனர்.

இதன்போது பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்சவும் உடனிருந்தார். வரலாற்றில் அதிக அளவான பிரதிநிதிகளை கொண்ட சீனாவின் பாதுகாப்பு அதிகாரிகள் குழு ஒன்று, இலங்கை வந்திருந்தது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

807

## இதயம் இல்லாதவன்!

வான் வழியே ஒரு தேவதை பறந்து சென்றுகொண்டு இருந் தாள்.

அப்போது, கீழே இருந்து மக்களின் அவலக் குரல் அவள் காதுகளைத் தீண்டியது.

குனிந்து பார்த்தாள். சிதையில் கிடத்தப்பட்டு இருந்த ஓர் உடலைச் சூழ்ந்துகொண்டு, மக்கள் கண்ணீர விட்டுக் கதறுவது தெரிந்தது.

உடனே, தேவதை மனிதப் பெண்போல் உருவம்கொண்டு, மக்கள் கூட்டத்தோடு தானும் ஒருத்தியாய்க் கலந்தாள்.

இறந்துபோனவன் அந்த மக் களின் ஒப்பற்ற தலைவன். நாட் டிலே கொடுங்கோல் ஆட்சி புரிந்து, மக்களைத் துன்புறுத்திய பிங்களன் என்ற அரக்கனை எதிர்த்த மக்கள் போராளி.

தன்னலமற்ற அந்தத் தலை வனை அமைதிப் பேச்சுக்கு வரு மாறு அழைத்து இருக்கிறான் பிங்களன்.

அதை நம்பிச் சென்றான் அந்தத் தலைவன். பாம்பினும் கொடியவனான பிங்களன், வஞ்ச கமாய் உணவிலே நஞ்சைக் கலந்து தலைவனைக் கொன்று விட்டான்.

இந்தச் செய்திகளை மக்களி டம் உரையாடித் தெரிந்துகொண் டாள் தேவதை.

பிங்கள அரக்கன் அந்த நாட்டு மக்களுக்கு இழைத்துவரும் கொடு மைகளைக் கேட்டு அறிந்த தேவ தையின் விழிகளும் கண்ணீ ரைச் சொரிந்தன.

தலைவனின் உடல் விறகு களால் மூடப்பட்டு எரியூட்டப்பட் டது. மக்கள் கொஞ்சம் கொஞ்ச மாய்க் கலைந்தார்கள்.

இறுதியில் தேவதை மட்டுமே எஞ்சி நின்றாள். சிதையின் நெரு ப்பு அணைந்து அடங்கியது. எஞ்சி இருந்த சாம்பல் குவியலின் நடுவே, அந்தத் தலைவனின் இதயம் மட்டும் எரியாமல் இருப்பதைத் தேவதை கண்ணுற்றாள். பெரு வியப்புக்கொண்ட தேவதை, நெரு ங்கிச் சென்று அந்த இதயத்தைக் கையில்எடுத்தாள். அடுத்த நொடியே, அந்த இதயம், பொன் நிறமாக மாறியது. "லப்ப்... லப்டப்' என்று துடிக்கவும் செய்தது.

தேவதை எத்தனையோ விந் தைகளைக் கண்டவள். கணக் கில் அடங்கா விந்தைகளை அவளே நிகழ்த்திக்காட்டியவள். ஆனால், இப்படி ஒரு விந்தையை அவள் கண்டது இல்லை. தன் மக்களுக் காக இறந்த பின்னும் துடித்துக்



கொண்டு இருக்கும் தலைவனின் ஒப்பற்ற இதயத்தை எடுத்துக்கொண டாள் தேவதை. தன் சிறகுகளை விரித்து விண்ணிலே பறந்தாள்.

அவள் மனமோ கனத்துக்கிடந் தது. தேவதை நினைத்தால், அந்த அரக்கனை சில நிமிடங் களில் கொன்றுவிட முடியும். ஆனால், அதில் அவளுக்கு விருப் பம் இல்லை.

சில நாட்களுக்குப் பிறகு...

அன்று பிங்கள அரக்கனின் பிறந்த நாள். கப்பம் கட்டும் சிற்ற ரசர்களும், நட்புப் பாராட்டும் பேரர சுகளின் தூதுவர்களும் தலைநக ரிலே குழுமி இருந்தார்கள்.

அரக்கனைப் போற்றிப் புகழ் ந்து பரிசுகளை அளித்தார்கள். நம் தேவதையும் கையிலே ஓர் அழ கிய தந்தப் பேழையுடன் பெண் புலவர் போல் அரண்மனைக்கு வந்தாள். பிங்கள அரக்கனைச் சந்தித்தாள்.

"பார் போற்றும் வேந்தே, யாம் விந்தியப் பேரரசின் தூதுவராய் வந்துள்ளோம். எம் பேரரசர் உம்மை வாழ்த்துகிறார். குறிப் பாக, கலகக்காரர்களின் தலைவ னைப் பேச்சுக்கு அழைத்து, நஞ்சு கொடுத்துக் கொன்ற உம் அறி வையும் திறமையையும் அவர் மெச்சிப் பாராட்டுகிறார். உரிமை கேட்கும் மக்களை அடக்கி நசுக்கு வதுதான் எம் நாட்டின் கொள்கை யும். அந்த வகையிலே எம் பேரர சர் உம்மைப் பாராட்டி மகிழ்கி றார்." என்றாள்.

தேவதையின் புகழ்ச்சியைக் கேட்டு அரக்கன் புன்னகையோடு தலையசைத்துக்கொண்டான். தேவதை மேலும் தொடர்ந்தாள்.

"அரசே, தாங்கள் ஒரு விந் தையான உடல் அமைப்பைக் கொண்டவர் என்பதை நாடு அறியும்.

தங்களுக்கு இதயம் என்ற உறுப்பே கிடையாது. இத்தகைய தனித்தன்மை உள்ள மந்திர ஆற்றல் மிக்க உம்மை, அறியா மையில் மூழ்கிக் கிடக்கும் மக் கள், "இதயம் இல்லாதவன்' என்று தூற்றுவதைக் கேள்விப் பட்டு, எம் பேரரசர் பெரிதும் மனம் வருந்தினார்.

இதயம் இல்லை என்ற குற் றச்சாட்டை நீக்கும் வண்ண மாகப் பொன்னால் ஆன ஓர் இதயத்தை உமக்குப் பரிசாகக் கொடுத்து அனுப்பி உள்ளார்.

இந்தப் பொன் இதயத்தைத் தாங்கள் அணிந்துகொள்ள வேண் டும். இது தங்கள் நட்பை விரும் பும் விந்தியப் பேரரசரின் அன்புப் பரிசு."

இவ்வாறு கூறிய தேவதை, கையில் இருந்த தந்தப் பேழை யைத் திறந்தாள்.

துடித்துக்கொண்டு இருந்த தலைவனின் இதயத்தை வெளியே எடுத்தாள்.

அதன் கண்கூசும் ஒளியை யும் அழகையும் கண்டு அவை யோர் திகைத்தார்கள்.

பிங்கள அரக்கன் அகமகிழ்ந் தான்.

ஆவலுடன் அதை வாங்கி, ஒரு விருதுபோல் தன் இடது மார்பிலே பொருத்திக்கொண் டான்.

அடுத்த நொடியே ஒரு பெரிய மாற்றம் ஏற்படுவதை உணர் ந்தான்.

ஆம். தலைவனின் ஒப்பற்ற இதயம் கொடுங்கோலனை மாற் றியது.

அந்தத் தலைவனின் குணம் அத்தனையும் பிங்களனுக்கு வந்தது. அவன் நல்மனம் கொண்ட வனாய் மாறினான்.

தேவதை மனநிறைவுடன் தன் வான் வழிப் பயணத்தைத் தொடர்ந்தாள்.

ΩΩΩΩΩΩΩΩΩΩΩ



## 05.2014 18 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1565 - ஒட்டோமான் படைகள் மால்ட்டாவை அடைந் தன. மால்ட்டாவின் ஆக்கிரமிப்பு ஆரம்பமா கியது.
- 1652 - வட அமெரிக்காவிலேயே முதன் முதலில் அடி மைத் தொழிலை இல்லாதொழிக்கும் சட்ட த்தை ரோட் தீவு கொணர்ந்தது.
- 1765 - கனடாவின் மொன்ட்றியால் நகரத்தின் பெரும் பகுதி தீயினால் அழிந்தது.
- 1803 - ஐக்கிய இராச்சியம் பிரான்ஸ் மீது போரை அறிவித்தது.
- 1804 - முதலாம் நெப்போலியனை பிரெஞ்சு மன்ன னாக செனட் தெரிவு செய்தது.
- 1869 - ஏசோ குடியரசு கலைக்கப்பட்டு ஜப்பானுடன் இணைக்கப்பட்டது.
- 1896 - கோடின்கா துயரம்: ரஷ்ய மன்னன் இரண் டாம் நிக்கலாசின் முடிசூடும் நிகழ்வுக் கொண் டாட்டத்தின் போது "கோடின்கா" என்ற இடத் தில் இடம்பெற்ற நெரிசலில் சிக்கி 1,389 பேர் இறந்தனர்.
- 1897 - ஐரிய எழுத்தாளர் பிராம் ஸ்டோக்கர் எழுதிய டிராக்குலா புதினம் வெளியிடப்பட்டது.
- 1900 - தொங்கா ஐக்கிய இராச்சியத்தின் பகுதியாக் கப்பட்டது.
- 1910 - ஹேலியின் வால்வெள்ளியின் வாலினூடாக பூமி சென்றது.
- 1944 - கிரிமிய தார்த்தார்கள் சோவியத் அரசினால் வெளியேற்றப்பட்டனர்.
- 1956 - உலகின் 4ஆவது பெரிய மலையான லகோ த்ஸே மலையின் உச்சியை முதன் முதலில் சுவிட்சர்லாந்து மலையேறிகள் எட்டினர்.
- 1969 - அப்பல்லோ 10 விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1974 - சிரிக்கும் புத்தர் என்ற பெயரிடப்பட்ட திட்டத் தில இந்தியா தனது முதலாவது அணுகுண்டை வெற்றிகரமாக சோதித்தது.
- 1990 - பிரான்சில் TGV தொடரூந்து உலகின் அதி உயர் வேகத்தில் (515.3கிமீ/மணி) சென் றது.
- 1991 - ஹெலன் ஷார்மன் விண்வெளிக்குச் சென்ற முதலாவது பிரித்தானியர் என்ற பெருமை யைப் பெற்றார்.
- 1991 - வடக்கு சோமாலியா சோமாலிலாந்து என்ற பெயரில் மீதமான சோமாலியாவில் இருந்து விடுதலையை அறிவித்தது. ஆனாலும் அனைத்துலகம் இதனை அங்கீகரிக்க வில்லை.
- 2006 - நேபாளம் மதசார்பற்ற நாடாகவும் அதன் மன்னர் ஒரு சம்பிரதாய மன்னராகவே இருப்பாரெனவும் அந்நாட்டு நாடாளுமன்றத் தில் தீர்மானம் நிறைவேறியது.
- 2009 - ஈழப்போர் முடிவுக்கு வந்ததாக இலங்கை அரசு அதிகாரபூர்வமாக அறிவித்தது. பல்லா யிரக்கணக்கான பூர்வகுடி தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட நாள்.


### பிறப்புக்கள்

- 1048 - ஓமார் கையாம், பார்சியக் கவிஞர், கணித வியலாளர் (இ. 1131)
- 1908 - இயான் பிளெமிங், ஆங்கில எழுத்தாளர் (இ. 1964)
- 1920 - திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் (இ. 2005)
- 1913 - நீலம் சஞ்சீவ ரெட்டி, இந்தியாவின் 5ஆவது குடியரசுத் தலைவர் (இ. 1996)
- 1933 - தேவகவுடா, இந்தியாவின் 11ஆவது பிரதமர்
- 1939 - பீட்டர் குருன்பெர்க், ஜேர்மனிய இயற்பிய லாளர்

### சிறப்பு நாள்

- அனைத்துலக அருங்காட்சியக தினம்
- போர்க்கால இறுதி தினம்

### போர்க்கால இறுதி தினம்




போர்க் கால இறுதி நாள் (மே 18) என்பது 2009 ஜனவரி முதல் மே வரையிலான ஐந்து மாதங்களில் இலங்கைத் தமிழினத்திற்கு எதிராக நடைபெற்ற போரின் கடைசி நாள் ஆகும்.

இப்போரில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

உலகநாடுகளின் கவனத்தை ஈர்த்து போர்க் குற்றம் புரிந்தவர்களுக்கு உரிய தண்டனையை வலியுறுத்தும் விதத்தில் உலகெங்கும் உள்ள தமிழர்களால் மே 18 போர்க்குற்ற நாளாக, இன அழிப்பிற்கெதிரான நாளாக, கரி நாளாக இந்நாள் அடையாளப்படுத்தப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்

44

...இந்தாப்பா! ரெண்டு கிலோ ஆட்டுக்கறி! எலும்பும்- ஜவ்வும் இல்லாம என்று கசாப்புக்கடை வரிசையில் காந்தி நின்று கேட்டிருந்தால் ஒத்துழையாமை இயக்கத்துக்கு ஒருவரும் வந்திருக்க மாட்டார்கள்.



படைப்பு ஏற்படுத்தும் நம்பிக்கையை ஒரு படைப்பாளி தன்மீது ஏற்படுத்திக் கொள்வது இந்த நூற்றாண்டின் தர்மமாயிருக்கிறது.

சிவசங்கரியின் எழுத்துக்கும் வாழ்க்கைக்கும் எனக்குத் தெரிந்து இடைவெளி இல்லை என்றே தோன்றுகிறது.

சிவசங்கரியின் எந்த எழுத்திலும் அவநம்பிக்கையின் நிழல்கூட விழுந்ததில்லை என்று நினைக்கிறேன்.

**முள்ளில் நடந்து சென்று பூப் பறிக்கும் வைபவம் தான் வாழ்க்கை. ஆனால் மனிதா! முள்ளை மற! பூவை நினை! என்ற நம்பிக்கையின் குரல் சிவசங்கரியின் எழுத்துக்களில் உள்ளிருக்கும் நாதமாய் ஒலித்துக்கொண்டே யிருக்கிறது.**

சிவசங்கரி

அந்த நம்பிக்கையை வாழ்க்கைப் படுத்துகிற வைராக்கியம் சிவசங்கரிக்குள் இலையில் பசுமை போல் இழைந்தே இருக்கிறது.

அவருடைய காதற் கணவர் காலமான காலையில் நான் சென்றிருந்தேன்.

வார்த்தைகள் அந்த நேரத்தில் நொண்டியடிக்கும் என்பதனால் தூரத்திலிருந்து என் சோகத்தை மட்டும் தெரிவித்தேன்.

கூர்ந்து கவனித்தேன்.

இழப்பின் அவலம் இருந்தது; ஆனால் அவர் இடிவிழுந்து போகவில்லை.


தளர்ச்சி இருந்தது; ஆனால் தலைவிரி கோலமில்லை.

மரணம் எப்படி நிஜமோ- வாழ்க்கை மிச்சமிருக்கிறது என்பதும் நிஜம்தானே!

கண்களிலும் கன்னங்களிலும் கண்ணீர் நடந்துபோன சுவடுகள்.

ஆனாலும் அந்தச் சுவடுகளின் மீதே நம்பிக்கை ஒன்று நடைபழகக் கண்டேன்.

பாசம் உண்மைதான்.
நேசம் உண்மைதான்.
இழப்பும் உண்மைதான்.



ஆனால் எந்த மரணமும் அஸ்தமனம் அல்ல.

சிவசங்கரி சிலித்தெழுந்தார்; கணவர் இருந்த ஆசனத்தில் தன் எழுத்துக்களை இருத்தினார்.

தளர்சிதை மாற்றத்தால் கூட்டுப் புழுவான பட்டாம்பூச்சி வளர்சிதை மாற்றத்தால் மறுபடியும் பட்டாம் பூச்சியாகப் பறந்தது.

இதன் மூலம் என்ன?

ஆரம்பத்தில் சொன்னேனே அக்கினி- அணையாத அக்கினி! அதுதான்.

அசல் நெருப்பு அணைவதில்லை மரணக் காற்றில்கூட.

(தொடரும்)

-வைரமுத்து-

## உங்கள் பிறந்த எண் 01 இல் கூட்டெண் 09 இன் பலன்கள்

05

தோற்றம்

இவர்கள் சூரியனுடன் செவ்வாய் இணைந்த பலன் அடைவர். நெடிதுயர்ந்து பார்க்கக் கம்பீரமாக வாட்டசாட்டமான உடலுடன் பலம் மிகக் கொண்டு வாழ்வர். வழுக்கையும் கண்ணாடியும் கொண்ட தோற்றம் வரும். சிவப்பான நிறம் இருக்கும். கன்னம் ஒட்டி நீண்ட முகம், பற்களை உடையவராகப்படுவார். கண்கள் சிவந்து நீண்டு உள்ளடங்கிக் காணப்படும். கழுத்தும் கை, கால்களும் நீண்டிருப்பனவாகும். காயம், தழும்பு உடலில் ஆங்காங்கே இருக்கும். வேகமாக அசைந்து செயல் புரிவார். உடல் நிறைய முடி இருக்கும்.

குணம்

துணிவு கொண்டு எதிர்த்து எதிலும் போராடி வெற்றி பெறக் கூடியவர். எவரையும் எதற்கும் எப்போதும் எதிர்த்துச் சண்டையைத் தொடங்கி விடுவர். இதனால் பகைவர் அதிகமாகிவிடுவர். ஆகவே இவர்களுக்குத் தொல்லையும் அதிகமுண்டாகும். முரட்டுத்தனம் மிகும். பிறரை எப்படியாவது அடக்கியாள முனைவர். இப்படிப்பட்டவர் போகப் போக மனிதரை எடைபோட முடிந்தவராவர். தந்திரம், சூழ்ச்சி எனப்படுபவற்றைப் புரிந்து கொண்டு விடுவர். சிந்தித்து செயற்படத் தொடங்குவர். எவர் சொல்வதையும் நன்கு புரிந்து கொண்டு நடப்பர்.

சிக்கனமிருக்கும. கண்டதும் காதல், கேளிக்கைகளில் பிரியம் இருக்கும். சுயேச்சையாக நடப்பர். போராடிப் பார்த்துவிடவே விரும்புவர். யாரைப் பிடிக்குமோ அவருக்காக எதையும் தியாகம் செய்வர். அன்பு மயமான மனம் சில சமயம் திறந்திடும். தந்திரமாகக் காரிய சாதனை செய்து கொள்ளுவர்.

அரசியலில் ஈடுபடும் ஆர்வம் உண்டு. இதனால் மிகப் பெரிய நிலை அடைவர். பொது நலத்திற்குப் பாடுபடுவர். தான தருமமும் செய்வர். மிகப் பலருடன் கூட வாழுவர். கூட்டமும், குதூகலமும் கோலாகலமும் இவர்களுக்குப் பிடித்தமானது.

கல்வி, கலை நாட்டமிருக்கும். ஓவியம், காவியம் இவர் திறமையில் சிறக்கும். தமக்காக அதிகம் செலவிட்டுக் கொள்ளமாட்டார். தொடக்கத்தை விட இவர் வாழ்வு பிற்பாதியில் மிகப் பிரபலமாகும். இடம்விட்டு இடம் மாறித் தம் தொழிலில் பிரபலமடைவர். பொருளும் சம்பாதிப்பர்.


காதலும் வீரமும் வெற்றியும் இவர் வாழ்வில் அமையும் முக்கிய சங்கதிகளாகும். நட்பிற்கு அடிமையாவார். ரகசியமானவராக இருப்பார். பிறருக்கும் புதிராகவும் அமைவர். கோபமும் தீவிரமும் நிறைய உள்ளவராவார். காயம், விபத்துடன் உண்டாகும்.

குடும்பம்

பிறந்தது நல்ல செல்வக் குடும்பமானாலும் அதைவிட சொந்த சம்பாத்தியத்தில் நன்கு வாழுவர். சகோதரருக்கு உதவுவர். மண வாழ்க்கையிலும் முதலில் சண்டை நடக்கும். பிறகு அமைதி வரும். பெண் குழந்தைகள் அதிகமிருப்பர். மனைவியும் படித்தவராக வேலை செய்பவராக அமைவர். சொந்தத் தொழில் புரிபவர். வீர செயல்கள், திருப்பங்களுடன் காரசாரமான வாழ்க்கை வாழ்வர். பெண்களால் வம்பு வரும். தீவிரம் குறையுமானால் மனமொத்த காதல் வாழ்வு இனிக்கும். குடும்பத்தினருடன் கவனமாகப் பேசினால் பிரச்சினை எழாது.

தொழில்

அக்னி, அமிலம், மின்சாரம், இரும்பு முதலியவற்றின் தொடர்புள்ள தொழிலக வேலை அல்லது வியாபாரம் பொருத்தமானது. வேளாண்மை, அரசு சம்பந்த வேலை அமைவது நலம். வீடு, நிலம் வாங்கி விற்றல், பெரிய காலனிகள் கட்டுதல், சினிமா கொட்டகை நடத்தல், பணம் புழங்கும் நிறுவனம் நடத்தலாம். வங்கிகளில் பணி புரியலாம். அறுவை சிகிச்சை மருத்துவர், கண் மருத்துவர் ஆகலாம். பொலிஸ், இராணுவங்களில் பெரிய பதவி வகிப்பர். டெரரிஸ்ட் ஆவாருள். அரசியலில் மக்களால் வரும் பதவிகளிலும் இருப்பர். உளவாளிகள், இரகசிய பொலிசார் வேலையும் பார்க்கலாம். சிறந்த ராஜ தந்திரிகளும் இவ்வெண்காரர்ராக இருப்பர். வெளிமாநிலம், வெளிநாடு சென்று தொழில் புரிவர்.



நோய்

இவர்கள் பித்தம் மிகுந்தவர். வயிற்று வலி, கண் வலி உண்டாகும். விபத்தில் காயமுண்டாதல், இயற்கையான உபாதைகளால் பாதிக்கப்பட நேரும். அறுவைச் சிகிச்சைக்கு ஆளாகும்படியாகும். கண்ணில் அறுவை சிகிச்சை நேரும்.

## உங்கள் பிறந்த எண் 02 இல் கூட்டெண் 01 இன் பலன்கள்

தோற்றம்

சந்திரனில் சூரியன் சேர்ந்த ஆதிக்கப் பலனை அளிக்கும். அளவான உயரம் உள்ளவர். மஞ்சள்நிற மேனி கொண்டவர். முடி நிறைய இருக்கும். புருவம் அடர்ந்து நன்கு அமைந்திருக்கும். மூக்கு சின்னதாக மேல் தூக்கி இருக்கும். பற்கள் முத்துப் போல வரிசையாக இருக்கும். கன்னங்கள் உப்பி இருக்கும். சற்று நீண்ட அகலமான முகம் இருக்கும். மண்டை பெரிதாக கோளமாக இருக்கும். அழகாக இருப்பர். கண்கள் சற்று நீளமாக இருக்கும். சிறு வயதில் பருமனாக இருந்து பிறகு மெலிவர்.

குணம்

சஞ்சல புத்தி இருக்கும். ஒரு சமயம் உற்சாகமும் மறுசமயம் சோர்வுமடைவர். தீர்மானம் தாமதமாக வரும். சந்தேகம் கொண்டே தெளிவர். கவலை தயக்கம் கொள்ளுவர். காரணமற்ற அச்சம் இருக்கும். எப்போதும் எதையாவது செய்துகொண்டே எதையாவது எண்ணி குழப்பம் அடைவர். கற்பனை இருக்கும். நிறையப் பேசுவர். பிறரைக் கேலி செய்வர். பொய் சொல்லுவார். பிறர் தப்பை பெரிதாகக் காணுவர். வேகம் இருக்கும் பெரிய நிலைக்கு வர நினைப்பர். இயல்புக்கு மாறான செயல் இருக்கும். தகுதிக்கு மாறாக வாழ எண்ணுவர். முதலில் நட்பாக இருந்தவரிடம் பின்பு பகை அடைவர். அளவோடு அர்த்தத்தோடு செலவு செய்வர். தெய்வ பக்தி உள்ளவராவர். சவால் விடுவர். ஜம்பமடித்துக்கொள்வர். சிலவற்றை வென்று காட்டுவர். மனமும் புத்தியும் நன்கு இருக்கும். சாப்பாட்டில் நீர் அதிகம் இருக்கும். பானங்கள் அதிகம் பருகுவர். குளிர்ச்சியான உடலும் உள்ளமும் இருக்கும். இது வயதாக ஆக மாறும். எரிச்சல் சோகம் ஏற்படும். பழக்க வழக்கமும் வாழ்க்கையும் பிறரைக் கவர்ந்து அடக்கி ஆளுவதாக மாறும். பேச்சு கட்டளை இடுவது போல அமையும். பாட்டு, கலை ஆர்வம் மிகும். கையெழுத்து அழகாக குண்டு குண்டாக இருக்கும். எதையும் வேண்டாமென்று விட்டு பிறகு தாமதமாக ஏற்பர். பிடிவாதம் இருக்கும். பிறர் ஆதரவு அமையாது. அமைதியில் இச்சை இருக்கும். பிறருக்காக விட்டுக்கொடுப்ப[illegible]ட்டால் அன்புக்குரியவரிடம் அ[illegible]ப்பட்டுவிடுவர். பணம் சேர்க்க தொழிலில் வாழ்க்கையில் வெற்றி பெற முனைவர். வெளியார் உதவி உரிய காலத்தில் கிடைக்கும்.

குடும்பம்

சொந்த வீடு நிலம் உண்டாகும். பெண் வாரிசும் ஆண் வாரிசும் அமையும். காதல் புரிந்தால் அது நிறைவேற எதையும் தியாகம் செய்வர். மண வாழ்க்கையும் சச்சரவுடனேயே இருக்கும். பெற்றோரைப் பிரிவர். அல்லது வேறு இடத்தில் வளருவர். பெற்றோரால் பிரயோசனம் இராது. பிறர் இவரிடம் அன்பை விட சண்டை போட்டு தம் எதிர்ப்பையே காட்டுவார். வாதம் சச்சரவு பேச்சில் அமையும். இல்லற வாழ்விலும் ஏதோ குறை இருக்கும். புத்திர தோசமும் உண்டு. வாழ்க்கையில் முற்பகுதி பிரச்சினைக்குரியதாகும். பிற்பகுதியில் அமைதி செல்வம் உண்டாகும். முற்பகுதி வாழ்க்கை பிறரை சார்ந்திருக்கும்.

தொழில்

கல்வி உண்டாகையால் வக்கீல், மருத்துவராக முடியும். அக்னி இரும்பு சம்பந்தமான தொழிற்சாலைகளில் பணி அமையும். இரசாயனம் பற்றி படித்து வேலை புரிவர். பெண்கள் அழகுப் பொருள் விற்பனை புரிவர். தோட்டம் விவசாயம், மூலிகை தொடர்பான தொழில் செய்வர். நெசவுத் தொழிலிலும் வெற்றி காண்பர். கலை தொடர்பான இசை, நடனம், படம் பிடித்தல், டிசைன் போடுதல், தைத்தல், ஓவியம் வரைதல் தொடர்பான தொழிலிலும் இருப்பர். அரசாங்க வேலையிலும் அமர்வர். பேச்சால், எழுத்தால் உயரும் தொழிலும் வெற்றி தரும். நீர் தொடர்பான சமையல், குடிநீர், சப்ளை, போதை, சுவை பானங்கள் தொழில்களும் மிகச் சிறப்பாக இவர்களால் செய்யப்படும். கவிஞர்களும் இவ்வாதிக்கருள் இருப்பர்.

நோய்

கண் நோய் உண்டாகும். வெப்ப மிகுதியால் வரும் நோய்களும் பாதிக்கும். இரத்தக் கட்டி, உயர் இரத்த அழுத்தம் ஏற்படும். மஞ்சள் காமாலை, நீர்க் கோவை, தலை வலி, சர்க்கரை வியாதி, சிறுநீரகக் கோளாறு வரலாம். கபத்தால் தொண்டையிலும் மூச்சு உறுப்பமைப்பிலும் கோளாறு ஏற்படும். ஆஸ்துமா, சலி, சைனஸ் தொல்லை ஏற்படும்.

(தொடரும்)

-கணித்தவர்-ஸ்வாமி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபை அதிகாரங்களில் ஆளுநரின் தலையீடுகள்

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளின் நடைமுறைச் செயற்பாடுகள் என்னும் தலைப்பில் தேசிய சமாதான சபையின் கட்டுரை சண்டே லீடரில் வெளியானது. அதன் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. (தமிழில் :- யோகர்)**

அரசியல் யாப்புக்களின் படி அனைத்து மாகாண சபைகளுக்கும் ஒரே மாதிரியான அதிகாரங்களே பகிரப்பட்டுள்ள போதிலும் முன்னைய வடகிழக்கு மாகாண சபைக்கும் தற்போதைய வடமாகாண சபைக்குமான செயற்பாடுகளில் மாகாண ஆளுநர்களது தேவையற்ற அதிகாரத்துவ தலையீடுகள் மாகாணத்தின் செயற்பாடுகளை முடக்குவதாகவேயுள்ளன.

முன்னைய காலத்தில் வடக்கு கிழக்கு மாகாணம் மற்றும் பின்னைய வட மாகாண சபையின் ஆளுநர்களிருவரும் தத்தமது போக்குக்கு தமது அதிகாரத்தை பயன்படுத்திக் கொண்ட விதம் இந்த சபைகளின் நடவடிக்கைகள் முடங்கி போகக் காரணமாகின்றன.

தெற்கு ஆளுநர்கள் தமது மாகாண முதலமைச்சர்களையும் சபைகளையும் அவரவர் சொந்த முன்னெடுப்புக்களில் செயற்பட அனுமதித்து ஒத்துழைக்கின்றனர்.

ஆனால் முன்னைய வட,கிழக்கு மாகாண மற்றும் பின்னைய கிழக்கு மாகாண வடக்கு மாகாண சபைகளைச் சேர்ந்த ஆளுநர்கள் சட்ட ரீதியான அதிகாரங்களுடன் நிறைவேற்று அதிகாரங்கள் போன்றவற்றையும் வேண்டத்தகாத வகையில் தடுத்து மறிக்கும் வகையிலான சிக்கல்களையே உருவாக்கி கொண்டிருக்கின்றனர்.



மாகாண சபைகள், சட்ட மூலங்கள் உருவாக்கி செயற்படும் முறைமைகளை தடுத்து இழுத்தபடிப்பதற்கும் பல வழிகள் உள்ளன.

சட்டமூலம் ஒன்று நடைமுறைப்படுவதை இழுத்தடிப்பதற்காகவே ஆளுநரின் அனுமதி தாமதிக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டாக கிழக்கிற்கான சுற்றுலா அதிகார சபை ஒன்றை ஏற்படுத்துவதற்கான சட்ட வரைபு ஒன்றினை கிழக்கு மாகாண சபை தயாரித்து அறிமுகப்படுத்தியது.

இது தென் கிழக்கு மாகாண சபையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட சட்ட மூலம் போன்றதாகும்.

சுற்றுலாவிடயமானது ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் காரணத்தினால் இது பற்றிய இந்த சட்டமூல வரைபு ஒரு ஆரம்ப நடைமுறையாக பாராளுமன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்பட வேண்டியிருந்தது.

அதன் போது பாராளுமன்றித்தினரால் அறிவுறுத்தப்பட்டிருந்த குறிப்பான சில கருத்துக்கள்ளை தமது வரைபில் சேர்த்து கொள்வதென தீர்மானித்துக் கொண்ட கிழக்கு மாகாண சபை அவற்றில் சிலவற்றை அதில் சேர்த்து மீண்டும் புதிய சட்ட மூலமொன்றினை தயாரித்தது.

மாகாண சபைக்கான சட்டவிதிகளின் படி பாராளுமன்றத்தின் கருத்துக்கள் ஏற்கப்பட்ட வேண்டுமென்ற சட்டம் எதுவுமில்லை.

பாராளுமன்றத்தினரால் அறிவுறுத்தப்பட்ட கருத்துக்களை மாகாண சபையில் நிராகரித்து விட முடியும்.


ஆனாலும் பாராளுமன்றத்தின் கருத்துக்களை சிலவற்றையும் உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட புதிய சட்ட மீள்வரைபு ஆளுநரின் பரிந்துரைக்கென திரும்பவும் அனுப்பப்பட்டது.

மாகாண சபைகளுக்கான 1987 ஆம் ஆண்டு சட்ட இலக்கம் 4 இன் படி, 24 (1) பிரிவிற்குரிய இப் பிரிவு கண்டிப்பான முறையில் வரி விதிப்பு மற்றும் பணம் போன்ற விடயங்கள் சம்பந்தப்பட்டதே ஆகும்.

எந்தவொரு சட்ட மூலமும் சபையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் ஆளுநரின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப் பட வேண்டும்.

ஆனாலும் அச்சட்ட வரைபு முற்று முழுதாக பாராளுமன்றத்தின் கருத்துகளுக்கு அமைவாக இல்லாதபடியால் பரிந்துரைக்க முடியாதென ஆளுநர் பிடிவாதமாக மறுத்துவிட்டார்.

இந்த சட்ட வரைபானது மாகாண சபையின் அதிகார வரையறைகளைக் கடந்து மத்திய அரசின் அதிகாரங்களுடன் முரண்படுவதான ஒரு நிலைப்பாட்டையே கொண்டிருந்ததுடன் இதே மாதிரியான ஒரு சட்ட மூலம் தென் மாகாண சபையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருந்தும் அதனை பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக திருப்




பவும் சமர்ப்பிக்கும் படி கூறியிருந்தார் ஆளுநர்.

ஆனாலும் சட்டமானது சரத்து 154 ஜி 5 இன்படி மத்திய அரசின் ஆலோசனையை அன்றி அங்கீகாரத்தை கோரவில்லை.

ஆரம்பத்தில் சட்ட வரைபு கிழக்கு மாகாண சபை அப்படியே நிறைவேற்றக் கூடாது என்பதால் அதை மாற்றியமைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டையே பாராளுமன்றம் எடுத்திருந்தது.

அதன்படியே அது மாற்றியமைக்கப்பட்டதென்பதால், ஆளுநரின் தீர்மானத்தின் படி அதனை இரண்டாந் தடவையும் பாராளுமன்றத்தின் அனுமதி பெறுவதற்கென அனுப்ப வேண்டிய தேவை கிழக்கு மாகாண சபைக்கு இருக்கவில்லை. ஆகையால் சட்ட வரைபும் அனு மதிக்கப்படவில்லை.

அதிகார பகிர்வுக்குள்ளான எந்தவொரு விடயமோ, செயற்பாடோ



மாகாண சபை ஒன்றினால் நடைமுறைப்படுத்த வேண்டுமானால் முதலில் அது தொடர்பிலான சட்ட வரைபொன்றினை ஆளுநரின் சிபார்சுடன் சபையில் நிறைவேற்றிய பின்னர் அங்கீகாரத்தையும் பெற்றே நடைமுறைப்படுத்த வேண்டும்.

இதனையே அவசியமான ஒரு நடை



முறையாக கொண்டு செயற்படும் படி வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர்களும் பிடிவாதமாக வலியுறுத்தி வருகின்றனர்.

ஆனால் மாகாண சபைகள் சட்டம் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஏற்பாடுகளை எளிதாக நடைமுறைப்படுத்துவதற்கு உதவுகின்ற சட்டமேயாகும்.

தேசிய மட்ட அமைச்சர்களது அதிகாரத்திற்கு நிகரான விதத்தில் மாகாண அமைச்சருக்கும் அதிகாரம் வழங்கும் 1989 ஆம் ஆண்டுக்கான மாகாண சபைகள் சட்டமும் (தொடர்புறுத்தும் ஏற்பாடுகள்) இருந்தது. அவை சம்பந்தப்பட்ட விடயங்கள், செயற்பாடுகளே மாகாண சபைகளுக்கு பகிரப்பட்டன.

எனவே மாகாண சபை முன்னைய தேசிய அமைச்சு மட்ட சட்டத்துடன் ஒத்துப்போகும் விதத்தில் மட்டுமே தனது சட்டமூல வரையை தயாரித்துக் கொள்ள வேண்டும்.

ஆனால் நடைமுறையில் தாம் செயற்படுத்தபோகும் ஒவ்வொரு சட்ட மூலமும் அந்தந்த மாகாண சபையால் தமக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதே ஆளுநரின் நிலைப்பாடாகவுள்ளது.

மேற்கூறிய தொடர்புறுத்தும் ஏற்பாடுகள் இருந்த போதிலும் இந்த நடைமுறைப்படியே செயற்படும் படி ஆளுநர் பிடிவாதமாக வலியுறுத்தி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தவிதமான சட்டமூல வரை புகளுக்குகூட அவர் தனது சொந்த விருப்பின் பேரிலே தனது பரிந்துரை அல்லது அனுமதியினை வழங்குகின்றார்.

மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு சட்ட மூலத்தையும் ஆளுநர் அங்கீகரிக்க விரும்பாத இடத்தில் அதனை அவர் மாகாண சபையின் மீள் பார்வைக்கு அல்லது திருத்தத்திற்கென திருப்பி அனுப்ப வேண்டுமெனவும் அதனையே மாகாண சபை இரண்டாவது தடவையும் அங்கீகரித்தால் ஆளுநரும் அதையே அனுமதிக்க வேண்டும் அல்லது உச்ச நீதிமன்றத்தினால் அனுமதிக்க வேண்டும் அல்லது உச்ச நீதிமன்றத்தினால் அச் சட்ட மூலத்தின் இறைமைத் தன்மை பற்றி தீர்மானிக்கும் படி அதனை ஜனாதிபதியின் கருத்திற்கென அனுப்ப வேண்டும் என 13 ஆவது திருத்தம் கூறுகிறது.

ஆளுநருக்கு இதனைவிட வேறு தெரிவு எதுவும் இல்லாத போதிலும் கிழக்கு மாகாண ஆளுநர், சட்ட மூலமொன்றை வேண்டுமென்றே இழுத்தடிப்பின் மூலம் அதனை பெறுமதியற்றதாக்கி விடுவதையே தெரிவு செய்தார்.

மாகாண சபைக்கான அதிகாரங்களை சக்தியிழக்கப் பண்ணி பெறுமதியற்ற தாக்கும் இந்த எதேச்சதிகாரப்பாடானது உத்தரவாதத்திற்கு அப்பாற்பட்ட தன்னிச்சை நடவடிக்கையாகும்.


மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட சட்ட மூலங்கள் நடைமுறைக்கு வர முன்னர் ஆளுநரின் அனுமதி வழங்கப்படவேண்டும் என்ற சட்ட அனுமதி (Artick 154 எச். 4 இன்) இருக்கின்றது என்பதனால் அவர் அந்த அனுமதியை வழங்குவதற்கும் வழங்காமல் வருவதற்கும் இடமுண்டு.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி மாத இராசி பலன்கள்

# 15.05.2014-14.06.2014



## துலாம்

**சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

**நியாயங்களை நேசிக்கும் துலாம் இராசி நேயர்களே! பதவி மாற்றத்திற்கான அறிகுறிகள் தோன்றும் நேரம்!**

## பதவி மாற்றத்திற்கான அறிகுறிகள் தோன்றும்!

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் ராசிநாதன் சுக்ரன் உச்சம் பெறுகிறார். எனவே, யோசிக்காது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். யோகங்கள் படிப்படியாக வந்து சேரும். பூஜிக்கும் தெய்வங்கள் எல்லாம் நமக்கு பொன்னான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கவில்லையே என்ற கவலை இனி மாறும்.

ஆசையோடு நீங்கள் வாசமலரை மாலையாகத் தொடுத்து வரம் தரும் தெய்வங்களுக்கு அணிவித்ததன் பலன் இம்மாதத்தில் உங்களுக்கு கிடைக்கப் போகிறது. உச்ச சனியின் ஆதிக்கத்தால் உத்தியோகஸ்தர்களுக்கு உயர் பதவி வந்து சேரும். அச்சமில்லாத வாழ்க்கைக்கு அடித்தளமிடுவீர்கள். மிச்சம் வைக்கும் அளவிற்கு பொருளாதார நிலை உயர வழிவகை பிறக்கும்.

மாதத் தொடக்கத்திலேயே சுக்ரனும், செவ்வாயும் பார்த்துக் கொள்கிறார்கள். ராகு-கேதுக்களின் ஆதிக்கமும் ஜென்ம ராசியிலும, சப்தம ஸ்தானத்திலும் மேலோங்கி இருக்கிறது. முறையாக யோகபலம் பெற்ற நாளில், சர்ப்ப சாந்தி பரிகாரத்தைச் செய்தால் தான் தக்க விதத்தில் வாழ்க்கைத் தரம் உயரும்.

என்ன இருந்தாலும் 2 இல் உள்ள சந்திரனை, சூரியன் பார்க்கும் அமைப்போடு இம்மாதம் தொடங்குவது யோகம் தான். அதுமட்டுமல்ல உங்கள் ராசிக்கு 9இல் சஞ்சரிக்கும் குரு பகவான் பொன், பொருளை வழங்கும் விதத்தில் வீற்றிருக்கிறார். மாதக் கடைசியில் குருப்பெயர்ச்சியும் நிகழவிருக்கிறது.

10இல் வரப்போகும் குருவால் முத்தான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க முன்னதாகவே வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள். தாரா பலம் பெற்ற நட்சத்திரத்தன்று மேதா தட்சிணாமூர்த்தியை வழிபட்டால் சாதாரண மனிதர்கள் கூட சக்கரவர்த்தியாக மாற வழி பிறக்கும்.

சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேது நற்பலன் தர விநாயகர் கவசம் பாடி தும்பிக் கையானை நம்பிக்கையோடு தொழுது வழிபட்டு வாருங்கள்.

**மேட சுக்ரனின் சஞ்சாரம்!**

மே 24ஆம் திகதி மேட ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். ராசிநாதன் சுக்ரன் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்துத் தன் வீட்டைத் தானே பார்க்கும் பொழுது எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். இல்லத்தினரின் தேவையை எளிதில் செய்து மகிழ்வீர்கள். நல்லவர்களின் தொடர்பால் தொழில் வளர்ச்சி மேலோங்கும். நகை, தொகை போன்றவைகள் எதிர்பார்த்தபடியே வந்து சேரும். பகை விலகும்.

**வக்ர புதனின் சஞ்சாரம்!**

மே 27 ஆம் திகதி புதன் வக்ரம் பெறுகிறார். தற்சமயம் மறைந்துள்ள புதனால் நிறைந்த தன லாபம் கிடைக்கும் என்றாலும் விரயாதி பதியாகவும், புதன் விளங்குவதால் இந்த வக்ர காலம் உங்களுக்கு ஒரு வசந்த காலமாக அமையும். தக்க விதத்தில் தொழில வளம் மேலோங்கும். தடையாக இருந்தவர்கள் விலகுவர்.

மாமன், மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும். வெளிநாட்டுப் பயண அனுகூலம் உண்டு. வீடு வாங்கும் யோகமும் ஒரு சிலருக்கு உருவாகும்.

**பத்தாமிடத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான்!**


ஜூன் 13ஆம் திகதி கடக ராசியில் குரு சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக தொழில் மாற்றம், இட மாற்றம், பதவி மாற்றங்கள் உருவாகலாம். கூட்டு முயற்சியில் மாற்றம் செய்வீர்கள். கூடுதல் லாபம் கிடைக்கும் என்று நம்பி வி.ஆர்.எஸ் கொடுத்து, பணி ஓய்வு பெற்று, தொழில் தொடங்க ஒரு சிலர் முன்வருவர்.

இம்மாதம் வெள்ளிக் கிழமை துர்க்கை வழிபாடும், சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயர் வழிபாடும் சஞ்சலங்களைத் தீர்க்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் முதல் இரண்டு வாரங்கள் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்ட புதிய வாய்ப்புகள் வந்து சேரும். அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வருவீர்கள். புதிய நகைகளை வாங்கி அணிந்து கொள்ளும் வாய்ப்பு அதிகரிக்கும். குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் குடும்பப் பிரச்சினைகள் தீரும். பெண் குழந்தைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். ஆதியந்தப் பிரபு வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

# சிவல்புரி சிங்காரம்



## விருச்சிகம்

**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**தக்க விதத்தில் ஆலோசனைகளைச் சொல்லி தரணி போற்றும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் விருச்சிக இராசிநேயர்களே!**

**முக்கிய புள்ளிகளால் முன்னேற்றம் வரும் நேரம்!**

## முக்கிய புள்ளிகளால் முன்னேற்றம் வரும் நேரம்!

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கிற பொழுது, உங்கள் ராசியிலேயே மாதத்தொடக்கம் அமைகின்றது. செயல் ஸ்தானாதிபதி சூரியனும், லாபாதிபதி புதனும் இணைந்து உங்கள் ராசியைப் பார்க்கிறார்கள். எனவே, செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும். தித்திக்கும் செய்திகள் தினந்தோறும் வந்து சேரும். அரசியல் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஆச்சரியப்படத் தக்க விதத்தில் வெற்றியும், வியக்கும் பொறுப்புகளும் வந்து சேரும்.

உச்ச சுக்ரனின் ஆதிக்கத்தால் வசதி வாய்ப்புகள் பெருகும். வாகன யோகம் உண்டு. வாரிசுகளின் நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி கிட்டும். உள்ளம் மகிழும் சம்பவங்களும். உற்சாகம் தரும் விதத்தில் சுபகாரியங்களும் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். அதிகாரப் பதவிகளில் இருப்பவர்களின் நட்பின் மூலம் அன்றாட வாழ்க்கையை நன்றாக அமைத்துக் கொள்வீர்கள்.

ராசிநாதன் வக்ர இயக்கம் முடிந்து லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் ஆரோக்கியம் சீராகும். அரைகுறையாக நன்ற பணிகளை முழுவதும் முடித்து வெற்றி காண்பீர்கள். கடைதிறப்பு விழா முதல் கட்டடப்பணி, கல்யாண வாய்ப்பு போன்றவைகள் எல்லாம் சிறப்பாக நடைபெறும் விதத்திலேயே கிரக நிலைகளின் சஞ்சாரம் அமைகின்றது. ஏழரைச் சனியில் விரயச் சனியின் ஆதிக்கம் இன்னும் சில மாதங்கள் இருக்கின்றது. இருபபினும் தன பாக்யாதிபதியான குரு பகவான் 9இல் சஞ்சரித்து உச்சம் பெறும் மாதமாக இம்மாதம் அமைவதால் தொடர்ந்து உங்களுக்கு யோக வாய்ப்புகள் வந்து கொண்டேயிருக்கும்.

குறிப்பாக தனாதிபதி உச்சம் பெறுவதால் தன வரவு தாராளமாக வந்து சேரும். மனதில் நினைத்ததை மறுகணமே செய்து முடிப்பீர்கள். இத்தனைக்கும் காரணமாக இருக்கின்ற குருவை இப்பொழுதிலிருந்தே வழிபாடு செய்துவர வேண்டும். யோக பலம் பெற்ற நாளில திசைமாறிய தென்முகக் கடவுளை முறைப்படி வழிபாடு செய்வதன் மூலமும், 'வானவர்க்கு அரசனான வளம் தரும் குருவே' என்ற குரு கவசத்தை [illegible] பாடி [illegible] ழக்கிழமை தோறும் [illegible] வழிபடுவதன் மூலமும் நன்மையை அதிகம் வரவழைத்துக் கொள்ள இயலும்.

**மேட சுக்ரனின் சஞ்சாரம்!**

மே 24 ஆம் திகதி மேட ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 12 இற்கு அதிபதி 6இல் சஞ்சரிக்கும் இந்த நேரம் விபரீத ராஜயோக அடிப்படையில் உங்களுக்கு நற்பலன்கள் வந்து சேரப் போகின்றன. திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். திடீர், திடீரென தன லாபம் வந்து கொண்டேயிருக்கும். உத்தியோகம், தொழிலில் உயர்வு கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு.

**புதனின் வக்ர இயக்கம்!**

மே 27ஆம் திகதி புதன் வக்ரம் பெறுகிறார். அஷ்டமாதிபதி புதன் வக்ரம் பெறும்பொழுது, இழப்புகளை ஈடுசெய்யும் வாய்ப்பு கிட்டும். வலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர். வீடு வாங்கும் யோகம் ஒரு சிலருக்கு கிட்டும். வாரிசுகளின் எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். முக்கிய புள்ளிகள் உங்கள் இல்லம் தேடி வந்து முன்னேற்றத்திற்கு வழிவகுப்பர்.

**கோடி நன்மை தரும் குருப்பெயர்ச்சி!**

ஜூன் 13 ஆம் திகதி கடக ராசியில் குரு உச்சம் பெற்று சஞ்சரிக்கப் போகிறார். அதன் [illegible] உங்கள் ராசியில் பதிவ[illegible] வாய்ப்புகள் நாள்தோறும் வந்து கொண்டேயிருக்கும். சொல்லைச் செயலாக்கிக் காட்டுவீர்கள். சுகங்களும், சந்தோஷங்களும் கூடும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைத்து தொழில் வளத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். இம் மாதம் வள்ளி மணாளனை வழி பட்டு வருவதன் மூலம் வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ள இயலும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் உங்களுக்கு புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பொருளாதார நலை உயரும். எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேற எடுத்த முயற்சிகளில் பலன் கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு நீண்ட நாட்களாக நடைபெறாத காரியம் ஒவ்வொன்றாக நடைபெறும். பாகப்பிரிவினைகளும் சுமூகமாக முடிவடையும். வசதிகள் பெருகும் இந்த மாதத்தில் ஆதியந்தப் பிரபுவை வழிபட்டு ஆனந்தமயமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகலாத பிளவுகள்!

2009 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி இரவு முள்ளிவாய்க்காலின் குறுகிய நிலப் பகுதிக்குள் முடங்கிப் போயிருந்த விடுதலைப் புலிகளின் தலைமை மற்றும் தளபதிகள் தப்பிச் செல்லும் முயற்சிகள் தோல்வி கண்டதுடன், மூன்று தசாப்த காலப் போருக்கு முடிவு கட்டப்பட்டது. முள்ளிவாய்க்காலில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான அந்தப் போர் முடிவுக்கு வந்து ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இந்தப் போர் விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தையும் அந்த இயக்கத்தின் ஒட்டுமொத்த பலத்தையும் கூட அழித்துவிட்டது. போர் முடிவுக்கு வந்தவுடன், நாட்டில் மீண்டும் அமைதியை நிலைநாட்டிவிட்டதாக அரசாங்கம் பிரகடனம் செய்திருந்தது. மூன்று தசாப்தங்களாக பல ஆட்சியாளர்களாலும் செய்ய முடியாமற்போன காரியத்தை தாம் செய்து விட்டதாகவும் அரசாங்கம் பெருமிதத்துடன் கூறியது.

ஆனால், போரை முடிவுக்கு கொண்டு வந்தாலும், நிலையான அமைதியைக் கொண்டு வருவது அவ்வளவு சுலபமான காரியமில்லை என்பது காலப்போக்கில்தான் வெளியே தெரியவந்தது. ஒரு போரின் முடிவு என்பது ஒரு அமைதியின் தொடக்கம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், போர் இல்லாத நிலையை முழுமையான அமைதி என்று கருதமுடியாது. இலங்கையில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டபோது, அமைதி வந்துவிடும் என்று பலரும் கருதினாலும், அதுவே அமைதியை உருவாக்குவதற்காக தொடக்கப் புள்ளியாக கருதப்பட்டாலும் அந்த நிரந்தர அமைதியை உருவாக்குவதில் அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது என்றே பொதுவாக மதிப்பிடப்படுகிறது.

தமிழரின் ஆயுதமேந்திய போர் முடிவுக்கு வந்துவிட்டாலும், அவர்களின் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கத்தினால் முடிய்வில்லை. ஏனென்றால், தமிழரின் அரசியல் உரிமைக் கோரிக்கைகளை நிறைவேற்றி, அதற்கான போராட்டத்தை முடித்து வைக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தின் வசமே உள்ளது. இனப் பிரச்சினைக்கான நிரந்தர அரசியல் தீர்விலும் சுமூகமான வாழ்க்கையிலும்தான் நிலையான அமைதி தங்கியுள்ளது. ஆனால், போர் முடிவுக்கு வந்து ஐந்து ஆண்டுகளாகியும் அரசாங்கத்தினால் நிலையான அமைதியை உருவாக்க முடியாமற்போய்விட்டது.

போர் முடிவுக்கு வந்த ஆரம்ப காலங்களில் இராணுவ வழிமுறையின் கீழ், ஆயுதப் போராட்டத்துக்கு தீர்வு கண்ட நாடு என்று சர்வதேச ஊடகங்கள் இலங்கையை பெருமைப்படுத்தியதுண்டு. ஆனால், இப்போது அதே ஊடகங்கள் இராணுவ வழிமுறை மூலம் ஆயுதப் போராட்டத்துக்கு முடிவு கட்டிய இலங்கை அரசினால் நிலையான அமைதியைக் கொண்டு வர முடியவில்லை என்று விமர்சிக்கின்ற போக்கை காண முடிகிறது. போர் மூலம் இலங்கையில் அமைதி ஏற்படுத்தப்படவில்லை என இன்று உலகில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் நிலை உருவாகியுள்ளது. அது மட்டுமன்றி, இந்த ஐந்து ஆண்டுகளில் இனங்களுக்கு இடையிலான பிளவுகளில் எந்த மாற்றத்தையும் காண முடியவில்லை. இனப்பிணக்குகள் என்பது புதிய புதிய வடிவங்களில் இன்னும் ஆழப்படுத்தப்படுகின்றதே தவிர, நிரவப்படவில்லை.

போரை முடிவுக்குக் கொண்டு வந்ததன் மூலம் பிளவுபட்டிருந்த நாட்டை ஒன்றுபடுத்திவிட்டதாகவும் வவுனியாவுக்கு அப்பால் பாஸ் எடுத்துக்கொண்டு செல்லும் யுகத்தை மாற்றிவிட்டதாகவும் எல்லைக் கிராமங்கள் என்ற சொல்லையே வழக்கிழந்துபோகச் செய்துவிட்டதாகவும் அரசாங்கம் பெருமையாக கூறி வருகிறது.

போரின் முடிவு அரசாங்கத்துக்கு இத்தகைய பெருமைகளை அளித்துள்ளது என்பதில் சந்தேமில்லை. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி என்று நெடுங்காலமாகவே கூறப்பட்டு வந்த இலங்கைத் தீவு இன்று ஒன்றுபடுத்தப்பட்டுள்ளது.



வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையேயிருந்து வந்த இந்த எல்லையை அரசாங்கம் போர் மூலம் அகற்றியுள்ளது. வடக்கிலுள்ள மக்கள் தெற்கிற்கும் தெற்கிலுள்ள மக்கள் வடக்கிற்கும் கட்டுப்பாடுகளின்றிப் பயணம் செய்ய முடிகிறது. ஆனால், தெற்கினதும் வடக்கினதும் மக்களின் மனோநிலைகளில் எந்த மாற்றத்தையும் காண முடியவில்லை. போரில் தோற்றுப் போன சமூகம் என்ற எண்ணம் வடக்கில் உள்ள தமிழ் மக்களிடம் உள்ளது. போரில் வெற்றி பெற்றவர்கள் என்ற மிதப்பான எண்ணம் தெற்கிலுள்ள மக்களிடம் உள்ளது. இந்த அடிப்படை எண்ணப்பாட்டிலிருந்து விடுபட்டு, இருதரப்பினராலுமே போரின் முடிவு பற்றிய ஒரு தெளிவை ஏற்படுத்திக் கொள்ள முடியவில்லை.

அதாவது, போர் முடிவுக்கு வந்த மே மாதம் 18 ஆம் திகதியைப் போர் வெற்றி விழாவாக தெற்கிலுள்ள மக்கள் கொண்டாடிக் களிக்கிறார்கள். ஒட்டுமொத்த இலங்கைத் தீவும் அவ்வாறே கொண்டாட வேண்டும் என்று அரசாங்கம் நிர்ப்பந்திக்கிறது. ஆனால், வடக்கிலுள்ள மக்களாலோ அவ்வாறு கொண்டாட முடியவில்லை. ஏனென்றால், போரின் இறுதி நாட்களில் கொல்லப்பட்ட தமது உறவுகளான மக்களை மறந்துவிட்டு, அவர்களால் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டாட்டங்களில் ஈடுபட முடியவில்லை.

அது மட்டுமின்றி இந்தப் போரில் கொல்லப்பட்ட உறவுகளைக் கூட நினைவுகூர முடியாதளவுக்கு தடைகளை அவர்கள் எதிர்கொள்கிறார்கள். பல்கலைக்கழகம் பூட்டப்பட்டு, பொது இடங்களில் யாரேனும் நினைவுகூரல்களை நடத்தினால் தண்டிக்கப்படுவார்கள் என்று அச்சுறுத்தப்பட்டு, ஒருவித இயல்பற்ற சூழலுக்குள் வடக்கிலுள்ள மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இப்போதெல்லாம், வடக்கிலுள்ள மக்களுக்கு மே 18, நவம்பர்-27 போன்ற நினைவு நாட்கள் வரப்போகின்றன என்று முந்திக் கொண்டு நினைவூட்டுவதே அரசாங்கமும் படைத்தரப்பும்தான்.

இந்த நாட்களில் எந்த நினைவு நிகழ்வு நடத்தப்படக்கூடாது என்று அச்சுறுத்தி அடக்கத் தொடங்க, பழையவை எல்லாமே தமிழ் மக்களுக்கு இயல்பாகவே நினைவுக்கு வந்து விடுகிறது. இம்முறையும்கூட அதுவேதான் நடந்திருக்கிறது. நடந்துகொண்டிருக்கிறது. இந்த நிலை இப்போதைக்கு மாறப் போவதுமில்லை. மாறப் போவதற்கான அறிகுறிகளையும் காண முடியவில்லை. என்னதான் எல்லைகளை ஒன்றிணைத்தாலும், வடக்கிலுள்ள மக்களாலும் தெற்கிலுள்ள மக்களாலும் மகிழ்ச்சியிலோ துக்கத்திலோ ஒன்றிணைய முடியவில்லை. மனித வாழ்வில் துக்கமும் மகிழ்ச்சியும் தான் ஒன்றாக இணைந்து பகிர்ந்துகொள்ளவும் கொண்டாடவும் வேண்டிய முக்கியமான இரண்டு நிகழ்வுகள். ஆனால், இந்த அடிப்படை விடயத்தில் கூட தெற்கிலுள்ள மக்களும் வடக்கிலுள்ள மக்களும் ஒன்றிணைய முடியாத வெற்றியைத்தான், அரசாங்கத்தினால், நாட்டுக்குப் பெற்றுக்கொடுக்க முடிந்துள்ளது.

இப்படியான நிலையில் இந்தப் போர் எத்தளவுக்கு அர்த்தமுள்ள வெற்றியைத் தேடித் தந்துள்ளது என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகிறது. வரலாற்றில் எத்தனையோ போர்கள் நிகழ்ந்துள்ளன. போர்களில் ஏதேனும் ஒரு தரப்பு அழிவுகளையும் தோல்விகளையும் சந்திப்பது இயல்பே. அவ்வாறான அழிவுகள், இழப்புகளையெல்லாம் கடந்து அவற்றையெல்லாம் மறந்து இன்று பல நாடுகள், இனங்கள் நட்புறவு கொண்டுள்ளதைக் காண முடிகிறது. ஆனால், இலங்கையில் அத்தகையதொரு நிலை தோன்றுவதற்கான அடிப்படைகளைக் காண முடியவில்லை.

இந்தப் போருக்கான அடிப்படையே இனப்பிரச்சினைதான். அந்த இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு காணப்பட்டிருந்தால், போர் ஒன்று இலங்கையில் ஏற்பட்டிருக்காது. அதுபோலவே போருக்குப் பின்னரேனும் இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு காணப்பட்டிருந்தால்கூட, இந்த விரிசல் ஆழப்படுத்தப்பட்டிருக்காது. போர் முடிவுக்கு வந்தவுடன், பொறுப்புக்கூறுவதும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதும் முக்கியமானது என்று முதலில் கூறிய நாடு அமெரிக்காதான்.

இவையிரண்டும் தவறவிடப்பட்டால், அதுவே இன்னொரு போரை பத்தோ, இருபதோ ஆண்டுகளில் தோற்றுவிக்க காரணமாகி விடும் என்று ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரே அமெரிக்கா எச்சரித்திருந்தது. ஆனால், அதனை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. இன்று உலகில் பொறுப்புக்கூறல் என்பது முக்கியமான வார்த்தையாக மாறியுள்ளது. அதாவது மனித உரிமைகள் என்ற சொல்லுக்கு இணையான மகத்துவம் இதற்கும் உருவாகத் தொடங்கியுள்ளது. இம்மாதம் முதலாம் திகதி நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் பொறுப்புக்கூறலை முன்னிறுத்துவது குறித்த சிறப்புக் கூட்டம் ஒன்றை ஐ.நா. நடத்தியிருந்தது.

ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை உள்ளிட்ட ஐ.நாவின் பிரமுகர்கள் அனைவரும் இதில் கலந்துகொண்டிருந்தனர். பொறுப்புக்கூறல் என்பது தனி மனித வாழ்விலிருந்து ஐ.நா.வரை அவசியமானது என்பது இங்கு வலியுறுத்தப்பட்டது. இலங்கையிலும் போரின் போது இழைக்கப்பட்ட அநீதிகளுக்குப் பொறுப்புக் கூறப்படுவது முக்கியமானதாக இருந்தாலும் இந்த ஐந்து ஆண்டுகளில் அரசாங்கம் அதற்கு இடமளிக்கத் தவறிவிட்டது.

இதனால் சர்வதேச அளவில் தலையீடுகள் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதை மறுக்க முடியாது. கடந்த மூன்று ஆண்டுகளாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது மட்டுமின்றி, சர்வதேச விசாரணைக் குழுவொன்று அமைக்கப்படும் நிலைக்கும் இதுவே காரணமாயிற்று. பொறுப்புக்கூறலில் மட்டுமின்றி, நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதிலும்கூட அரசாங்கம் இந்த மூன்று ஆண்டுகளிலும் பெரிதாக எதையும் சாதிக்கத் தவறிவிட்டது. நல்லிணக்க ஆணைக் குழுவை அமைத்து ஒரு அறிக்கையைப் பெற்றுக்கொண்டுள்ளபோதிலும், அந்த அறிக்கையின் பரிந்துரைகளை முழுமையாக நிறைவேற்ற அரசாங்கம் இன்னமும் தயாராக இல்லை. நல்லிணக்கம் என்பது விட்டுக்கொடுப்பில்தான் உருவாக வேண்டும். ஆனால், இரண்டு தரப்புகளுக்கும் இடையில் உள்ள மிகப் பெரிய இடைவெளியை நிரப்ப முடியாமல் உள்ளது. காரணம், தமிழர் தரப்புக்கு அதிகாரமளிக்க சிங்கள மக்களும் அரசாங்கமும் தயாராக இல்லை.

அதேவேளை, அரசாங்கத்தையோ, சிங்கள மக்களையோ நம்புவதற்கு தமிழ் மக்கள் தயாராக இல்லை. இந்த அவநம்பிக்கை தோற்றம் பெறக் காரணம் கடந்த காலங்களில் ஏமாற்றப்பட்டதுதான். இனிமேலும் ஏமார்ந்துவிடக்கூடாது என்ற எண்ணம் இரு தரப்பிடமும் உள்ளது. இரண்டு தரப்புமே விட்டுக் கொடுக்கத் தயாராகிவிட்டால்தான் இடைவெளி குறையும். நல்லிணக்கத்துக்கான கதவுகள் திறக்கும். ஆனால், அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இந்த இடைவெளியை குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாகத் தெரியவில்லை.

இன்னமும் தமிழ் மக்கள் மீது நம்பிக்கை கொள்ளாத போக்கும் படைப் பலத்தை வைத்து அவர்களை அடக்கியாள நினைக்கும் போக்கும் தமிழ் மக்களால் அரச தரப்பு மீது நம்பிக்கை கொள்ளக்கூடிய நிலையை உருவாக்கவில்லை. இத்தகைய இடைவெளிகளைக் குறைக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கே அதிகம் உள்ளது. அதாவது, போரில் வெற்றி பெற்ற அரசாங்கமே தானாக முன்வந்து வடக்கிலுள்ள மக்களின் அச்சத்தைப் போக்கி அவர்களை அரவணைத்திருக்க வேண்டும்.

அதனைச் செய்யத் தவறியதால்தான், மே மாதம் 18 ஆம் திகதியை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் நினைவு நாளாக வடக்கிலுள்ள மக்கள் கொண்டாடி விடுவார்களோ என்று அஞ்ச வேண்டியுள்ளது. அந்த நாளை அரசாங்கம் முப்பதாண்டு காலப் போரில் கொல்லப்பட்ட அனைவருக்குமான நினைவு நாளாகப் பிரகடனப்படுத்தியிருந்தால், வடக்கிலுள்ள மக்களும் தெற்கிலுள்ள மக்களுடன் இணைந்திருப்பார்கள். ஆனால், தமிழரின் ஆயுதப் போராட்டம் தோற்றுப் போன அந்த நாளை, வெற்றி விழாவாக கொண்டாடியதால்தான் அவர்களால் தெற்குடன் இணைய முடியவில்லை.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் பெறப்பட்ட வெற்றி என்றே அரசாங்கம் கூறினாலும் அதனை எத்தனை தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்? ஏனென்றால், பயங்கரவாதத்துக்கு எதிரான போராக அது இருந்திருந்தால், மே மாதம் 18 ஆம் திகதி அரசாங்கம் பெற்ற வெற்றி பயங்கரவாதத்துக்கு எதிராக பெறப்பட்ட வெற்றியாக இருந்திருந்தால், அந்த விழாவில் தமிழர்களும் ஒன்றிணைந்திருப்பார்கள்.

ஆனால், ஐந்து ஆண்டுகளாகியும் அரசாங்கத்தின் வெற்றி விழாக்களுக்கு தமிழர்கள் இழுத்துச் செல்லப்படும் நிலையில் இருப்பதும், இந்த நாளில் துக்கம் அனுஷ்டிக்கக் கூட முடியாதளவுக்கு தமிழர்கள் மீது தடைகள் போடப்படுவதும் போரின் வெற்றி ஒட்டுமொத்த இலங்கைக்குமானது அல்ல என்பதையே உறுதிப்படுத்துகிறது. போரில் பெறும் வெற்றியை நிரந்தரப்படுத்துவதுதான், முக்கியமானது. ஆனால், அரசாங்கமோ இன்னொரு போராட்டம் தோன்றாமல் தடுப்பதே நிரந்தர வெற்றி என்று கருதுகிறது. ஆனால், நிரந்தர வெற்றி என்பது நிலையான அமைதியை உருவாக்குவதில்தான் தங்கியுள்ளது. அந்த நிலையான அமைதி உருவாக்கப்படாத வரையில் இலங்கைத் தீவு எரிமலையின் மீது குந்தியிருக்க வேண்டியிருக்கும்.

-கே. சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிந்த நிலையில் சீருடைகள் மீட்பு

ஆயுதம் தாங்கிய குழுவினால் குருணாகல். கெட்டுவான சந்தியில் வைத்து கடத்தப்பட்ட போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த இரு பொலிஸ் கான்ஸ்டபிள்களின் சீருடைகளும் எரிக்கப்பட்ட நிலையில் நீர்கொழும்பு. திம்பிரிகஸ்கட்டுவ பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்து குற்றப்புலனாய்வு விசாரணை திணைக்களத்தினால் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது..

குறித்த வீட்டிலிருந்து வழக்கிற்கான தடயப் பொருட்கள் பலவும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் இந்த வீட்டை கடந்த மார்ச் மாதம் வாடகைக்கு பெற்றிருந்ததாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்த தகவல்களின் அடிப்படையிலேயே வீட்டை தேடியறிந்துகொண்டதாக அத்திணைக்களம் அறிவித்துள்ளது.

கடத்தப்பட்ட இருவரில் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டதுடன் மற்றொருவர் காயங்களுடன உயிர்தப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (2)

# இலங்கை-இந்திய உறவுகளில் பாதிப்புக்கள் ஏற்படவில்லை

## இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

காங்கிரஸ் அரசாங்கத்தின் கீழ் இலங்கை மற்றும் இந்திய உறவுகளில் பாதிப்புகள் ஏற்படவில்லை என பதவி விலகிச் செல்லும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியான பாரதீய ஜனதா கட்சி தேர்தலில் வெற்றிப் பெற்றுள்ளதை அடுத்து இந்தோ ஆசிய செய்தி சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,



இலங்கையில் நடைபெற்ற போர் தொடர்பில் பொறுப்புக் கூறும் பிரச்சினைக்கு தீர்வுகாண காலம் எடுக்கும்.

இலங்கை பொறுப்புக் கூறும் செயற்பாடுகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் அக்கறை செலுத்த வேண்டும். அவ்வாறான பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வுகள் காணப்படவில்லை.

இலங்கையில் பிரச்சினைகள் உள்ளன, அந்த பிரச்சினைகள் தீர்க்கப்படக் கூடிய பிரச்சினைகளையே அன்றி தீர்க்க முடியாத பிரச்சினைகள் அல்ல.

இலங்கை எமக்கு முக்கியம் என்பது போல் அந்த நாட்டுக்கு அந்த நாடு முக்கியம். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை சேதப்படுத்தக் கூடாது என்பதுடன் அதற்காக முடிந்ததை செய்ய வேண்டும்.

இந்திய பிரதமர் மன்மோகன் சிங். கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ளாத போதும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் பாதிப்பு ஏற்படவில்லை.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் நிலையான நிலையில் உள்ளன.

உண்மையில் நாங்கள் அணுத்துறை தொடர்பில் விவாதித்து வருகின்றோம். சுற்றுலா உட்பட பலதுறைகளில் எமது ஒத்துழைப்புகள் முன்னரை விட உயர்ந்துள்ளது.

முதலீட்டு உறவுகளில் இருதரப்பிலும் அதிகரித்து வருகிறது. மாற்று உறவுகளில் முழுமையான முறிவு ஏற்பட்டுள்ளது.

அங்கு இரண்டு பக்கங்களிலும் பிரச்சினைகள் உள்ளன. அவற்றுக்கு நாம் தீர்வு காண வேண்டும். அவை தீர்க்கப்படக் கூடியவை. அவற்றுக்கு மாயாஜால தீர்வுகள் கிடையாது எனவும் சல்மான் குர்ஷித் குறிப்பிட்டுள்ளார். (2)

## நெடியவனை கையளிக்க வலியுறுத்தி நோர்வே தூதரகம் முன் இன்று ஆர்ப்பாட்டம்

விடுதலைப் புலிகளின் புதிய தலைவர் நெடியவனை இலங்கையிடம் கையளிக்க வலியுறுத்தி நோர்வே தூதரகம் முன் ஹெல உறுமயவினர் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

ஜாதிக ஹெல உறுமய முன்னின்று நடத்தும் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி. இன்று பிற்பகல் 2 மணியளவில் சுதந்திர சதுக்கத்தில் இருந்து பாதயாத்திரை மூலம் நோர்வே தூதரகத்தைச் சென்றடைவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்போது நெடியவனை இலங்கையிடம் ஒப்படைக்க வலியுறுத்தி மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது.

இதேவேளை. "பெற்ற வெற்றியை தக்க வைத்துக் கொள்வோம். புலிப் பயங்கர வாதம் தலைதூக்க இடமளியோம்" என்ற தொனிப்பொருளில் ஆனந்தகுமாரசுவாமி மாவத்தையில் அமைந்துள்ள புதிய நகர மண்டபத்தில் விசேட போர் வெற்றி கொண்டாட்டங்கள் நடத்தப்பட உள்ளன.

பிற்பகல் 3.30 அளவில் இந்த நிகழ்வு நடைபெறும் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பிரசாரச் செயலாளரும் மேல் மாகாணசபை உறுப்பினருமான நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்துள்ளார். (2)

## விடுதலைப்புலிகள் அமைப்பு இதுவரை முற்றாக தோற்கடிக்கப்படவில்லை

### அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

விடுதலைப்புலிகள் அமைப்பு இதுவரை முற்றாகத் தோற்கடிக்கப்பட வில்லை என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவர். அங்கிருந்தபடி நாட்டு நடப்புகள் தொடர்பாக சிங்கள ஊடகத்துக்கு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்துள்ள அவர்.

விடுதலைப் புலிகள் இயக்கம் என்பது இராணுவ. அரசியல். கருத்தியல் என்று முப்பிரிவுகளைக் கொண்ட உலகின் பலம் வாய்ந்த ஒரு போராட்ட இயக்கம்.

அந்த வகையில் தற்போது விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவு மட்டுமே தோற்கடிக்கப்பட்டுள்ளது. அதன் அரசியல் மற்றும் கருத்தியல் பிரிவுகள் இன்னும் இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றன.

அதன் காரணமாகவே புலம்பெயர் நாடுகளில் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு சார்பான போராட்டங்கள் மற்றும் ஆதரவுத் தளம் என்பன தொடர்ந்தும் பேணப்பட்டு வருகின்றது.

விடுதலைப் புலிகளின் இந்த இரண்டு பிரிவுகளையும் இலங்கையால் இதுவரை தோற்கடிக்க முடியவில்லை. இனிவரும் காலங்களிலும் அது சாத்தியப்படுவதற்கான அறிகுறிகளும் தென்படவில்லை.

ஏனெனில் வடக்கு மற்றும் கிழக்கில் அரசாங்கம் என்னதான் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தாலும், அங்குள்ள மக்கள் அனைவருமே தனிநாடு ஒன்றைப் பெற்று பிரிந்து செல்லும் ஆர்வம் மற்றும் எதிர்பார்ப்புடனேயே இருக்கின்றனர் என்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். (2)

## சமையல் எரிவாயு கசிவினால் இலங்கை பெண்ணுக்கு எரிகாயங்கள்

(ரியாத்)

ரியாத்தில் சமையல் எரிவாயு கசிவு காரணமாக இலங்கை பெண் ஒருவர் பாரிய எரிகாயங்களுக்கு உள்ளானார் என ரியாத் தகவல் ஒன்று இதனை தெரிவித்துள்ளது.

கொழும்பில் இருந்து 50 கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள அளுத்கமவை சேர்ந்த பாத்திமா ஷாபியா என்ற 38 வயது பெண்ணே பாதிக்கப்பட்டவராவார்.

இவர். தற்போது அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார் என அங்கிருந்து கிடைக்கும் தகவல் மூலம் அறியவந்துள்ளது.

எனினும் இன்னும் ஐந்து நாட்களிலேயே அவருடைய உடல்நிலையில் முன்னேற்றங்கள் ஏற்படும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இவர் பணிப்பெண் வேலைகளில் ஈடுபட்டிருந்த போது எரிவாயு கசிவு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக தீப்பிழம்பும் ஏற்பட்ட போதே ஷாபியா பாரிய காயங்களுக்கு உள்ளானார்.

இந்தநிலையில் காயங்களுக்கு உள்ளான பெண் தொடர்பில் அவருடைய எஜமானிக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பற்ற பயன்பாடு தொடர்பிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (2)

## வாரம் ஒரு தகவல்

### ஒரு காதல் கதை

"அப்பா, உங்களிடம் ஒரு கேள்வி"

"என்ன கேட்கப் போகிறாய்?"

"வாழ்க்கையில் 3 முக்கியமான விடயங்கள் என்ன தெரியுமா?"

"தெரியவில்லையே"

"எனக்குத் தெரியுமே. ஒரு புத்தகத்தில் படித்தேன்"

"என்ன படித்தாய்?"

"வாழ்க்கையில் மிக முக்கியமான ஒரு விடயம்: யாரையாவது காதலிக்க வேண்டும்"

"இரண்டாவது முக்கியமான விடயம்: யாராவது நம்மைக் காதலிக்க வேண்டும்"

"மூன்றாவது முக்கியமான விடயம்: இவையிரண்டும் ஒரே நேரத்தில் நடக்க வேண்டும்"

"இப்பதான் தெரியுது... நீ எப்படியான விடயங்களை அதிகமாகப் படிக்கிறாய் என்று"

"நான் என்னப்பா... இன்னமும் சின்னக் குழந்தையா? வயதாகி விட்டதல்லவா!"

"புரியுதடா... ஏற்பாடு பண்ணுறேன்"

"நேற்றுக் கூட அம்மா என்னை எங்கே என்று தேடியபோது, அவன் எங்கே போயிருப்பான். கழுதை கெட்டால் குட்டிச்சுவர் என்று சொன்னீங்களாமே?"

"ஆமாம். சொன்னேன்"

"இனிமேல் அப்படியெல்லாம் சொல்லாதீங்கப்பா"

"என்னடா சொல்கிறாய்?"

"அதற்கில்லையப்பா. நான் இப்போது வாலியன். இனிமேல் என்னை கழுதை என்று சொல்வது நல்லா இருக்காது என்று நினைக்கிறேன்"

"ஏன்?"

"எதிர்வீட்டுப் பெண்ணை அவளுடைய அப்பா 'குட்டிச்சுவர்' என்று சொல்லித் திட்டிக் கொண்டிருக்கிறார். அதனால... சொன்னேன்."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிமனையினுள் அட்டகாசம் புரிந்த தீவிரவாதிகள் 200பேர் வெட்டி சரிப்பு

(மைதுகுரி)

வடகிழக்கு நைஜீரியாவில் கலாபல்ஜ் மாவட்டத்தில் மெனாரி சான் கயாரி கராவா ஆகிய கிராமங்களுக்குள் தீவிரவாதிகள் ஆயுதங்களுடன் நேற்று முன்தினம் புகுந்தனர்.

வீடுகளில் புகுந்து மக்களைத் தாக்க முயன்றனர்.

இதனால் ஆத்திரம் அடைந்த கிராம மக்கள் கொதித்து எழுந்தனர். வீட்டில் இருந்து அரிவாள், கத்தி, தடி, கற்கள் போன்ற ஆயுதங்களால் தீவிரவாதிகளை எதிர்த்து தாக்கினர். அவர்களை அடித்தும், வெட்டியும் கொன்றனர். கிராம மக்களின் தாக்குதலில் 200 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

மக்கள் துணிந்து களம் இறங்கியதை கண்டு அதிர்ச்சி அடைந்த தவிரவாதிகளில் எஞ்சியவர்கள் உயிர் பிழைத்தால் போதும் என தப்பி ஓடி விட்டனர்.



இதற்கிடையே மாணவிக்கள் கடத்தப்பட்ட பகுதிக்கு நேரில் சென்று ஆறுதல் கூற நைஜீரியா ஜனாதிபதி குட்லக் ஜோனாதன் முடிவு செய்திருந்தார். அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

ஆனால் பாதுகாப்பு காரணங்களை கருதி அவர் தனது பயணத்தை இரத்து செய்து விட்டார்.

நைஜீரியாவில் 'போகோ ஹாரம்' தவிரவாதிகள் அட்டூழியம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

கிராமங்களுக்குள் புகுந்து கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தி மக்களை கொன்று குவிக்கின்றனர்.

கடந்த மாதம் பள்ளி மாணவிகள் 300 பேரை கடத்தி சென்று சிறை வைத்துள்ளனர்.

அவர்களை இன்னும் விடுவிக்கவில்லை.அனைத துக்கும் மேலாக அவர்களை 'விலை மாதுக்களாக' விற்க போவதாக மிரட்டல் விடுத்துள்ளனர். (2)

# தெற்கு சீனக்கடல் பகுதி நடவடிக்கைகளை நிறுத்துங்கள்

## சீனாவுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

தெற்கு கடல் பகுதியில் சர்ச்சைக்குரிய நடவடிக்கைகளை உடனே நிறுத்துமாறு சீனாவுக்கு அமெரிக்கா எச் சரிக்கை விடுத்துள்ளது.

வியட்நாம் அருகே தெற்கு சீனக் கடல் பகுதியில் எண்ணெய் வள ஆய்வுப்பணிகளை கடந்த சில நாட்களுக்கு முன் சீனா தொடங்கியுள்ளது.

இது வியட்நாமுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியது. இது தொடர்பாக சீனாவுக்கு கண்டனம் தெரிவித்த வியட்நாம் தங்கள் நாட்டு கடல் பகுதியில் இருந்து உடனே வெளி யேறுமாறு எச்சரிக்கையும் விடுத்தது.

தெற்கு சீனக்கடல் பகுதியில் சீனாவின் அத்துமீறல் விவகாரம் அமெரிக்காவுக்கு எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக அமெரிக்கா கடந்த வாரம் தனது கவலையை வெளியிட்டது.

இந் நிலையில் தெற்கு சீனக் கடல் பகுதியில் சீனாவின் அத்துமீறல் நடவடிக்கைகள், சீனா–அமெரிக்கா இடையேயான உறவுகளை பாதிக்கும் என அமெரிக்கா மீண்டும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வெள்ளை மாளிகை அதிகாரிகள் கருத்து வெளியிடும் போது,

தெற்கு சீனக்கடல் பகுதியில் அண்டை நாடுகளுடன் சீனாவின் சர்ச்சைக்குரிய நடவடிக்கைகளால் அமெரிக்கா– சீனா இடையேயான உறவுகளில் சிக்கல் ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் சீனாவுடன் அமெரிக்கா இணைந்து பணியாற்ற முடியுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது என்று தெரிவித்தனர்.

இதற்கிடையே சீன இராணுவ தலைவரை சந்தித்து பேசிய அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோபிடன் மற்றும் உயர் அதிகாரிகள், சீனாவின் சர்ச்சைக்குரிய கடலோர நடவடிக்கைகள், அப்பகுதியில் ஆபத்தை ஏற்படுத்தும் வகையிலும் பிரச்சினையை தூண்டும் வகையிலும் அமைந்துள்ளதாக கூறினர்.

உடனே இந்த நடவடிக்கைகளை கண்டிப்பாக நிறுத்துமாறும் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

தெற்கு சீனக்கடல் பகுதியில் சீனாவின் நடவடிக்கைகளால் அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், அமெரிக்காவும் தற்போது கண்டனம் தெரிவித்திருப்பது குறிப்பிடத் தக்கது. (2)

# பா.ஜ.க.ஆட்சியில் இலங்கை அகதிகளுக்கு விடிவு கிட்டும்

இலங்கையில் நடைபெற்ற இனப் பிரச்சினை காரணமாக கடந்த 24 ஆண்டுகளாக தமிழகத்தில் அகதிகளாக இடம்பெயர்ந்து வந்து தற்போது 113 இலங்கை அகதிகள் முகாம்களில் சுமார் 69ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

ஒரு இலட்சம் பேர் பொலிஸ் பதிவு மூலமாக வெளியில் வாடகை வீடுகள் எடுத்து வாழ்ந்து வருகின்றனர். முகாமகளில் வசிக்கும் மக்களுக்கு தமிழக அரசு சார்பில் இலவச மானியமாக குடும்பத்தலைவருக்கு ஆயிரம் ரூபாய 12வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு 750 ரூபாய் அதற்கு கீழ்ப்பட்ட குழந்தைகளுக்கு 400 ரூபாவும் வழங்கி வருகின்றனர்.

என்னதான் இலவசத் திட்டங்கள் வழங்கினாலும் சரி இவர்களுக்கு குடியுரிமை கிடையாது. இந்தியாவை தொடர்ந்து 10ஆண்டுகள் ஆண்ட காங்கிரஸ் கட்சி இவர்கள் மீது அக்கறை செலுத்தவில்லை என்றே சொல்லலாம்.

முகாம்வாசிகளை பொறுத்த வரைக்கும் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் இதற்கு நிரந்தர தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருந்தனர்.


தனியாக யார் தயவும் இல்லாமல் பா.ஜ.க. ஆட்சி அமைக்கப்போகிறது. ஈழத்தமிழர்களுக்கு துரோகம் செய்த காங்கிரஸ் கட்சி இந்தியாவில் திசை தெரியாமல் போனது என்று மகிழ்ந்தனர்.


இவர்கள் மட்டுமல்லாமல் கனடா, பிரான்ஸ், லண்டன், நோர்வே போன்ற பல் வேறு நாடுகளில் இருக்கும் இலங்கைத தமிழர்களும் ஆட்சி மாற்றம் இந்தியாவில் வந்துவிட்டது என்று வெடி வெடித்தும் இனிப்புகளை ஒருவருக் கொருவர் பரிமாறியும் மகிழ்ந்து கொண்டனர். (2)



லோக்சபா தேர்தலில் அ.தி.மு.க. அமோக வெற்றி பெற்றதை அக் கட்சியினர் சென்னை ராயப்பேட்டை அ.தி.மு.க. தலைமை அலுவலகம் முன்பாக கொண்டாடி மகிழ்வதைப் படத்தில் காணலாம்.

# உலகத்தலைவர்கள் மோடிக்கு வாழ்த்து





இந்தியப் பாராளுமன்றத் தேர்தல் முடிபுகள் வெளியானதும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நரேந்திர மோடியை தொலை பேசியில் தொடர்பு கொண்டு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

அப்போது அவர், இந்திய மக்களின் தெளிவான உறுதியான முடிவில் கிடைத்த வெற்றிக்காக மோடிக்கு வாழ்த்து தெரிவித்தார். இந்தியா–அமெரிக்கா கூட்டு வர்த்தகம் மற்றும் உலக பொருளாதார நிலை பற்றியும் இருவரும் பேசினார்கள்.

மேலும் நரேந்திர மோடியை அமெரிக்காவுக்கு வருமாறு ஒபாமா அரசு அழைப்பும் விடுத்துள்ளது. கடந்த 2005 ஆம் ஆண்டு குஜராத் கலவரத்தை தொடர்ந்து மோடிக்கு அமெரிக்கா விசா வழங்க மறுத்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்த வெற்றி குறித்து வாழ்த்து தெரிவித்துள்ள பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன், இந்தியா பிரித்தானிய உறவுகள் மேம்பட இவருடன் இணைந்து பணியாற்றுவதை எதிர் பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பிரித்தானிய வெளியுறவுத்துறை செயலர் வில்லியம் ஹேகும் மோடிக்கு வாழ்த்துக்களை அனுப்பியுள்ளார். இந்தியாவுடன் பிரித்தானியாவுக்கான உறவுகள் வலுவானது ஆகும். இந்த உறவுகளை மேலும் வலுப்படுத்தி இரு நாடுகளுக்குமான பாதுகாப்பு, வளர்ச்சி மற்றும் செழிப்பு போன்றவற்றைப் பெற புதிய இந்திய அரசுடன் இணைந்து செயற்படுவதை முன்னோக்குவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நரேந்திரமோடிக்கு தொலை பேசி மூலம் வாழ்த்து தெரிவித்த பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் தங்கள் நாட்டுக்கு வருகை தருமாறும் மோடியை அழைத்துள்ளார்.

ஏற்கனவே பிரதமர் மன்மோகன் சிங்கை தங்கள் நாட்டுக்கு வருமாறு பாகிஸ்தான் விடுத்த அழைப்பை அவர் நிராகரித்துவிட்ட நிலையில், புதிய பிரதமர் மோடியுடன் சுமுக உறவை வளர்த்துக் கொள்வதன் மூலம் இந்தியா–பாகிஸ்தான் இடையிலான கருத்து பேதங்களையும் பழைய பகையையும் சரி செய்து கொள்ளும் பாகிஸ்தானின் முன் முயற்சியாக நவாஸ் ஷெரீப் பின் இந்த அழைப்பு கருதப்படுகிறது. (2)

# என் வாழ்க்கையும் ஆட்சியும் திறந்த புத்தகம் போன்றது

## முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவிப்பு


(புதுடில்லி)

என் வாழ்க்கையும் காங்கிரஸ் ஆட்சியும் திறந்த புத்தகம் போன்றது என்று முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் நாட்டு மக்களுக்கு நேற்றுக் காலை ஆற்றிய உரையில் குறிப்பிட்டுள்ளார்.

மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றதையடுத்து காங்கிரஸ் ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது.

இதையடுத்து நேற்றைய தினம் தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்வதற்கு முன்பு நாட்டு மக்களிடையே மன்மோகன் சிங் உரையாற்றினார்.

அப்போது அவர் கூறுகையில், எனது வாழ்க்கை திறந்த புத்தகம்.



நான் எனது பணியை திறமை யுடன் சிறப்பாக செய்துள்ளேன். இப் போது பிரதமர் அலுவலகத்தை விட்டு வெளியேற வேண்டிய நேரம் வந்து விட்டது.

இந்திய மக்களே உங்கள் தீர்ப்பை நாங்கள் மனித நேயத்துடன் ஏற்றுக் கொள்கிறோம். உங்களின் முடிவை மதிக்கிறோம்.

கடந்த 10 ஆண்டுகளில் நாங்கள் பல சாதனைகளை. புரிந்துள்ளோம். கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட நாடு தற்போது மிகவும் பலம் வாய்ந்ததாக உருவாகியுள்ளது. நாட்டிற்காக எனது பங்களிப்பை தந்ததற்காக நான் பெருமை கொள்கிறேன்.

இந்தியா பொருளாதாரத்துறையில் உயர்ந்த நிலையை அடையும் என உறுதி அளிக்கிறேன். அடுத்து வரும் அரசு வெற்றிகரமாக செயற்பட நான் இறைவனிடம் வேண்டிக் கொள்கிறேன்.

இந்த உயர்ந்த பதவியில் இருந்து விலகினாலும் உங்களின் அன்பை எப்போதும் மறக்க மாட் டேன் என்று கூறினார். (2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## போரில் போர்

ஒரு இரவில் நடந்த
தொலைபேசிச் சண்டை
முல்லையிலிருந்து நான்
வங்காளையிலிருந்து அவள்
அப்பப்பா பெரும்போர்... அவள் குரல்
எழுந்து நின்று என்னைத்தாக்க
என் இதயம் எழுந்து
வெள்ளைக்கொடிகாட்ட
மெதுவாக...
காதல் பேச்சுவார்த்தைக்கு
ஒன்று கூடினோம்...
நான் போகவில்லை
என் புகைப்படம் சென்றது
இருநாட்கள் பெரும் அமைதி
இரண்டாம் இரவில்
உன்னைப்பிடிக்கவில்லையென்ற குறுஞ்செய்தி
அதேபோர்க்களத்திலேயே நானும் பலி

பி.முல்லைதாசன், கள்ளப்பாடு

## ஆசுவாசமாய்...

உருட்டும் புரட்டும் திருட்டும்
சேர்ந்த கலப்படங்களாய்
மோகத்தால் காமத்தை
காதலுக்கு மொத்தமாய்
விலைகொடுப்பவராய்
மது, மாது போதைக்கு மசிந்து
கொடுப்பராய்
வாழ்ந்த நாட்களைவிட
வழக்கில் நீண்டநாட்கள்
கழிப்பராய்
பண்பாடு, கலாசாரத்தை
பாம்புச்செட்டைபோல
கழற்றுபவராய்
தாய்மரத்தை எதிர்காலத்தில்
தாங்கவேண்டிய விழுதுகள்
பழுதுபட்டு தங்களையே பாழ்படுத்திக்
கொண்டிருக்கின்றன
சமாதானம் வந்தபின் உள்ளே
வருகின்ற காற்று
ஆசுவாசப்படுத்தி ஆறுதல் தராமல்
மூச்சுத்திணறி திக்குமுக்காட வைக்கிறதே
இருமல்காரிக்கு ஈடாக வந்தவள்
செருமல்காரியோ
காலம் உன்னையும்தான்
ஏலத்தில் விடுகிறது

சு.சிவராசா
நாவற்குழி

## இருட்டு

வானம் தெரி குடிசையிலும்
வனமறைவிடங்களிலும்
வளைத்து உடல் பசி தணித்து
வரைந்த கூலி குறைத்து
வனிதை வயிற்று பசி வளர்த்து
காலை கதருடுத்து– நெஞ்சு
நிமிர்ந்தொரு நடை நடந்து
கனிவு முற்றும் துறந்து கதைக்கிறான்
தான் சரித்த பேதையை வேசியென்று!
வேரறுத்த பாவி மகன்
இருட்டிற்கு கரமிருந்தால் இவன்
கன்னத்தில் இரண்டு போட்டிருக்கும்
இருட்டிற்கு வாயிருந்தால் ஓலமிட்டு
ஊரை கூட்டியிருக்கும்
கேடென்று சொல்கிறோம்
கெட்டவரை மெல்கிறோம்
கெடுப்போரில் நம்பெயரும்
கசப்பான உண்மை
ஏன் ஏற்க மறுக்கிறோம்!
இன்ப பங்கு எமக்குமென்றால்
துன்பபங்கு எமக்கில்லையோ?
வெளிச்ச பங்கு உண்டென்றால்
இருட்டுப் பங்கு முண்டல்லோ!

து.கருணாகரன்
கிளிநொச்சி

## இமயம் தொட...

உண்மைக்காய்
உன்னை அர்ப்பணி
எப்போதும்
உனக்காய்
உண்மையை அர்ப்பணித்திடாதே
கல்லில் எறிந்திடும் பந்தாய்
பொய் மீண்டும் உன்
கைக்கு வரும்
கல்...
உண்மை பொய்யை பகுத்தறிய

மாவை.நா. கஜேந்திரன்

## செல்லரித்த வாழ்வு



விலைகொடுத்த வாழ்வு இன்று
வீணாகிப் போகிறதா
வாள்வெட்டுக் கொலைகள் கண்டு
பாழ்பட்ட நிலைகண்டு
புதைக்கிறது நாளும் நெஞ்சு
இவை கலிகாலக் காட்சிகளின்
அரங்கேற்றமா
பழிவாங்கும் வாழ்வதன்
தொடர்காட்சியா
நாளை பற்றி எண்ணுகையில்
நடுங்குதுள்ளம்

புலோலியூர்
வேல்நந்தன்

# மௌனத்தின் தேடல் – 204



## மனதில் உறுதி வேண்டும்

கொண்டவனை இழந்த
கோதை இவள்
கண் கலங்கி நின்றால்
தோளில் தொங்கும் மழலை
இவன் நிலை என்னாகும்
இது என் விதி என
தன் துயர் களைந்தான்
மகனின் எதிர்காலம் சிறப்புற
மனவுறுதியோடு பிடிக்கின்றாள்
மண்வெட்டி...

லீலா சிவவடிவேல்
இணுவில் மேற்கு

## கூலி

வறுமையின்
கோரத்தினால்
அன்னை என்னை
தோளில் சுமந்து
கூலிக்கு முட்டாளாய்
மாரடித்தபோது
யான் நினைத்த
நினைப்பைப்போல்
இன்று அவள்
மாடிவீட்டில்- நானோ
வைத்திய சேவையில்

நடுப்பக்க நித்தி
தாவை

## சுமை

மடிதனில் சுமந்த சுமைதனை
மன்னனவன் இருக்கையிலே
மாடிதனில் இறக்கிவைத்தேன்
தேடி வந்தவன்
தேட வைத்து சென்றபின்
எஞ்சிய மன்னவன்
சொத்துக்களை வாழவைக்க
மனசுமையுடன்
கூட முதுகிலும்
சுமக்கும் சுமையும் ஒரு சுகமே

பொ.புனிதன்
வரியப்புலம்

## சுமையானாள்

பெற்றோரை எதிர்த்து
உறவுகளை மறந்து
அவனுடன் சென்றேன்
அவன் கைக்குழந்தையுடன்
நடுத்தெருவில்
தவிக்கவிட்டான்
பெற்றோரும் என்னை
ஏற்க மாட்டார்கள்
என் பிள்ளையின்
எதிர்காலத்திற்காய்
சுமைகளை சுமந்தபடி

வளர்மதி யுகன்
யா.செ.இ.க

## கடமை

உதிரத்தைப் பாலாக்கி தன்
வாழ்வையே உனக்காக
அர்ப்பணித்து அனுதினமும் உனை
சுமக்கும் தாயை
நொடியேனும் மறந்துவிடாதே
ஏக்கத்தில் அந்த
உயிர்நாடி நின்று விடும்...!

உதயம்ரூபன்
நயினை

## வலி

உன்னை ஈன்றெடுக்க
பிரசவ வலியை ஏற்றவளுக்கு
உன்னைச் சுமந்தபடி
வேலை செய்வதெல்லாம்
பெரிய வலி இல்லை -நீ
மாறா மனவலியை அவளுக்கு
உண்டுபடுத்திவிடாதே
முதுமையில் அவளை
முதியோரில்லத்தில் சேர்த்து...!

இ.சிந்துஜன் , தாவடி

## கேள்விக்குறி

விழுங்கிடும் விலைவாசி
வீட்டிலும் பாதுகாப்பில்லை
பட்டினியாய் பச்சிளம்
பாலகனைச் சுமந்தபடி
சமத்துவமாய் ஏழையவள்

பி.சாந்தா
மல்லாகம்

## உழைப்பு

இளைத்த வேளையிலும்
இன்முகமாக
களைப்பெதுவும்
காட்டாமல்
திளைத்த மனதுடன்
தம்பிள்ளைக்காய்
உழைக்கும்
தாய் தந்தை

ராஜ்பவன்
நீர்வேலி

## உயரும் விலை

அன்று காற்றுக்கூட
தொடாதவாறு உன்னை
கருவினுள் சுமந்தவள் •
துணைக்கு யாருமில்லாததால்
உன்னை தன் முதுகில் சுமந்தவாறே
வெட்டிய மண்ணை தன் தலையில்
சுமக்கப்போகிறாள் ஏன் தெரியுமா?
உனக்கு பால்மா வாங்குவதற்காக

த.சோனியா
கிளிநொச்சி

## விவசாயிகளே உயிர்நாடி

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர்
மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்
திருவள்ளுவரின் திருக்குறள் என்பதை
பெண் தன் எதிர்கால சுமையை
முதுகில் சுமந்து சுமக்காமல் சுமக்கும்
சுமைதாங்கியும் அட்சய பாத்திரம்
பூமி நிலத்தை பண்படுத்தும்
விவசாயியின் சிறப்பை
உணர்த்தும் காட்சி இது

சி.சுகிர்தமலர்
யாழ்ப்பாணம்

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் –205



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 21.05.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்பு வாசகர்களே!

அரசியல், ஆன்மீகம், சினிமா, பொழுது போக்கு தொடர்பான உங்கள் கேள்விகளை

ஆசிரியர், வியாசர் பதில்கள்
இல. 3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

யு.வளர்மதி, இருபாலை

அன்பின் வியா அண்ணா!
காதல் எனும் மாய வலைக்குள் சிக்கித் தவிக்கும் இளசுகளுக்கு நீங்கள் என்ன சொல்வீர்கள்?

ஒருவன் தண்ணீரில் தவறி வீழ்ந்து விட்டான். தனக்கு நீச்சல் தெரியாது என்னைக் காப்பாற்றுங்கள் என்று கத்திக் கதறி அழுகிறான். வெளியே நின்ற முதியவர் உன்னால் முயன்றால் முடியும் முயற்சி செய் என்கிறார். அவன் மீண்டும் கதறி அழுகிறான். முதியவரும் விடவில்லை. முயற்சி செய் என்கிறார். ஒருவாறு அவன் நீரில் இருந்து எழுகின்றான். அவன் முழந்தாள் அளவுதான் அங்கு நீர் இருந்தது. அதே போல்தான் இந்த காதல்மாய வலையும் முயன்றால் வெறும் மாயை வலைதான் அது

வ.க.ஜெயபாலன்

அன்பு வணக்கம் வியாசருக்கு!
மேடையேறி, அடுக்கு வசனம் பேசி, வீரவசனம் பேசி, உசுப்பேற்றி, மக்களது வாக்குப்பெற்று, பதவிபெறும் அரசியல்வாதிகள் பின்னர் பதவி வரப்பிரசாதங்கள் சலுகைக்கு அடிமையாகி மக்களை மறந்து நட்டாற்றில் தவிக்க விடும் சாக்கடை அரசியல் பிரமுகர்கள் பற்றி என்ன கூறவிரும்புகிறீர்கள்?

உஸ்ஸ்...... சாக்கடை அரசியல்என்று சத்தமாக சொல்லாதீர்கள். சாக்கடையின் காதில் வீழ்ந்து விட்டால் அது கோபித்து விடும்.

சி.சிவறீபன், புன்னாலைக்கட்டுவன்

Hi HELLOW வியாசர் சேர்...!
சங்க கால புலவர் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று கவி வடித்தான். But இந்த காலத்துக்கு ஏற்ற கவி ஒன்று சொல்லுங்கள். மக்கள் சிந்திச்சு செயற்படனும்.

வரத்துடிக்குது குடி தண்ணி.
அதைத் தடுக்குது தொப்புள் கொடி வன்னி
நாம் தமிழன் என பதாகை பிடித்தபடி.

## வெளிநாட்டில் நின்று குளிரில் கஷ் டப்படும் நம்மவர்க்கு என்ன சொல்ல நினைக்கிறீர்?


எஸ்.விஜிதபாமா, கோண்டாவில்

அன்பின் வியாசரே!
மனைவி கர்ப்பமாக இருக்கும் போது கணவன் தாடி வளர்க்கிறாரே ஏன்?

வயிற்றில் சிசு வளரும் போது பெண் படும் கஷ்டத்தில் சிறிதளவையேனும் ஆண் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்.

## இந்த உலகில் நல்லவர்களையும் கெட்டவர்களையும் நாம் எப்படி இனங்காணபது?

### கொஞ்சம் சிரிங்கப்பா...




K. வாணி,
புன்னாலைக்கட்டுவன்

அன்பின் வியா அண்ணா!
நடிகர் திலகம்- சிவாஜிகணேஷன்,
மக்கள் திலகம்- எம்.ஜி.ஆர்,
காதல் மன்னன்- ஜெமினி கணேஷன்,
சூப்பர்ஸ்ரார்- ரஜினிகாந்த்
இவர்களில யாரோட நடிப்பு உங்களுக்கு ரொம்பவே பிடிக்கும்?

நடிப்புக்கு சிவாஜி,
துடிப்புக்கு எம்.ஜி.ஆர்.,
கிளுகிளுப்புக்கு ஜெமினி,
ஸ்ரைலுக்கு நம்ம ரஜினி
இவர்கள் நான்கு பேரையும் எனக்கு ரொம்பவே பிடிக்கும்.

சி.சுகிர்தமலர், யாழ்ப்பாணம்

அன்பு வியாசர் அவர்களே!
இல்லாத ஒன்றை இருப்பதாகச் சொலலும் அவர்களே அதுவாக இருப்பதை அவர்களது மனச்சாட்சி உறுத்தாதா?

இப்போது கோடை. மார்கழி மாதம் ஒன்று வரும் தானே. மாரிமழை பொழியும் தானே. அப்போது சாயம் வெளுக்காமல் போய் விடுமா என்ன.

ஜெ. கஜனா, சுழிபுரம்

அன்பின் வியாசரே வணக்கம்!
பெண்ணைக் கண்டால் பேயும் இரங்கும் என்கிறார்கள் அதற்கான காரணம் என்ன?

பேய்கள் எல்லாம் ஆண்களாக இருப்பதனால்.

எஸ். கலைச்செல்வன், மிருசுவில்

அன்பின் வியாசரே!
வெளிநாட்டில் நின்று குளிரில் கஷ்டப்படும் நம்மவர்க்கு என்ன சொல்ல நினைக்கிறீர்?

நாயாய் உழைத்து ஓடாய் தேய்கிறது எனும் பழமொழிக்கு நீதான் நற்சான்று. வெளிநாட்டில் நீ வடிக்கும் வியர்வையைத்தான் உன் தங்கை இங்கு சென்ராய் பூசிக் கொள்கிறாள். தூக்கம் கெட்டு நீ வேலை செய்ய உன் தந்தை நிம்மதியாய் பஞ்சணையில் தூங்குகிறார். கால்நடையாய் நீ நடக்க உன் தம்பி பல்சரில் பறக்கிறான். உன் தியாகத்தை எண்ணிடாத உன் தாய் TV தொடரில் கண்ணீர் வடிக்கிறார். என் செய்ய. பிறருக்கு ஒளி கொடுக்க தன்னை உருக்கிடும் மெழுகாய் நீ. உன் தியாகங்களை நினைப்பவர் இங்கு குறைவு.

சி.லீலா, இணுவில்

அன்பின் வியாசரே!
வெளிநாட்டுக் செல்ல பல இலட்சம் ரூபாய்களை முகவர்களுக்கு தாரை வார்த்து அங்கு வேலையுமில்லாமல் பரிதவிக்கும் நம் யாழ்ப்பாணத்து இளைஞர்களின் நிலைபற்றி தங்களின் கருத்து என்ன?

எங்கள் யாழ்ப்பாணம் பொருளாதாரத்தில் வீழ்ந்து கிடக்க நீங்கள் எங்கே போகிறீர்கள்? எங்கள் வயல் நிலங்கள் விதைக்க ஆளின்றி தரிசாய் கிடக்க நீங்கள் எங்கே போகிறீர்கள்? வாருங்கள் தோழர்களே எங்கள் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப ஒன்றிணைவோம்.

சு.ஜெயரூபன், பருத்தித்துறை

அன்பின் வியாச்ரே!
இந்த உலகில் நல்லவர்களையும் கெட்டவர்களையும் நாம் எப்படி இனங்காணபது?

தோற்றவனை மதித்து அவன் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பவன் எவனோ அவன் தான் மனிதன்.

# தெற்காசியாவில் இன்னுமொரு மகிந்த; மோடிக்கு அமைச்சர் டக்ளஸ் வாழ்த்து

தெற்காசிய பிராந்தியத்தில் இன்னுமொரு மகிந்தராஜபக்ஷ, அரச தலைவராக உருவாகியுள்ளார். அந்த வகையில் அவருக்கு எமது மக்கள் சார்பில் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன் என இந்தியப் பொதுத் தேர்தல் முடிவுகளை அடுத்து நரேந்திர மோடியின் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கட்சி அமோக வெற்றி பெற்று இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி நியமிக்கப்படவுள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்,

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், ஒரு பலமுள்ள அரசாங்கத்தின் பலமுள்ள தலைவராக நரேந்திரமோடி தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவ்வாறானதொரு நிலை இருக்குமானால்தான் ஒரு நாட்டின் அனைத்து பிரச்சினைகளையும் தீர்க்கமுடியும்.

இதேபோன்றதொரு நிலைதான் இலங்கையிலும் நிலவுகின்றது. இங்கே பலமானதொரு அரசு ஆட்சியிலிருக்கிறது. பலமிக்கதொரு தலைவராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விளங்குகின்றார். பேச்சுவார்த்தைகளின் மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவரும் தயாராக இருக்கின்ற நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மத்திய அரசுடன் பேச்சுவார்த்தைகளைமேற்கொள்வதன்மூலமே எமது பிரச்சினைகளை இலகு வாக வும் நிலையான வகையிலும் தீர்த்துக் கொள்ள இயலும்.

இவ்வாறானதொரு நிலையில் இன்னும் எஞ்சியிருக்கின்ற எமது மக்களின் பிரச்சினைகளை நாமே இலகுவாகத் தீர்த்துக் கொள்வதற்கு நரேந்திர மோடியின் அரசு எமக்கு உதவுமென்று நான் நம்புகின்றேன்.

ஏனெனில் இதுவொரு பலமுள்ள அரசாங்கமாக அமைந்துள்ளதால் மேற்கு நாடுகளின் அழுத்தங்களுக்கோ மாநிலங்களின் அழுத்தங்களுக்கோ உட்பட வேண்டிய தேவை மோடி அரசுக்கு இருக்காது என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கைதடி அருள்மிகு ஸ்ரீகற்பக விநாய கர் தேவஸ்தான மஹோற்ச வம் எதிர்வரும் 19 ஆம் திகதி திங் கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம் பமாகி தொடர்ந்து 11 நாட்கள் நடைபெறும்.

எதிர்வரும் 26 ஆம் திகதி திங் கட்கிழமை சப்பறமும் 27 ஆம் செவ் வாய்க் கிழமை தேர் திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தோற் சவம் நடை பெறும் என ஆலய பரி பாலன சபையினர் அறிவித்துள்ளனர். (2)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

# ஊடகங்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும்

## பிரதியமைச்சர் பைசர்

(கொழும்பு)

மத முரண்பாடுகள் தொடர்பிலான செய்தி பிரசுரத்தின் போது ஊடகங்கள் பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டுமென பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மைக் காலமாக ஊடகங்களினால் வெளியிடப்பட்டு வரும் செய்திகள் மத முரண்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சில தரப்பினர் மத முரண்பாடுகளை தோற்றுவிக்க ஊடகங்களைப் பயன்படுத்திக்கொள்கின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இன மற்றும் மதக் குரோதங்களை தூண்டும் வகையில் ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் மறைமுகமாக மத முரண்பாடுகளை தூண்டுவதாகத் தெரிவித்துள்ளார்.

ஊடகங்கள் பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட்டு நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வழியமைக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை பயங்கர அழிவுக்குள் தள்ள சில குழுக்கள் முனைப்பு உலமா சபை அறிக்கை

(கொழும்பு)

இன மற்றும் மத அடிப்படையில் செயற்படும் தீவிரவாத போக்குள்ள குழுக்கள் ஒருவர் மற்றவரை தூற்றிக் கொண்டும் மோசமாக விமர்சனம் செய்து கொண்டும் இந்நாட்டை முன்பை விட மிக பயங்கர அழிவொன்றுக்கு இட்டுச் செல்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

ஒரு சிலர் மேற்கொள்ளும் முறைகெட்ட செயல்கள் இந்நாட்டு முஸ்லிம்கள் அனைவரதும் எண்ணத்தை பிரதிபலிப்பதாக எண்ண வேண்டாம் என அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

உலமா சபையின் ஊடக செயலாளர் அஷ்ஷெய்க் பாசில் பாரூக் விடுத்துள்ள அறிக்கையிலே மேற்கண்டவாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை பல்வேறு மதங்களைப் பின்பற்றும் பல்லின சமூகங்களைக் கொண்ட நாடாகும். இலங்கையில் முஸ்லிம்கள் பெரும்பான்மை சிங்களவர்க ளுடன் சிநேகபூர்வமாகவும் பௌத்த மதத்திற்கு மதிப்பளித்தும் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர்.

இந்து, கிறிஸ்தவர்களுடனும் அந்நியோன்னிய உறவு கொண்டுள்ளார்கள். நீண்டகால யுத்தத்தின் பின்பு புதிய மற்றும் நல்ல பல எதிர்பார்ப்புகள் முஸ்லிம்களிடம் துளிர்விட்டன.

மூன்று தசாப்த காலம் நிலவிய குரோதம், சந்தேகம், வெறுப்பு மீண்டும் ஏற்படாது சகலரும கைகோர்த்து வாழலாம் என்று நம்பினர்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக அதற்குப் பதிலாக நாம் காணக்கூடியவை மிகுந்த கவலையைத் தருகிறது.

இன மற்றும் மத அடிப்படையில் செயற்படும் தீவிரவாத போக்குள்ள குழுக்கள் ஒருவர் மற்றவரை தூற்றிக் கொண்டும் விமர்சித்துக் கொண்டும் மீண்டும் தேசத்தை முன்பு நாம் கண்டதை விட மிக பயங்கரமான அழி வொன்றின் பால் இட்டுச் செல்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ)



பலாலி வீதி திருநெல்வேலிச் சந்தியை அண்மித்த பகுதியில் நேற்று காலை 8 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் யுவதி ஒருவர் படுகாயமடைந்தார். உரும்பிராயைச் சேர்ந்த அருணாசலம் கங்கா (வயது 27) என்பவரே காலில் பேருந்து சில் ஏறிப் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த யுவதியை அதே பக்கமாக வந்த இ.போ.ச.பேருந்து மோதியுள்ளது. மோட்டார் சைக்கிள் கடும் சேதத்துக்குள்ளானது விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (படம்:-எஸ்.ஆர்.சுரன்)

# காணாமற்போனவர்களை கண்டறிய சர்வதேச ஒத்துழைப்பு அவசியம்

## இராணுவ பேச்சாளர் வலியுறுத்து

காணாமற் போனவர்களை கண்டுபிடிப்பதற்கு சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பு அவசியம் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

யுத்தத்தின் பின்னர் காணாமற் போனவர்களை கண்டுபிடிப்பதற்கு ஒததுழைப்பு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு அரசாங்கங்கள் ஒத்துழைப்பு வழங்கினால் காணாமற் போனவர்கள் தொடர்பிலான பல முறைப்பாடுகளுக்கு தீர்வு வழங்க முடியும் என இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

காணாமற் போனதாகவும் இராணுவத்தினரால் கடத்தப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்ட இரண்டு பேர் தற்போது இந்தியாவில் வாழ்ந்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

காணாமற் போனவர்கள் தொடர்பிலான சம்பவங்களை மனித உரிமை அமைப்புக்கள், உரிய விசாரணை எதுவுமின்றி இராணுவத்திற்கு எதிரான குற்றச்சாட்டுக்களை முன்வைக்க பயன்படுத்திக் கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.

பிழையான தகவல்களின் அடிப படையிலேயே இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக் கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (2)

# மாணவர்களை அடக்குவதன் மூலம் பிரச்சினையை தீர்க்கமுடியாது

## சுஜீவ எம்.பி.தெரிவிப்பு

உயர் கல்வி அமைச்சர் தனது ஆரம்பகால வாழ்க்கையை மறந்து விட்டு செயற்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க சாதாரண குடும்பத்தில் பிறந்து அரசாங்கத்தின் சிறப்புரிமைகளை பெற்ற பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற ஒருவர்.

அந்த காலத்தில் இடதுசாரி கொள்கைகளை கொண்டு செயற்பட்ட ரெடிக்கல் இளைஞராக எஸ்.பி. இருந்தார். அப்படி இருந்த அவர், இன்று முதலாளித்துவத்தின் ஊற்றாக மாறியுள்ளார்.

அந்த காலத்தில் செய்த ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், இடதுசாரி கொள்கைகளை அவர் இன்றும் மறந்து விட்டார். பல்கலைக்கழக மாணவர்களை அடக்குவதை மாத்திரமே தற்போது நினைவில் வைத்துள்ளார்.

அமைச்சர் நினைப்பது போல் அடித்து,திட்டி மாணவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாது.

மாணவர்களை பலவந்தமாக அடக்க முடியாது.

அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தற்போது பண்டாரநாயக்க குடும்பத்தில் பிறந்தவர் போல் நடந்து கொள்கிறார் என்றார். (2)

# மோடி புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுக்கமாட்டார்

## அமைச்சர் வாசுதேவ ஆரூடம்

பாரதீய ஜனதா கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடியின் வெற்றி தென்னாசிய பிராந்தியத்தை இருண்ட யுகத்துக்குள் தள்ளிவிடும் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடியின் வெற்றி தொடர்பாக தேசிய நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் தொடர்ந்தும் குறிப்பிட்டிருப்பதாவது,

நரேந்திர மோடியின் வெற்றி இந்தியாவுக்குள் உள்நாட்டுக் கலகத்தை தீவிரப்படுத்தும். மேலும் அண்டைய நாடுகளுடனான நல்லுறவும் சீர்குலையும்.

சீனாவுடனான எல்லையோர பிரச்சினை பதற்றத்தை அதிகரிக்கும். ஏனெனில் காந்தியின் அகிம்சா வழியைப் பிடிக்காமல் அவரைக் கொன்ற ஆர்.எஸ்.எஸ். காரர்களே நரேந்திர மோடியின் பின்னணியில் இருக்கின்றனர்.

சீனாவுடனான இலங்கையின் நல்லுறவு காரணமாக இந்தியாவுடனான உறவுகள் எதிர்காலத்தில் சர்குலையும் வாய்ப்புகள் ஏற்படலாம்.

எனினும் நரேந்திர மோடி ஒரு போதும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுக்க மாட்டார் என்பது நிச்சயம்.

இந்த விடயத்தில் வைகோவின் செல்வாக்கு எந்தளவுக்கு எடுபடும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்றும் அதில் அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி தியாகராசா மல்லிகாதேவி

நயினாதீவு, 7ஆம் வட்டாரத்தை சேர்ந்த தியாகராசா மல்லிகாதேவி கடந்த 15 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நயினாதீவு சல்லி வரவை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### மாரிமுத்து நாகையா

மன்னார் இலுப்பைக்கடவையை பிறப்பிடமாகவும் புதுக்குளம் மற்றும் அடம்பனை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து நாகையா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு புதுக்குளம் பஞ்சோத்தம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி கந்தசாமி மனோன்மணி

யாழ்.குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் வவுனியா பண்டாரிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி மனோன்மணி கடந்த 15 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 9 மணிக்கு வவுனியா பண்டாரிக்குளத்தில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### கணபதிப்பிள்ளை பரராஜசிங்கம்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பரராஜசிங்கம் கடந்த 12 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் போரூர் மின்மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி குழந்தைவேலு கனகம்மா

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பு கொட்டாஞ் சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேலு கனகம்மா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்று பூதவுடல் மாதம்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### சங்கரபாண்டியன் சுப்பிரமணியம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் நவாலி சின்னப்பா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரபாண்டியன் சுப்பிரமணியம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர தாகம் ஜெனீவா சென்றுள்ளதால் மே-18 வெற்றிக்குரியவர்கள் தமிழர்கள்

## வடமாகாண கல்வியமைச்சர் பெருமிதம்



(கிளிநொச்சி)

இலங்கையின் மூதாதையர்களான தமிழர்களை பேரினவாதம் அடிமைகளாக்க முறபட்டதனாலேயே, உரிமைக்கான போராட்டம் வெடித்து இனத்தின் விடிவுக்காக முள்ளிவாய்க்கால் வரை அர்ப்பணிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது என வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேசத்திற்கான தமிழ் தேசிய கூட்டமைப்பின் கட்சிக்கிளை அங்குரார்ப்பண நிகழ்வு தருமபுரத்தில் அமைந்துள்ள கல்வி அமைச்சரின் இல்ல வளாகத்தில் அண்மையில் நடைபெற்ற போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், கண்டாவளை பிரதேசத்தில் கட்சியின் கிளையொன்று அமைந்திருப்பதையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

ஏனெனில் கட்சியின் கோட்டை என்று சொல்லுமளவிற்கு இந்த மக்கள் மாகாண சபை தேர்தலில் எமக்கு வாக்களித்துள்ளனர்.

அதன் காரணமாக அரசாங்க தரப்பால் வீட்டுத்திட்டம்,மின்சாரம், போக்குவரத்து போன்ற அபிவிருத்தி நடவடிக்கைகளில் கிராமங்கள் சில புறக்கணிப்புக்குட்படுவதாகவும் அறிகின்றோம்.இந்த நாட்டில் இது ஒன்றும் ஆச்சரியமானதல்ல.


ஜனநாயக விரோதம் இப்பொழுது சர்வ சாதாரணமானதாகிவிட்டதனால்,இந்த நாட்டில் தமிழர்கள் தங்கள் இருப்பை தக்க வைக்க பெரும் பிரயத்தனப்பட வேண்டி இருக்கின்றது.

இந்த நாட்டில் சிங்களவர்கள்தான் மூதாதையர்கள் என்றும் பேரின மமதை சொல்கிறபோது.சிங்களவர்கள் இங்கு வருவதற்கு முன்பு ஏற்கனவே இங்கு வாழ்ந்தவர்கள் யார் என்று அவர்களின் வழிபாடு என்ன என்று பார்த்தால் தமிழர்கள் இந்த தீவில் எப்படி அடிமையாக்கப்பட்டுள்ளார்கள் என்பது உணரப்படும்.

அதனாலேயே இங்கு ஒரு நியாயமான உரிமைகளுக்கான கோரிக்கைகள் எழுந்தது. முள்ளிவாய்க்கால் வரைக்கும் நாம் இத்தனை பெரும் அர்ப்பணிப்புக்களை செய்வதற்கு தூண்டியது.

இந்த நிலத்தில் எமது இனம் ஆழ பதித்திருக்கும் வேர்தானே அன்றி வேறொன்றும் இல்லை.மே 18 வெற்றியை கொண்டாட வேண்டியர்கள் நாங்கள்தான் சிங்களவர்கள் அலல. எமது இனத்தின் விடிவுக்காக இத்தனை அர்ப்பணிப்புக்களை செய்து எமது இனத்தின் சுதந்திரதாகத்தை ஜெனீவாவரை கொண்டு சென்று தெரியப்படுத்திய வெற்றிக்கு உரியவர்கள் நாங்கள்தான்.சிங்களவர்கள் அல்ல.

எனவே சிங்களவர்கள் எங்களுடைய வெற்றியை கொண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள். அது தமிழர்களுடைய வெற்றிநாள் என்பதை நிச்சயம் காலம் வெகுவிரைவில் இந்த அரசாங்கத்தை சார்ந்தவர்களுக்கு கற்றுத் தரும் என்றார். (6-9)





கிளிநொச்சி கிழக்கு சம்புக்குளம் கிராம மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வு பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் ஒழுங்கு படுத்தலின் கீழ் அண்மையில் இடம்பெற்ற போது....

# அஞ்சலிக்கு பொது இடங்களில் தடையெனில் வீடுகளில் தீபமேற்றி நினைவு கூருங்கள்

விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த எம் மக்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு எமக்கு என்ன தடையென வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் கேள்வியெழுப்பியுள்ளார்.

இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது தொடர்பில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் குறித்து நேற்றைய தினம்வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இறுதி யுத்தத்தின் போது கொல்லப்பட்ட தமிழ் மக்கள்- போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தவோ அல்லது துக்கம் அனுஷ்டிக்கவோ கூடாது என அரசாங்கம் கட்டளையிட்டுள்ளதும் அவ்வாறு ஏதாவது நடவடிக்கைகள் மேற்கொண்டால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவார்களென எச்சரித்துள்ளமையும் மீண்டும் தமிழ் மக்களின் உரிமைகள் மீது அடக்குமுறைகள் கட்டவிழ்த்துவிடும் நிகழ்வாகவே அமைகின்றது.

இலங்கை அரசியல் யாப்பில் இல்லாத ஒரு புதிய சட்டமே இறந்த ஆன்மாக்களுக்கு அஞ்சலி செலுத்தக் கூடாதென்பதாகும். இவைகளையும் சர்வதேசம் கண்கூடாக கண்டுகொள்ளட்டும்.

அத்தோடு நடுநிலைமை வகித்த இந்தியாவும் இனியாவது விழிப்படையட்டும். மக்கள் பொது இடங்களில் அஞ்சலி செலுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்த போதும் மக்கள் மனமுவந்து தமது வீடுகளில் தீபமேற்றி அஞ்சலி செலுத்தவேண்டுமென அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(9-250)

# பெண்ணிடம் அநாகரிகமாக நடக்க முற்பட்டவர் கைது

(குருமன்காடு)

வவுனியாவில் சிங்கள யுவதி ஒருவருடன் அநாகரிகமான செயற்பாட்டில் ஈடுபட்டோர் என்ற சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவரை கைது செய்ததாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

பௌத்த மக்களின் பண்டிகைகளில் ஒன்றாகிய வெசாக் தினம் கடந்த இரண்டு தினங்களாக கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்நிலையில் வவுனியா கண்டி வீதியில் அமைந்துள்ள பௌத்த விகாரைக்கு வெசாக் தினத்தை பார்வையிடச் சென்ற சிங்கள இளம் பெண் ஒருவர் சன நெருசலுக்குள் சிக்கிய வேளை அப் பெண்ணிடம் நபரொருவர் அநாகரிகமாக நடந்துள்ளார்

குறித்த நபரை அருகில் இருந்தவர்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள குறித்த நபர் நேற்றைய தினம் வவுனியா நீதிமன்றில் ஆஜரபடுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (9-250)

# குளங்களில் கழிவுகள் போடுவதை நிறுத்துக

வவுனியா மாவட்டத்திலுள்ள மனிதர்களின் முறையற்ற செயற்பாடுகள் காரணமாக சவாலுக்குள்ளாகி வருகின்றன. குறிப்பாக குளங்களுக்குள் அத்துமீறிய குடியிருப்புகள் மற்றும் குளங்களினுள் கழிவுப் பொருட்களை வீசுதல் போன்ற காரணங்களினால் குளங்களும் அதனுள் வாழும் மீன்களும் பாதிப்படைந்து வருகின்றன.

வவுனியா நகர்ப்புறங்களைச் சூழவுள்ள வைரவபுளிங்குளம், வவுனியாகுளம், பண்டாரிகுளம் ஆகியவை வெகுவாக மாசடைந்து வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குளங்களின் மாசடைவு காரணமாக நன்னீர் மீன் மற்றும் விவசாய செய்கைகளும் பாதிப்படைவதாக விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை குப்பை கூழங்கள் குளங்களினுள் கொட்டுவதனால் குளங்களின் நீர் தேங்கி நிற்கும் அளவு குறைவடைவதுடன் மழை காலங்களில் குளங்களினுள் நீர் வடிந்தோட முடியாத நிலை ஏற்பட்டு குடியிருப்புகளுக்குள் செல்லும் நிலையும் தோன்றியுள்ளது.

எனவே, இவ்விடயம் தொடர்பில் வவுனியா நகரசபையினர் அதிகளவில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகளும் நன்னீர் மீன்பிடிப்பாளர்களும் கோரிக்கை விடுகின்றனர். (9-250)

# வவுனியா நகரத்திலுள்ள மணிக்கூடுகள் செயலிழப்பு

(குருமன்காடு)

வவுனியா நகரசபையால் பராமரிக்கப்பட்டு வருகின்ற நகரின் பிரதான சந்திப் பகுதியில் உள்ள மணிக்கூட்டு கோபுரத்தின் மணிக்கூடுகள் முற்றாக செயலிழந்த நிலையில் காணப்படுகின்றது.

வன்னியின் பல பகுதிகளில் இருந்தும் மக்கள் அதிகமாக வந்து செல்கின்ற பகுதியாக வவுனியா நகரம் மாறியுள்ளது.

இந்நிலையில், நகரின் நடுவே உள்ள இந்த மணிக்கூட்டை பயணிகள், வாகன சாரதிகள் எனப் பலரும் பயன்படுத்தி வந்தனர். ஆனால் தற்போது பல நாட்களாக இயங்காத நிலையில் காணப்படுகின்றது. மணிக்கூட்டு கோபுரத்தை வர்ண பூச்சுகளால் அலங்கரித்து தனியார் வர்த்தக நிறுவனங்களின் விளம்பரங்கள் நான்கு பக்கமும் காட்சிப்படுத்தப்பட்டுள்ள போதும் மணிக்கூடுகள் இயங்கவில்லையென்பதை எவரும் கண்டுகொள்ளவில்லையா என மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

எனவே வவுனியா நகரசபையினர் மணிக்கூடுகளை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-250)




# ஆக்கங்கள் கோரல்

(கண்டாவளை)

தேசிய கலை இலக்கியப் போட்டியை முன்னிட்டு கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்டவர்களிடமிருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் த. முகுந்தன் அறிவித்துள்ளார்.

இப் போட்டிகள் வருடாவருடம் பிரதேச மாவட்ட தேசிய ரீதியாக நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பிரதேச மட்ட போட்டிகள் பாடசாலை மட்டத்திலும் திறந்த மட்டத்திலும் இடம் பெறவுள்ளன.

எனவே போட்டிகளில் பங்கு கொள்பவர்கள் எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் பாடசாலை மட்ட போட்டியாளர்கள் பாடசாலையூடாகவும் திறந்த போட்டியாளர்கள் தத்தம் கிராமசேவையா ளர் ஊடாகவும் ஆக்கங்களை பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

கவிதை,பாடலாக்கம், கட்டுரை, சிறுகதை, இலக்கிய விமர்சனம் போன்ற ஆக்கங்களை அனுப்பி வைக்க முடியும். (9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதகம் செய்வாரைக் கண்டால்– நீ
பயங்கொள்ளல் ஆகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா
அவர் முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா – பாரதியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இதய அஞ்சலியை எவராலும் நசுக்கவும் மிதிக்கவும் முடியாது

இன்று மே 18. வன்னிப் பெரு நிலப்பரப்பில் நடந்த இழப்புக்களின் துயரத்தை ஒட்டு மொத்த மாக்கிய துயரநாள்.

முள்ளிவாய்க்காலில் முடிந்துபோன எங்கள் உறவுகளின் இழப்புகளை நினைந்து வெந்து அழுகின்ற இந்த வேளையில், நினைவு கூரு வதற்கும் தடை விதிக்கும் சின்னத்தனங்கள் எங்கள் வேதனையை இரட்டிப்பாக்குகின்றன.

இழந்தவர்களுக்கான நினைவு அஞ்சலி என்பது அடிப்படை மனித உரிமையாகும். இந் நிலையில் வன்னியில் நடந்த போர்முறை, அது தொடர்பான குற்றச்சாட்டுகள் என்பன ஐ.நா வரை சென்று, சர்வதேச விசாரணை தேவை என்று வலியுறுத்தும் தீர்மானம் வரை நிறை வேற்றப்பட்ட நிலையில்,

வன்னிப் போரில் உயிரிழந்த தங்கள் உறவு களை தமிழ் மக்கள் நினைவு கூருவதற்குத் தடை செய்யும் உரிமை எவருக்கும் இருக்க முடியாது.

போர்க்களத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூருவதைத் தடை செய்கின்ற செயலைச் செய்கின் றவர்கள் இதற்காக என்றோவொருநாள் வருந்த வேண்டி வரும் என்பதையும் இவ்விடத் தில் நினைவுபடுத்துவது பொருத்துடையதாகும்.

ஓர் இனத்திற்கு எதிராகப் பெரும் போர் நடத்தி அந்த இனத்தை நிர்மூலமாக்கிய பின்னர், இழப்புகள் தொடர்பில் கண்ணீர் விட்டு அழுவ தற்கும் தடை செய்வது என்பது மிகப்பெரும் அதர்மத்தனமாகும்.

இதில் இன்னும் அதர்மமான செயல் ஏற்றப் பட்ட நினைவுத்தீபங்களை காலால் மிதித்து அதனை சிதைப்பதாகும்.

நீதியை, பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டிய பொலிஸார் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட தீபங் களை காலால் உதைத்து சேதப்படுத்துவதென் பது அவர்களிடையே இருக்கக்கூடிய பேரின வாத சிந்தனையை எடுத்துக் காட்டுகிறது.

இத்தகைய செயல்களைச் செய்கின்ற பொலிஸார் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு என் றால் எப்படியிருக்கும் நிலைமை?

வடபுலத்தில் நடக்கும் களவு குறித்து, கொள்ளை குறித்து, கொலை குறித்து இம்மியும் கருசனை செலுத்தாதவர்கள், நினைவுக்காக ஏற்றப்பட்ட தீபங்களை காலால் உதைத்து சேதப்படுத்துவதில் பெரும் ஆவேசமாகச் செயற்பட்டனர் என்றால்,

பொலிஸாரின் கடமை என்ன? அவர்கள் செய்வ தென்ன? என்ற கேள்வி தமிழ் மக்களிடம் எழு வது நியாயமானதே. எதுவாயினும் வன்னிப் போரில் உயிரிழந்த எம் உறவுகளின் நினைவுகள் எங்கள் இதயங்களில் தீபமாய் எரிகின்றன.

எங்கள் இதயங்களோடு கலந்து விட்ட உங் கள் நினைவுகளை எந்த அடாவடித்தனங்க ளாலும் எதுவும் செய்துவிட முடியாது.

அதேநேரம் உங்கள் நினைவுகளை தடுப்ப வர்களே எங்களைவிட உங்கள் மீது அதிக நினைவைக் கொண்டுள்ளனர்.

நாங்கள் உங்களை நினைப்பதெல்லாம் உங் கள் ஆத்மா சாந்திடைய வேண்டும் என்பதாகும்.

ஆனால் அவர்களோ, எங்கள் நினைவு வழி பாடு உங்களை உயிர்ப்பிக்கும் எனக் கடுமை யாக நம்புகின்றனர்.

போர் முடிந்தாலும் போர்ப் பயம் முடியவில்லை என்பதன் சான்றுதான் இதுவாகும். எதுவாயி னும் உங்கள் நினைவுகள் தமிழ் மக்களின் குருதியோடு கலந்து விட்டவை. அதனை அகற் றுவது முடியாத காரியம். ஆகையால் அமைதி அடைக இறைவனின் திருத்தாளில்.

# உயிர்நீத்த உறவுகளை நினைவு கூருவதற்கு தடைவிதிக்கும் ஆட்சியில் வாழ்கிறோம்

## வட மாகாண சுகாதார அமைச்சு தெரிவிப்பு

இன்று நாம் எங்களின் உயிர்நீத்த உறவுகளை நினைவுகூருவதற்கு தடை விதிக்கும் கேவலமான ஆட்சியின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கின்றோமென மே 18 நினைவேந்தல் நாள் தொடர் பாக வடமாகாண சுகாதார அமைச்ச ரினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையை மாறிமாறி ஆட்சி செய்த காலனித்துவ ஆட்சிக்காலத் திற்கு முன்பே ஈழத்தமிழர்கள் தனி இராச்சியமாகவே வாழ்ந்து வந்து ள்ளனர்.

1948-ல் ஆங்கிலேயர் ஆட்சிப் பொறுப்பை சிங்களவரிடம் ஒப்படைத்த நாளிலிருந்து தமிழர்கள் இரண்டாம்தர பிரஜைகளாகவே சிங்கள ஆட்சியாளர் களால் நடத்தப்பட்டு வந்துள்ளனர்.

இதனாலேயே தமிழ் மக்கள் ஆரம் பத்தில் அகிம்சை வழியிலும் பின்னர் ஆயுதப் போராட்டத்தையும் தமது அரசியல் கோரிக்கையை முன்வைத்து 60 வருடமாக போராடி வந்தனர்.

எனினும் துரதிர்ஷ்டவசமாக 2009 மே 18 உடன் தமிழினத்தின் போராட் டம் மௌனிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாடுகளின் உதவியுடன் பயங்கரவாத பட்டம் சூட்டப்பட்ட எமது மக்கள் போரா ட்டம் திட்டமிட்ட முறையில் மௌனிக்க வைக்கப்பட்டுள்ளது.

1956 களிலிருந்தே எம்மை அடக்கி ஆள நினைத்த சிங்களத் தலைமை கள் நன்கு திட்டமிட்ட வகையில் சிறுகச் சிறுக எம்மக்களை கொன்றொழித்து இறுதியில் 2009 இல் சர்வதேச மனிதா பிமான, யுத்த சட்டங்களை கருத்தில் எடுக்காது கொத்துக் கொத்தாக மக்களை கொன்றொழித்தது. இதுதிட்டமிட்ட வகையில் நடத்தப்பட்ட இனப்படு கொலையாகும்.

மனிதகுலத்தின் அடிப்படை அம்சங் களான உணவு, மருந்துப் பொருட்கள் என்பவற்றிற்கு கூட தடை விதித்து பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் குறிப்பிட்டவொரு சிறிய நிலப்பரப்பில் மக்களை தங்க வைத்து தனது இன வெறி தாண்டவத்தை இந்த ஆட்சியா ளர்கள் நடத்தி காட்டியிருக்கிறார்கள்.

இந்தநிலையில் இறுதி யுத்தத்தில் உயிர்நீத்த தங்களின் உறவுகளிற்கு ஆத்ம அஞ்சலி செலுத்துவதற்கு நாதிய ற்ற இனமாக ஈழத் தமிழினம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. .

இதன் வெளிப்பாடுதான் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு கட்டாய விடு முறை வழங்கப்பட்டதும் வட மாகாண சபைக்கு முன்பாக உறுப்பினர்களால் ஏற்றப்பட்ட தீபங்களை காலால் தட்டிய ணைத்த சிங்கள காவல்துறையின் அராஜகமும். ஈழத்தமிழ் மக்களுக்கு தி.மு.கவும் காங்கிரசும் செய்த வர லாற்று துரோகத்திற்கு தக்க தண்ட னையை அண்மைய இந்திய தேர்தல் முடிவுகள் பறைசாற்றியுள்ளது.

ஈழத்தமிழருக்காக நீலிக்கண்ணீர் வடித்த கலைஞரும் தமிழின அழிப் பிற்கு சிங்களத்திற்கு துணைபோன காங்கிரசும் எமது தொப்புழ்கொடி உறவுகளான தமிழக மக்களால் தூக்கி எறியப்பட்டுள்ளனர்.

தற்போதைய சிங்கள ஆட்சியா ளர்களும் மண்கௌவும் காலம் வெகு தொலைவில் இல்லை என்பதே நிஜம். காலம் கனிகிறது. மாற்றத்தை எதிர் பார்த்து தைரியத்துடன் இருப்போம்.

தமிழினத்தின் உரிமைக்காய் உயிர்நீத்த அனைவரினதும் ஆத்மா சாந்தியடைய மே 18இல் பிரார்த் திப்போ மாக என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

## வெசாக் தினத்தை முன்னிட்டு ஆயிரம் கைதிகள் விடுதலை

வெசாக் பௌர்ணமியை முன்னி ட்டு, ஜனாதிபதி உத்தரவின் பேரில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாக சிறைச் சாலை பேச்சாளர் டி.என். உப்புல் தெனிய தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த வாரம் மேற்படி உத்தரவை பிறப்பித்தி ருந்ததுடன் விடுதலை செய்யப்படவுள் ளவர்களின் பட்டியல் தற்போது இறுதிப் படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய அவர் விடு த்துள்ள உத்தரவின்படி தாம் பணி களை மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறிய குற்றங்கள் மற்றும் பிணை செலுத்த முடியாது சிறையில் அடைக் கப்பட்டுள்ள கைதிகளே இவ்வாறு விடு தலை செய்யப்படவுள்ளனர். (2)

## விலங்குவிசர் நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம் மாநகர சபை எல் லைக்குள் அமைந்த நல்லூர் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி வழ்ங்கப்படவுள்ள தாக யாழ்.மாநகர சபை சுகாதார வைத் திய அதிகாரி அறிவித்துள்ளார்.

இதற்கமைய வளர்ப்பு நாய்களுக் கான உரிமக் கட்டணமாக இருபது ரூபா வரியும் செலுத்தப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி நாளை திங்கட்கிழமை காலை 9மணி தொடக்கம் 11 மணி வரை ஜனசக்தி சனசமூக நிலையத்திலும் அத னைத் தொடர்ந்து 11.30 மணி தொடக் கம் பிற்பகல் 1.30 மணி வரை சிவன் புது வீதியிலுள்ள சுகாதார கல்வி மையத்திலும் வைத்து தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை கொண்டலடி சனசமூக நிலையத்திலும் அதனைத் தொடர்ந்து 11.30 மணி தொட க்கம் பிற்பகல் 1.30 மணிவரை சங்கிலி யன் வீதி, நாதன் ஒட்டு வேலைத் தளத்தி ற்கு முன்பாகவும் வைத்து தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை ஆடியபாதம் வீதியிலுள்ள முன்பள்ளி அருகாமையிலும் அதனைத் தொடர்ந்து 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை கல்வியங்காடு சந்தையிலும் வைத்து தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக அவர் மேலும் அறிவித்துள்ளார். (2)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களிற்கரன கலந்துரையா டல் நாளை திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரியகுளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரி யில் நடைபெறவுள்ளது.

எனவே அனைத்து பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களையும் தங்கள் ஆவணங்களுடன் சமுகம் தருமாறு ஒன்றியம் கேட்டுள்ளது. (அ)

# 13ஆவது திருத்தச் சட்ட அழுத்தங்கள் நரேந்திர மோடி ஆட்சியிலும் தொடரும்

## முன்னாள் இராஜதந்திரி தயான்

இந்தியாவின் புதிய பிரதமர் நரேந் திர மோடிக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவிற்கும் இடையில் பல ஒன்று மைகள் இருப்பதாக அரசியல் விமர்சகரும் முன்னாள் இராஜதந்திரியுமான கலா நிதி தயான் ஜயதிலக்க தெரிவித்தார்.

இதனால் இலங்கைக்கு கொடுக்கப்ப டும் அழுத்தங்கள் நலன் கொடுக்கும் வகையில் இருக்க அதிக வாய்ப்புள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் ஏற்பட்டுள்ள அரசாங் கம் மாற்றும் புரட்சியானது கண்டிப்பாக இலங்கையிலும் தாக்கங்களை ஏற்ப டுத்தும் எனவும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் அரசியல் அமைப் பின் 13-வது திருத்தச் சட்டம் தொடர்பாக இந்தியா இதுவரை கொடுத்து வந்த அழுத்தங்கள் நரேந்திர மோடியில் ஆட்சியிலும் தொடரும்.


இதனால் இரு நாடுகளுக்கும் இடை யில் நல்லெண்ணத்தை தக்கவைத்திரு க்க வேண்டுமாயின், காலதாமதம் இன்றி அந்த திருத்தத்தை அமுல் படுத்த வேண்டும்.

இந்தியா கொண்டுள்ள இந்த நிலை மையின் கீழ் இலங்கை அரசியல் அமைப்பின் 13-வது திருத்தச் சட்டம் செய ற்படுத்தப்படுவதை தொடர்ந்தும் தாம தித்தால், நண்பன் பகைவனாக கூடும்.

நரேந்திர மோடி தலைமையிலான பாரதிய ஜனதா கட்சி இந்து இனத்தை அடிப்படையாக கொண்டு கட்டியெழு ப்பப்பட்ட அரசியல் சக்தி எனிபதால், புதிய ஆட்சியின் கீழ் இந்தியா முன் னரை விட பலமான இந்து நாடாக எழுச்சி பெறும்.

இதனால் ஏற்படும் தாக்கங்கள் இலங்கைக்கு மாத்திரமல்லாது, இந் தியா நோக்கிய மேற்குலக நாடுகளின் அணுகுமுறையிலும் இந்தியா - பாகிஸ் தான் உறவுகளிலும் தாக்கங்களை ஏற்படுத்தும் எனவும் தயான் ஜயதிலக குறிப்பிட்டுள்ளார். (2)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை



### வேண்டிப் பணிந்திடடி

அத்து விதப் பொருளை அறிவுக்கறி வானதொதொன்றைச்
சித்தத்தி லேநீவைத்து– சின்னத்தங்கம்
சிந்தை தெளிந்திடடி

அருவா யுருவாகி யம்பலத்தே கூத்தாடும்
குருபரனை நீவாழ்த்திச்– சின்னத்தங்கம்
தும்பிட்டுக்கொண் டாடிடுவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட இளைஞர் விளையாட்டுப்போட்டி

# ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டம் யாழ். பிரதேச இளைஞர் சம்பியன்



இளைஞர் கழக சம்மேளனங்களிற்கிடையிலான யாழ் மாவட்ட மட்ட 26ஆவது இளைஞர் விளையாட்டு போட்டிகள் ஆரம்பமாகியுள்ளது.

இதன் ஒரு அங்கமாக இடம்பெற்ற ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணப் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி வெற்றி பெற்று சம்பியனாகியது.

கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெற்ற போட்டிகளின் இறுதிப் போட்டிக்கு நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணியும் யாழ்ப்பாணப் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணியும் தகுதி பெற்றது.

ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் முதல் பாதியில் 30:29 என்னும் புள்ளிகள் அடிப்படையில் யாழ்ப்பாணப் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியிலும் ஆதிக்கம் செலுத்திய யாழ்ப்பாணப் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி 56:55 என்னும் புள்ளிகள் அடிப்படையில் வென்று 2014ஆம் ஆண்டுக்கான யாழ் மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டத்தில் சம்பியனாகியது.(கு-23)

## தீவக உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

வரலாற்றில் முதற்தடவையாக தீவகத்தில் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி தீவக உதைபந்தாட்ட சங்கம் நடத்தும் தீவக உதைபந்தாட்ட சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான லீக் முறையிலான உதைபந்தாட்டப்போட்டி ஊர்காவற்றுறை நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகியுள்ளது.

லீக் முறையிலான உதைபந்தாட்ட போட்டியில் 14 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றுகின்றன. போட்டிகள் ஊர்காவற்றுறை நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் காலை தொடக்கம் மாலை வரை நடைபெறுகின்றது.

இத்தொடரில் மோதுகின்ற அணிகளாக குழு ஒன்றில் மெலிஞ்சிமுனை இருதயராஜா, நயினாதீவு அண்ணா, புங்குடுதீவு காந்தி, புங்குடுதீவு பாரதி ஆகிய அணிகளும் குழு இரண்டில் தம்பாட்டி காந்திஜி, புங்குடுதீவு புனித சவேரியார், நயினாதீவு அம்பாள் ஆகிய அணிகளும் குழு மூன்றில் புங்குடுதீவு நசரேத், ஊர்காவற்றுறை சென்ஜேம்ஸ், நயினாதீவு இஸ்லாமிய அணிகளும் குழு நான்கில் புங்குடுதீவுநண்பர்கள், நாரந்தனை அண்ணா, புங்குடுதீவு சன்ஸ்டார், மண்டைதீவு சென். பீற்றர்ஸ் ஆகிய அணிகளும் போட்டியில் பங்குபற்றுகின்றன.

புள்ளிகள் அடிப்படையில் ஒவ்வொரு குழுவிலும் இருந்து முதலாம் இடத்தை பெறும் ஒவ்வொரு அணிகளும் தெரிவு செய்யப்பட்டு அவற்றுக்கிடையே அரையிறுதி போட்டிகள் நடைபெற்று இறுதியில் முதலாம் இரண்டாம் இடத்திற்கான பரிசில்கள் வழங்கப்படும்.

நேற்று முன்தினம் மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழகமும் நயினாதீவு அண்ணா விளையாட்டுக்கழகமும் மோத வேண்டிய போட்டியில் நயினாதீவு அண்ணா விளையாட்டுக்கழகமும் சமுகமளிக்காத காரணத்தினால் இருதயராஜா அணி அடுத்த சுற்றுக்கான புள்ளியைப் பெற்றுள்ளது. இரண்டாவதாக நடைபெற்ற போட்டியில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழகமும் புனித சவேரியார் விளையாட்டுக்கழகமும் மோதியது. இப்போட்டியில் காந்திஜி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது. மூன்றாவதாக நடைபெற்ற போட்டியில் புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக்கழகமும் ஊர்காவற்றுறை சென் ஜேம்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதியது.

இப்போட்டியில் சென்ஜேம்ஸ் விளையாட்டுக்கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தீவக உதைபந்தாட்ட சங்க வரலாற்றில் முதற்தடவையாக நடத்தும் உதைபந்தாட்ட தொடர் இது என்பது குறிப்பிடத்தக்கது. (கு-23)

## உதைபந்தாட்ட போட்டி முடிபுகள்

அராலி ஏ.எல் விளையாட்டுக் கழகம் அராலி ஏ.எல் இளைஞர் கழகமும் இணைந்து வலிகாமம் காற்பந்தாட்ட லீக் அனுசரணையுடன் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டியின் முடிவுகள்.

ஜேம்ஸ் விளையாட்டுக் கழகமும் சென் லூட்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் சென் லூட்ஸ் விளையாட்டுக் கழகம் 1:0 என்னும் கோல் கணக்கில் வென்றது.

பாரதி விளையாட்டுக் கழகமும் யூனியன் விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் 5:2 என்னும் கோல் கணக்கில் யூனியன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

சென்நியூஸ்ரார் விளையாட்டுக் கழகமும் யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் 6:0 என்னும் கோல் கணக்கில் யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

நாமகள் விளையாட்டுக் கழகமும் மகாத்மா விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் நாமகள் விளையாட்டுக் கழகம் 3:0 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க-23)

## இன்றைய போட்டி

யுவர் பிரண்ட் பவுண்டேசனால் நடத்தப்படும் ஜப்னா பிரிமியர் லீக்கில் இன்று காலை 8 மணிக்கு திருநெல்வேலி கிரிக்கெட் கழகத்தை எதிர்த்து யூனியன் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

அதனை தொடர்ந்து மதியம் 11 மணியளவில் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது. (க)

## வித்தியானந்தா வெற்றி

முல்லைத்தீவு வித்தியானந்த பழைய மாணவர் கழகத்திற்கும் றிபேக் தாரகை விளையாட்டுக்கழகத்திற்கும் இடையிலான 50 ஓவர் கடினப்பந்து கிரிக்கெட் போட்டியில் வித்தியானந்த பழைய மாணவர் கழகம் 75 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாடிய வித்தியானந்த பழைய மாணவர் கழகம் 40.4 பந்துப்பரிமாற்றங்களில் 215 ஓட்டங்களைப் பெற்றது. பதலளித்து ஆடிய றிபேக் தாரகை விளையாட்டுக்கழகம் 38.3 ஓவர்களில் 140 ஓட்டங்களை மட்டுமே பெற்று 75 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்தது. றிபேக் தாரகை விளையாட்டுக்கழகம் சார்பாக சுவிந்தன் 37 ஓட்டங்கள், பிரவின் 26 ஓட்டங்கள், நிலான் 17 ஓட்டங்கள் , சுரேஷ் 8 ஓட்டங்கள் பெற்றுக்கொடுத்தார்கள். (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



சாவகச்சேரி அல்லாரை ஜங்கரன் முன்பள்ளியின் விளையாட்டுப்போட்டி நிகழ்வு அண்மையில் சாவகச்சேரி பிரதேசசபையின் தவிசாளர் சிற்றம்பலம் துரைராஜா தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் . சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணசபை உறுப்பினர் கேசவன் சயந்தன் . முன்பள்ளி உதவிக்கல்வி பணிப்பாளர் சு.பாக்கியராசா , கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேசசபையின் செயலாளர் தர்சினி , அல்லாரை அ.த.க.பாடசாலையின் அதிபர் க.யோகநாதன் அல்லாரை கிராம அலுவலர் இராஜசுதாகர், ஜங்கரன் சனசமுக நிலைய தலைவர் தம்பு. சிலிங்கோ லைவ் விற்பனை நிறைவேற்று அதிகாரி ஆ.சபாநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். இப்போட்டியின் நிகழ்வுப் படங்கள். (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழகத்தை சூழ படையினர் சுற்றிவளைப்பு

## மத வழிபாட்டிடங்களும் கண்காணிப்பில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தை இராணுவத்தினர் நேற்று மாலை முதல் சுற்றிவளைத்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது. அதேவேளை பல்கலைக்கழக சூழலை சுற்றி பொலிஸாரும், இராணுவம் மற்றும் பொலிஸ் புலனாய்வுத் துறையினரும் நிற்பதனால் பல்கலைக்கழக சூழலில் பதற்றமான நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்.பரமேஸ்வரா சந்தி மற்றும் பொற்பதி சந்தியில் 20-க்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் பொலிஸாரும் நேற்று மாலை முதல் ஆயுதங்களுடன் கூடியுள்ளனர்.

அதேவேளை பல்கலைக்கழகத்தின் முன்னால் உள்ள இராமநாதன் வீதி, தொழினுட்பக் கல்லூரிக்கு முன்னால் உள்ள பிறவுண் வீதி மற்றும் மருத்துவ பீடத்திற்கு முன்னால் ஆடியபாதம் வீதி ஆகியவற்றில் புலனாய்வுத்துறையினர் மோட்டார் சைக்கிளில் சென்றுவதை அவதானிக்க முடிந்தது.

இன்று முள்ளிவாய்க்கால்நினைவு தினம் அனுஷ்டிப்பது தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மற்றும் மாணவர் ஒன்றியம் என்பன அறிக்கை விட்டிருக்கும் நிலையில் பல்கலைக்கழகத்தை சூழ இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு இருப்பது பதற்றமான சூழலை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 16-ம்திகதிதொடக்கம்நாளை மறுதினம் 20-ம் திகதி வரை யாழ். பல்கலைக்கழகம் மூடப்பட்டிருக்கும என பதிவாளர் முன்னர் அறிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

மேலும் யாழ்.குடாநாடு உட்பட வடக்கில் மத வழிபாட்டுத் தலங்களும் இராணுவத்தினரின் கண்காணிப்புக்குள் கொண்டு வரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(செ-6)

## உயிர் பலி கொண்ட...

இந்நாள் உலகளாவிய ரீதியில் பரந்திருக்கும் தமிழ் பேசும் மக்களினாலும் ஈழத் தமிழரினாலும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வரும் அதேவேளை புலத்திலும் புலம்பெயர்ந்துள்ளவர்களினாலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இன்று மாலை 6 மணியளவில் யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா தலைமையில் இடம்பெறவுள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் அக்கட்சியின் பாராளுமன்ற மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பங்கு கொள்ளவுள்ளனர்.

அதேவேளை இந்தியா, பிரிட்டன், கனடா போன்ற நாடுகளிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இன்று அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதேவேளை இறுதிப் போரில் உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்திக்காக கீரிமலை நகுலேஸ்வர் ஆலயத்தில் இன்று காலை எட்டு மணியளவில் மகாயாகம் இடம்பெறவுள்ளது.

இது இவ்வாறு இருக்கையில்,

மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் போரில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் நாளாக அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், யாழ்.குடாநாட்டிலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் ஆலயங்களில் வருடாந்த உற்சவங்களை நடத்துவதற்குப் படையினர தடை விதித்திருப்பதுடன், பொது இடங்களில் ஒன்று கூடுவதற்கும், கூட்டங்களை நடத்துவதற்கும் தடைகள் விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இன்று 18 ஆம் திகதி வடக்கு மாகாணத்தில் பல இடங்களில், முள்ளிவாய்க்கால் போரில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கான ஏற்பாடுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் யாழ். பல்கலைக்கழகம் உள்ளிட்டவை மேற்கொண்டிருக்கின்றன. இந்நிலையில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஆலயங்களில் பூஜை வழிபாடுகளை நடத்த படையினர் தடைவிதித்துள்ளனர்.

நேற்று முன்தினம் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு அருகில் உள்ள வைரவர் ஆலயத்திற்குச் சென்ற படையினர், உற்சவத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என கூறியதுடன், பூஜை வழிபாடுகள் எவையும் நடைபெறக் கூடாது என கூறியிருக்கின்றனர்.

நேற்று முன்தினம் மஹோற்சவத்தின் 3 ஆம் நாள் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்த போதே படையினர் அங்கே சென்று திருவிழா நடைபெறக் கூடாதெனக் கூறியிருக்கின்றனர்.

இந்நிலையில், மக்கள் இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு தெரியப்படுத்தியிருக்கின்றனர். இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர், மக்களிடம் விடயத்தை நேரடியாகக் கேட்டறிந்து கொண்டார்.

இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்த போது, இவை தொடர்பாக அப்பகுதி மக்கள் தனக்கு தெரியப்படுத்தியதாகவும், இதனையடுத்து அங்கே சென்ற போது, படையினர் அச்சுறுத்திய மையினால் மக்கள் பெரும் அச்சத்தில் இருப்பதாகவும் கூறினார். இது தொடர்பாக யாழ்.பிரதிப்பொலிஸ் மா அதிபருடன் தொடர்புகொண்டு கேட்டபோது,

இது தொடர்பாக தமக்கு எதுவும் தெரியாது எனவும் இதுபற்றி ஆராய்ந்து கூறுவதாகவும் கூறினார். எனினும் இவ்வாறான சம்பவங்கள் பல இடங்களில் நடைபெற்றிருக்கின்றன. அங்கிருந்தெல்லாம் எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன. எனவே, இவ்வாறான சம்பவங்கள் மிக மோசமான அறிவிலித்தனத்தின் வெளிப்பாடாகவே நாங்கள் பார்க்கிறோம். இதுமாதிரி நிலையில் வெசாக் தினத்தையும் கதிர்காம உற்சவத்தையும் மாற்றியமைக்க முடியுமா? அதேபோன்றே ஒவ்வொரு மத ஆலயங்களும் பூஜை வழிபாடுகளை சம்பிரதாயங்களின் பிரகாரமே செய்கின்றன. அதனை யாழ். படைத்தளபதி புரிந்து கொள்ளவேண்டும். இந்த விடயத்தில பொலிஸார் தலையிட்டு உடனடியாக இவற்றையெல்லாம் நிறுத்த வேண்டும். இதற்கான வேண்டுகோளை நாங்கள் விடுத்திருக்கின்றோம். மக்களை அச்சுறுத்தும் இவ்வாறான செயற்பாடுகளுக்கு இடமளிக்கக் கூடாதெனவும் அவர் கூறியிருக்கின்றார்.

மேலும் இராணுவத்தினரும் பொலிஸாரும் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை அனுஷ்டிக்க பல வழிகளில் பல்வேறு தடைகளை விதித்துள்ள போது கடந்த 16-ம் திகதி முதல் இன்று வரை நினைவேந்தல் நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளும நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்த க்கது.(செ-6,11)

## எமனானது டிப்பர்...

அம்மன் கோவிலுக்கு அருகில் இடம்பெற்றது. மேற்படி கோரவிபத்துச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

காரைநகரிலிருந்து யாழ்ப்பாணத்தை நோக்கி வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் யாழ்ப்பாணத்திலிருந்து வடக்கம்பிராயை நோக்கி மணல் ஏற்றிக் கொண்டு சென்ற டிப்பர் வாகனமும் மோதிக் கொண்டதாலேயே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கொழும்பினை வசிப்பட மாக கொண்ட யாழ்.காரைநகரைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தரான தேவலிங்கம் வசீகரன் (வயது-28) என்ற இளம் குடும்பஸ்தரே சம்பவ இடத்தில் தலை சிதறி உடல் நசுங்கி துடிதுடித்து பலியாகியுள்ளார்.

இதேவேளை இந்த விபத்தில் உயிரிழந்த வசீகரன் திருமணமாகி ஆறுமாதங்களே ஆகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கொழும்பிலிருந்து மோட்டார் சைக்கிளில் யாழ்.காரைநகரில் நேற்று இடம்பெற்ற உறவினர் ஒருவரின் திருமண வீட்டுக்கு வந்து கலந்து கொண்டு விட்டு மதிய உணவினை உட்கொண்ட பின் கொழும்பு நோக்கி புறப்பட்டுச் சென்ற போதே டிப்பர் வாகனம் மோதி உயிரிழந்துள்ளார்.

இதேவேளை டிப்பர் வாகனத்திற்குள் சிக்குண்ட வசீகரனின் உடல் சுமார் 75 மீற்றருக்கு மேல் இழுத்துச் செல்லப்பட்டதாகவும் அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் உருக்குலைந்து போனது எனவும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை விபத்தில் உயிரிழந்த வசீகரனின் உடலில் மோட்டார் சைக்கிளின் கேபில்கள் உடலுக்குள் புதையுண்ட நிலையில் காணப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

மேலும் சம்பவம் இடம்பெற்ற சிறிது நேரத்திற்குள் விபத்துக்கு காரணமான டிப்பர் சாரதி மானிப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இருப்பினும் விபத்துக்குள்ளான டிப்பர் வாகனம் உடனடியாக அங்கிருந்து அகற்றப்பட்டதாகவும் ஆனால் உயிரிழந்தவரின் சடலம் சுமார் 45 நிமிடங்கள் வரை வீதியை விட்டு அகற்றப்பட்டாமல் காட்சிப் பொருளாக வீதியில் கிடந்தாகவும் சம்பவ இடத்தில் உரிய விசாரணைகளை மேற்கொள்ளாமல் பொலிஸார் டிப்பர் வாகனத்தை அங்கிருந்து அகற்றியமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை விபத்துக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை பொலிஸார் அலட்சியப்படுத்தியதாகவும் முறைப்பாட்டை எடுக்க மறுப்புத் தெரிவித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி விபத்தில் உயிரிந்த வசீகரன் அணிந்திருந்த 3 பவுண் தங்கச் சங்கிலியின் சிறிய பாகம் மட்டுமே உறவினர்களினால மீட்கப்பட்டுள்ளதாகவும் மிகுதி எங்கு சென்றது என்பது தெரியவில்லை எனவும் கூறப்படுகின்றது.

இதேவேளை விபத்துக்கு காரணமான டிப்பர் சாரதியை தாங்கள் கைது செய்துள்ளதாகவும் குறித்த விபத்து தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மானிப்பாய் பொலிஸார் கூறினார்.

இந்த கோர விபத்தில் உயிரிழந்த வசீகரனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்த விபத்தை புகைப்படம் எடுக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் பொலிஸாரினால் விரட்டப்பட்ட சம்பவம் பெரும சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

வடக்கில் டிப்பர் வாகனங்களினால் ஏற்படும் விபத்துக்களில பலர் உயிரிழந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-6,4,246,17)

## மன்மோகன் சிங்...

இராஜினாமா முடிவு எடுக்கப்பட்டது.

இதனையடுத்து பிரதமர் பதவியை மன்மோகன் சிங்கும், அமைச்சுப் பதவிகளை அவரது அமைச்சர்களும் இராஜினாமா செய்துள்ளனர்.

இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை சந்தித்து மன்மோகன் சிங் தனது இராஜினாமாக் கடிதத்தை கையளித்துள்ளார்.

அதேவேளை, எதிர்வரும் 19ஆம திகதி புதுடில்லியில் நடைபெறும் காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கைக குழு கூட்டத்தில், கட்சி பதவியில் இருந்து சோனியா காந்தி மற்றும் ராகுல் காந்தி ஆகியோர் பதவி விலக உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. (செ-11)

## ஆட்சி மாறினாலும்...

புலனாய்வுப் பிரிவினர் அரசுக்கு அறிக்கையிட்டுள்ளனர்.

அரசாங்கம் மாறினாலும் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு சம்பந்தமான செயற்பாடுகள் மற்றும் தீர்மானங்களை இரத்துச் செய்ய போவதில்லை என தகவல்கள் குறிப்பிடுகின்றன.

காங்கிரஸ் தலைமையிலான இந்திய மத்திய அரசாங்கம் கடந்த 14 ஆம் திகதி விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிரான தடையை 5 ஆண்டுகளுக்கு நீடித்தமை தெரிந்ததே. (செ-11)

## எத்தனை தடை...

நேற்று முன்தினம் வடக்கு மாகாண சபையில் நடைபெறவிருந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை நடத்த விடாமல் பொலிஸாரும், இராணுவத்தினரும் தடுத்தமை வடக்கில் இடம் பெறுகின்ற அடக்கு முறையினை தொட்டத் தெளிவாக காட்டி நிற்கின்றது.

மாகாண சபை முன்பாக நடைபெற்ற அஞ்சலி நிகழ்விற்கு மாகாண சபை ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அனைவருக்கும் அறிவிக்க முயன்றிருந்தேன். பலருக்கு அறிவித்துமிருந்தேன். ஆனால் அவர்கள் தவிர்த்திருந்தனர்.

எனினும் பெண் உறுப்பினர்களான அனந்தி, மேரி கமலா ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

இது தொடர்பில் பேரவைத் தலைவர் சிவஞானத்திற்கு தெரியப் படுத்தியபோது அவர் தனக்கு அறிவிக்கவில்லை யென கூறினார்.

இது திருமண வீடில்லை. இது இறந்தவீடு. ஆகையினால் அவரவர் தான் இவற்றில் தானாக கலந்து கொள்ள வேண்டும்.

எவ்வாறாயினும் இதில் கலந்து கொள்ளாதவர்கள் முதலமைச்சர் உட்பட அனைவரும் இன்று தமிழத் தேசியக் கூட்டமைப்பு அலுவலகத்தில் நடைபெறவுள்ள நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொள்ள வேண்டும்.

கோவில்களில் மணியோசை எழுப்ப கூடாது என இராணுவம் தடைவிதித்துள்ளது.

நாம் இவ் அச்சுறுத்தல்களிற்கு அடிபணியாமல் எமது மக்களிற்காக அனைத்து தேவாலயங்கள், ஆலயங்கள் என்பவற்றில் மணியோசை எழுப்பி பிரார்த்திப்போம் என்றார் அவர்.

மேலும் படையினருக்கும் பொலிஸாருக்கும் ஜனாதிபதி ஒழுக்கத்தினை கற்றுக்கொடுக்க வேண்டும்.

மே 18 இனை தமிழ்த் தேசிய முன்னணி இன அழிப்பு நாளாகவும் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கறுப்பு தினமாகவும் பிரகடனப்படுத்தியுள்ளது. ஆகவே இதில் கட்சி பேதமன்றி அனைவரும் ஒருமித்துச் செயற்படுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-4,6)

## முள்ளிவாய்க்...

அல்லது தந்தையர் அல்லது இருவரையும் இழந்த கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பை, சீருடைகள், காலணி (சப்பாத்து) மற்றும் அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வொன்று நேற்று காலை முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியில் ரவிகரனால் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

மேற்படி நிகழ்வு தொடங்கும் முன்னர் மக்கள் செறிவை அவதானித்த இரு புலனாய்வாளர்கள் அங்கு ரவிகரனின் பிரவேசத்தையும் அவதானித்து, வாகனங்க ளையும் மக்களையும் படம் பிடிக்க தொடங்கியதுடன் தொலைபேசி மூலம் தகவல்களையும் வழங்க தொடங்கினர்.

இந்நிலையில், நிகழ்வை ஆரம்பிக்க எத்தனிக்கையில் உந்துருளிகளில் வருகை தந்த இராணுவத்தினர் ரவிகரனை அழைத்து விசாரிக்க தொடங்கினர். அவர்களுக்கு பதிலளித்து விட்டு நிகழ்வை ஆரம்பித்துள்ளார்.

இதன்போது எந்த நிகழ்வையும் நடத்த 3 நாட்களுக்கு இங்கு அனுமதி இல்லை என்று கூறி இராணுவத்தினர் நிகழ்வைத் தடுக்க முயன்றனர். எனினும் அதை முற்றாக எதிர்த்தவாறு நிகழ்வை ஆரம்பித்தார் ரவிகரன்.

இதையடுத்து யுத்தத்தில் கொல்லப்பட்ட தமிழ் மக்களுக்கும் தமிழர இறையாண்மையை காக்க வென களமாடிய மாவீரர்களுக்குமாக மக்களும் அக வணக்கம் செலுத்தினர்.

இதனை தொடர்ந்து நிகழ்வின் ஆரம்ப உரையை வழங்கிக் கொண்டிருக்கையில், வாகனங்களில் வந்திறங்கிய இருபதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் அங்கே கூடியிருந்த கூட்டத்தை இடைமறித்து ரவிகரனை அழைத்தனர்.

நீங்கள் செய்யும் எந்நிகழ்வாயினும் இந்த தினங்களுக்குள் செய்ய வேண்டாம். இவ்வாறான நிகழ்வுகள் எதுவும் இடம்பெறாமல் இங்கு இருப்பதை நாம் உறுதிப்படுத்த வேண்டும் என்று கூறியிருக்கின்றனர்.

இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட மக்களது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு மேற்படி நிகழ்வு அவசியம். அத்துடன் நாம் இங்கு இழந்தது எங்களது மக்கள். எங்கள் உறவுகள் ஆகவே அகவணக்கம் செலுத்துவதே நாகரிக மரபாகிறது. அவர்களைநினைவுகூரும் உரிமையை நீங்கள் மறுக்க முடியாது.

யுத்த வெற்றி என்று ஆங்காங்கே ஒரு இனம் கொண்டாடும் போது இங்கு நாம் எதுவும் செய்யக்கூடாது என்று எவ்வகையில் சொல்லலாம். இங்கு நாம் செய்வது எமது சமூகத்தை யுத்தத்தின் பாதிப்பிலிருந்து மீட்டெடுக்கும் செயன்முறை என்று கடும் தொனியில் கேட்டார்.

இவ்வாறிருக்கையில், இராணுவத்தினருடன் வாக்குவாதப்பட்ட பின்னர், தனது உரையினை நிகழ்த்தியுள்ளார்.

எமக்கேற்பட்ட இழப்புகளை தாண்டி எம் சமூகம் எழுச்சியுற தமிழ சமூகத்தின் கல்வி வளர்ச்சியும் முக்கிய பங்காகிறது. பெற்றோர் பாதுகாவலர் என்ற வகையில் பிள்ளைகளின்கல்வி வளர்ச்சியை உறுதி செய்ய வேண்டியது உங்களது கடமை.

இழப்புக்களை தாண்டி எழுச்சியுறு சமூகத்தை கட்டியெழுப்ப இந்நாட்களில் உறுதி காண்போம் என்ற விதத்தில் தனது உரையை நிகழ்த்தியதோடு, மாணவர்களுக்கும் மாணவர்களை பிரதிநிதித்துவப்படுத்திய பெற்றோருக்கும் குறித்த பொருட்களை வழங்கினார்.

நிகழ்வின் இறுதியில் அவ்விடத்திற்கு வருகை தந்த வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் துணைத் தவிசாளர் எஸ். சஜீபனும் நிகழ்வில் இணைந்து பொருட்களை வழங்கி நிகழ்வை நிறைவு செய்தார்.(செ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை

உங்களுக்கு (தனியார்) துறைமுகம் விமான நிலையத்தில் வேலை செய்ய விருப்பமா? நீங்கள் 18-45 வயதை உடையவராயின் கப்பல் புனர் நிர்மாணப் பிரிவில் சாதாரண ஊழியர்கள், வெல்டர், தச்சு, விமான நிலையத்தில் சுத்திகரிப்பாளர் கேட்ரிங், லொன்றி சம்பளம் முதல் மாதம் 18000/-, 25000/- 02 ம் 03 ம் மாதம் 28000/-, 38000/- + வரை பெறலாம். உணவு + தங்குமிடம் குறைந்த விலைகளில் செய்து தரப்படும்.

தொடர்புக்கு :- 077 683 8231 / 077 556 1883 (C-7390)

# WORLD EDUCATION FAIR 2014



FREE ENTRY

SATURDAY 31st MAY @ HILTON HOTEL COLOMBO From 11.00 a.m - 5.00 p.m

ORGANIZED BY CDUK Campus Direct UK Your Trusted Partner in Education

OEC OVERSEAS EDUCATION CENTRE (PVT) LTD.

Meet representatives from leading universities in the UK, Australia, New Zealand, Malaysia and Canada. Your chance to get ***SCHOLARSHIPS, SPOT OFFERS*** and ***FREE VISA GUIDANCE***

Aberystwyth University, Anglia Ruskin University, UEL London UK, University of Bedfordshire, University of Bolton, London South Bank University, navitas, New Zealand Tertiary College, Java Institute, Nottingham Trent University, Ntec, northumbria University, University of Portsmouth, Richmond University, UWE Bristol University of the West of England

WE REPRESENT MORE THAN 200 UNIVERSITIES

**REGISTER NOW AND STAND A CHANCE TO WIN GRAND PRIZES!**

ADVANCE ENTRY FOR STUDENTS WITH CIM, CIMA, ABE, NCC, BCS, HND, ACCA AND OTHER RECOGNISED QUALIFICATIONS PLEASE VISIT THE FAIR WITH YOUR ORIGINAL CERTIFICATES AND A SET OF PHOTOCOPIES

*Log on to www.oecsl.lk or Scan Here*

Call us on: 077 824 6666 072 222 3522

MEDIA PARTNERS KISS 96.9 SUNDAY OBSERVER

(C-7383)

NORTH LEAD Computer & Accessories Wholesaler, Computer Repairing & Services
Computer & Language Classes, Computer Printing & Designing

ALL LAPTOPS, DESKTOP REPAIRS ONE DAY SERVICE

QUICK REPAIR & SERVICE — QUICK PICK-UP AND DELEVERY

Laptop & Desktop Accessories Available



LED, LCD TV & Monitor, Printer, UPS, Subwoofer etc..

கணனிகளின் அனைத்து உதிரிப்பாகங்களையும் குறைந்த விலையில் கூடிய உத்தரவாதத்துடன் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விஷேட விலைக்கழிவில்)

No: 328, Stanley Road, Jaffna. (Near to Ariyakula.. Junction) Tel: 021-222 4459, 0774192275

(C-7381)

Branch: No:12, Kanagapuram Road, Kilinochchi (Near to Barathi Hotel) Tel/Fax: 021-206 0909, 0772533390

# Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - **Deutsch** (டொச்) மற்றும் நெதர்லாந்து - **Dutch** (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.

- French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

**Vivekananda Academy** அனைத்து புதிய வகுப்புகளும் திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். *(Gov. Reg.No: W/A 76795)*

Tel: 0213216928, 0774842464 ,0212220393

(C-7377)

# ALLIANCE FRANÇAISE DE JAFFNA

THE ONLY OFFICIAL FRENCH LANGUAGE & CULTURAL CENTRE

FRENCH மொழியை FRENCH முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி — af Alliance Française de Jaffna

- கற்பதற்கு FRENCH அரசாங்கம் அங்கிகரிக்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 136 நாடுகளில் 1040+ (இலங்கையில் கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழில் 1976 முதல்) கிளைநிறுவனங்களுடன் சர்வதேச வலையமைப்பை கொண்டு **FRENCH EMBASSY** இன் கீழ் இயங்குகின்றது.
- எமது உயர் தகைமையுடைய பல ஆசிரியர்கள் மாணவர்களின் பேச்சு ஆற்றலை விரைவாக உறுதிப்படுத்துகிறார்கள்.
- வருடம்தோறும் நூற்றுக்கணக்கானோர் (வடமராட்சி, வன்னி, மன்னாரைச் சேர்ந்தவர்களும்) AF இல் படித்தே பிரான்ஸ் செல்கிறார்கள்.
- **Certificates & International Diplomas(DELF A1,A2)**
- திருமணம் மூலம் France, Canada, Switzerland, Belgium... செல்வோர் மற்றும் French கற்கவிரும்புவோர் விரையுங்கள்

இன்றே பதிவுசெய்யுங்கள்... புதிய வகுப்புகள் மிக விரைவில்...

வடமாகாணத்தில் ஒரே முகவரி தான்...

61, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் **021 222 8093.**

குறிப்பு: இவ்வீதியில் புகையிரத பாதையை அடுத்துள்ள சந்தியில்

(6369)

# வேலை வாய்ப்பு

கட்டிட நிர்மாணத் துறையில்பலவெற்றிடம்மேசன்/தச்சு/பெயின்டர்/வெல்டர் / இலக்ரீசன் / செடலிங் பாஸ் / கம்பி பாஸ் (1200/-, 1500/-) கை உதவியாளர் (900/-, 1100 /-) (யாழ் / கொழும்பு/களனி/கண்டி / தெஹிவளை) பிரதேசங்களில் வேலை வாய்ப்பு. தங்குமிடம் வழங்கப்படும்.

தொடர்பு :- 077 683 8231 (C7389)

# விடுதலைப் பெருவிழா

வாருங்கள்... இலவசம்...!

கவலை, கண்ணீர்,
தீராத வியாதி,
பிசாசின்பிடி, வியாபாரத் தோல்விகள்
பில்லி-சூனியக்கட்டு, பாவங்கள்,
பரம்பரை சாபங்கள்,
அடிமைத்தனம் ஆகியவற்றிலிருந்து

## இயேசு விடுதலை கொடுக்கிறார்!!!

இடம்: மன்னார் விளையாட்டரங்கு, மன்னார்.

காலம் : 16,17,18 வைகாசி 2014

நேரம் : தினமும் மாலை 5.30மணி

"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்."
(மத்தேயு 11:28)

இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை,
தலைமன்னார் வீதி, பெரியகமம், மன்னார்.

(6368)

## மோடி...

வாகனத் தொடரணி சென்ற வழியெங்கும் மிகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதனையடுத்து இடம்பெற்ற பாரதிய ஜனதாக் கட்சியின் நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் நரேந்திர மோடிக்கு அக்கட்சியின் மூத்த தலைவர்கள் அத்வானி, சுஷ்மா சுவராஜ் நிதின்கட்காரி உள்ளிட்டோர் வாழ்த்துத் தெரிவித்தனர்.

இக்கூட்டத்துக்குப் பின் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் ராஜ்நாத் சிங், நரேந்திர மோடி மேற் கொண்ட தீவிர பரப்புரைகளுக்கு கூடட்டத்தில் நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

இந்தியா சுதந்தரமடைந்த பின்னர் எந்த ஒரு கட்சியும் காங்கிரஸை [illegible]த்து இத்தகைய பெரும்பான்மைப் பலத்தை பெற்றதில்லை.

எதிர்வரும் 20 ஆம் திகதி இடம்பெறவுள்ள பாரதிய ஜனதா கட்சியின்புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் நரேந்திர மோடி பிரதமராக அதிகாரபூர்வமாக தெரிவு செய்யப்படுவார். இதன்போது அவர் எப்போது பிரதமராக பதவியேற்பார் என்பது தொடர்பில் முடிவு செய்யப்படும்.

அதேவேளை, குஜராத் மாநிலத்தின் புதிய முதலமைச்சர் அமமாநில சட்ட மன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் தெரிவு செய்யப்படுவார். அதே போன்று சீமாந்திரா, தெலுங்கானா, ஒடிஷா மாநில சட்டசபைகளில் கட்சித் தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான மேலிடப் பிரதிநிதிகளும் அறிவிக்கப்பட்டுள்ளனர்எனமேலும் தெரிவித்தார்.

இதன்பின்னர்கருத்துத் தெரிவித்த நரேந்திர மோடி, நாட்டு மக்களுக்கும் ஊடக நண்பர்களுக்கும், நன்றி தெரிவித்தார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.